பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

செப்டெம்பர் 2025



## மருத்துவ உலகில் ஒரு தமிழ் மாமணி

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – செப்டெம்பர் 2025

645

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுரி ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்கு எனதன்பின் வணக்கம்!

எல்லோரும் நலந்தானே? தமிழ்நெஞ்சத்தின் புதிய இதழில், நெஞ்சோடு நெஞ்சமாக முகிழ்ப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

உலக எழுத்தறிவு தினமானது செப்டெம்பர் 8 ஆம் திகதியாகும். இதைப் பற்றி பலமுறை பேசியிருந்தாலும், முடிவிலியாக இன்னும் பேசலாம். உலக எழுத்தறிவு என்பது கல்வி வளர்ச்சியாகும். இதில் நிறைவு காண்ப தானது, எமது முன்னேற்றத்தைக் குறிக்கும் ஒரு குறியீடாகத் திகழ்கிறதென்றால் மிகையாகாது. ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வலிமைக்கும் முதுகெலும்பாக இருந்து வழிநடத்துவது எழுத்தறிவாகும். ஒரு மனிதன் பண்படவும், பண்பாட்டில் சிறந்து விளங்கவும் இது இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இன்று நம் எல்லோரையும் இணைக்கும் மையப்புள்ளியும் இதுவேயாகும். இலக்கியம் சார் அனைத்திலும் முன்னணி வகிப்பதும் இந்த எழுத்தறிவு தான். ஏனைய துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி, முன்னேறி வருவதும் அனைவரும் அறிந்ததே! நாளைய தலைமுறைக்கு, பண்பாட்டு விழுமியங்களை கடத்த பேருதவி புரிவதும் எழுத்தறிவாகவே இருப்பதனால், அவர்களுக்கு கல்வி யறிவை ஊட்டுவது நமது தலையாய கடமையாகும்.

உங்களுக்காகவே பல இரசனையான படைப்புகளை இதழில் சேர்த்துள்ளோம். வாசித்துப் பயன்பெறுவதுடன், உங்கள் பெறுமதிமிக்க கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள்!

வாழ்க வளத்துடன்!

நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

சம்பாஷனை வெண்பா

# துக்கம்தான் என்ன

அமின் : -

.

என்னடா தம்பீநீ

ஏதோ பறிகொடுத்துக்

கன்னத்தில் கைவச்சிக்

காத்திருக்க - உன்னோட

துக்கம்தான் என்ன

துடைக்க வழிசொல்வேன்

பக்கத்தில் வந்து

பகர்.

.

ஏடி : -

.

ஒண்ணுமில்ல ஐயா

ஒருவருச காலமா

எண்ணிவச்சக் காசில்

எதையெதையோ - பண்ணிவச்சி

நட்டத்தில் நெஞ்சொடஞ்சி

நானிருக்கேன் முன்னேற்றம்

எட்டுவேனா மாட்டேனா

என்று.

.

அமின் : -

.

அதுக்காக இப்படி

ஆளொடஞ்சிக் குந்தி

எதுக்குக் கவலையில

ஏங்கி - ஒதுங்கிருக்க

எல்லாம் சரியாக

ஏதோ வழியிருந்தா

சொல்லுடா சொல்லுடா

சொல்.

ஏடி : -

.

பொன்ன அடகுவச்சிப்

போய்ப்பணத்த வாங்கிவந்து

இன்னும் கடனுதவி

யாராச்சும் - பண்ணிட்டா

வேற்றுவழி இல்ல

வெளிநாடு போகலான்னு

நேற்றுமுதல் யோசிச்சேன்

நான்.

.

அமின் : -

.

வெளிநாடு போறியா

வேணாம்டா தம்பீ

துளியும் பயனின்றித்

துக்கம் - அளித்துவிடும்

சொன்னதக் கேட்டா

சொகம்பெறுவாய் இல்லைன்னா

என்னமோ பண்ணிட்(டு)

இரு.

.

ஏடி : -

.

போகாம இங்க

பொலம்பி அழுவதன்றி

ஆகாதே ஒன்றும்

அவனியில் - சாகாம

எப்பவுமே துக்கத்தில்

யானிருந்து யானிருந்து

இப்படியே சாகுறதா

இங்கு?

# துடைக்க வழிசொல்வேன்

அமின் : -

.

ஏன்டா மனசொடஞ்சி
　　இப்படில்லாம் பேசுற
நான்சொல்வேன் ஓர்வழியை
　　நல்லதே - தான்நடக்கும்
அங்கெல்லாம் போனா
　　அவஸ்தை அதனால்தான்
இங்கிருன்னு சொல்லவந்தேன்
　　யான்.

.

ஏடி : -

.

எந்த வழியும்
　　எனக்கு தெரியலையே
இந்தவழி விட்டாக்க
　　என்னசெய்வேன் - சொந்தபந்தம்
யாரும் உதவலையே
　　என்னான்னு கேக்கலையே
ஊருவிட்டுப் போனா
　　உயர்வு.

.

அமின் : -

.

போவது தப்பில்ல
　　போபோ அதனால
ஆவதென்ன இங்கே
　　அதச்சொல்லு - யாவருக்கும்
சிக்கல் வரும்தான்
　　சிரமத்தப் போக்கணும்ன்னா
உக்காந்து யோசி
　　உடன்.

ஏடி : -

.

நல்லாவே யோசிச்சேன்
　　நாடுவிட்டுப் போறதன்றி
இல்லையே ஓர்வழியும்
　　எம்மனசில் - தொல்லையெல்லாம்
விட்டொழிஞ்சி போகணுன்னா
　　வேறவழி சொல்லுங்க
சட்டுன்னு சொன்னா
　　சரி.

.

அமின்: -

.

வேண்டான்னு சொல்லலடா
　　வேறநாடு போனாக்கக்
கூண்டோட உந்தன்
　　குடும்பத்தத் - தாண்டிபோய்த்
தன்னந் தனியா
　　தவிப்புல வாழுவியா
என்னடா தம்பீ
　　இது.

.

ஏடி : -

.

எந்த வழியும்
　　எனக்குத் தெரியலையே
இந்த வழிதான்
　　இருக்குது - வந்திருக்கும்
உங்களிடம் கேட்டால்
　　உடனே குழப்பிவிட்டு
தங்கவைக்கப் பாக்குறீங்க
　　தான்.

# யாரும் உதவலையே

அமின் : -

.

போகணு மின்னாப்
பொயிட்டுவா எப்படியோ
ஆகுறது ஆகட்டும்
ஆனாலும் - போகுறது
நல்ல இடம்தானா
நல்லதொரு சம்பளமா
இல்லைன்னா போகா
திரு.

.

ஏடி : -

.

எள்ளளவும் கல்வி
எனக்கில்லை ஆகையினால்
அள்ளிவரல் ஆகாது
சில்லறையை - நல்லதா
ஏதாச்சும் கூலிவேலை
எங்கோ கிடைச்சாக்க
ஆதாயம் பார்ப்பேன்
அதில்.

அமின் : -

.

கூலிவேல செஞ்சிக்
குடும்பத்தக் காப்பாத்த
தாலி அடகுவச்சாத்
தாங்குமா - ஏலேய்நீ
லூசுமாறி பேசி
உளறாதே கொஞ்சமாச்சும்
யோசனை பண்ணி
இறங்கு.

.

ஏடி : -

.

பேசாம போயிருப்பேன்
பேசிக் குழப்பிவிட்டு
ஏசாம ஏசியென்ன
ஏய்குறீங்க - ராசாவே
என்னதான் பண்ணணும்
ஏதுதான் பண்ணணும்ன்னு
சொன்னாத் தெளியுறேன்
சொல்.



# என்னான்னு கேக்கலையே

அமின் : -

.

முன்பணத்த நல்ல
முதலீடா போடலாமே
சின்னக் கடைவச்சி
சேக்கலாமே - என்னடா.....
அங்கயிங்க போயி
அவஸ்தை படாமலே
இங்கவழிப் பாரேன்
இதுக்கு.?

.

ஏடி : -

.

திட்டமெல்லாம் போட்டுத்
திரட்டும் பணம்முழுக்க
நட்டமாகிப் போனா
நலிஞ்சிடுவேன் - எட்டிப்போய்
மேல்நாட்டில் வேலபாத்தா
மிச்சப் படுத்தலாம்
கால்காசு மிஞ்சாதா
கைக்கு?

அமின் : -

.

அந்தசிறு லாபத்த
அங்கயிங்க போகாம
இந்தவூருக் குள்ளே
எடுக்கலாமே - எந்தவூரும்
சொந்தவூர் ஆகுமா
சொல்லுடா தம்பீஉன்
சொந்தபந்தம் நிற்கும்
சுமந்து.


.

ஏடி : -

.

அந்தநாடு நான்போய்
அரும்பணத்தைத் தேடுவதை
இந்த அமின்தான்
இடைமறித்தார் - செந்தமிழில்
எல்லாமும் வாசித்த
என்னருமை வாசகாநான்
செல்லவா வேண்டாமா
செப்பு?





# ஒளி பேசும் மொழி

நெல்லை க. சோமசுந்தரி

கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்

சென்னை, தமிழ்நாடு

30

ஆதி அந்தமற்று தீப ஒளியாய் சுடரும் அண்ணாமலையாரின் ஆலயத்தின் உட்பகுதியானது ஆறு பிரகாரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஐந்து பிரகாரங்கள் கோயில் மதிற் சுவரின் உட்புறமும், ஆறாவது பிரகாரம் அதன் வெளிப்புறமும் அமைந்திருக்கும் திருச்சுற்று வீதியாகும். இதன் உட்புறத்தில் அமைந்துள்ள ஐந்து பிரகாரங்களிலும், பல சிறிய கோயில் மண்டபங்களைக் கொண்டு தெய்வங்கள் தனிச் சன்னதியாக அமைக்கப்பட்டுள்ளன. அவ்வழியே, இராஜகோபுரம் நுழைவாயிலுக்கு இடது புறம் கம்பத்து இளையானார் சன்னதி யானது அமைக்கப்பட்டுள்ளது. பிரபுட தேவராயரின் அரசவையில் புலவனாக இருந்த சம்பத்தாண்டானுடனான போட் டியில் அருணகிரிநாதர் வென்று வாகை சூட, அவருக்கு முருகப்பெருமான் கம்பத்தைப் பிளந்து காட்சி கொடுத்த காரணத்தினால் இச்சன்னதி இப்பெயர் பெற்றது.

இந்த சன்னதியின் தூண்களானது அழகிய கலைநயத்துடன் எழுப்பப்பட்டுள் ளது மட்டுமின்றி அத்தூண்களில் மிகச்சிறிய அளவிலான சிற்பங்கள் மிக நேர்த்தியாகத் தூண்களைச் சுற்றிச் செதுக்கப்பட்டுள்ளது. சன்னதியின் மேற்புறம் அமைக்கப்பட் டுள்ள மாடங்களில் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளின் சுதைச் சிற்பக் காட்சி கள் அழகாக வடிவமைக்கப் பட்டுள்ளன. இதேபோன்று மற்றொரு தனிச் சன்னதி யாக, கோபுரத்து இளையானர் சன்னதி யானது, அருணகிரியார் இளமையில் உலக சுக போகங்களில் சிக்கிச் சீரழிந்து தீரா நோயால் அவதியுற்று உறவினரால் கைவிடப்பட்டு, இறுதியில் திருவண்ணாமலைக் கோபுரத்து உச்சியிலிருந்து உயிர் துறக்கக் கீழே விழுந்தார். அப்போது முருகப்பெருமான் அருணகிரி நாதரைத் தாங்கி அருள்



புரிந்ததாகக் கூறும் இடத்தில் இச்சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு முருகன் நின்ற நிலையில் தேவியர் இருவருடனும் காட்சியளிக்கின்றார். மேலும் முருகப் பெருமானுக்கு நேர் எதிராகக் கீழே நின்ற நிலையில், மயிலின் சிலையானது, அவரை வணங்குவது போன்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சன்னதியின் தூண்களைச் சுற்றிலும் பல வகையான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. அதனோடு அருணகிரிநாதர் அருளிய 'திருவெழு கூற்றிருக்கை இலக்கியம்' கற்பலகைகளில் 'தேர் வடிவில்' இங்கு செதுக்கி பதிக்கப்பட்டுள்ளது.

அண்ணாமலையார் ஆலயத்தில், எட்டு பைரவர்களில் ஒருவரான காலபைரவர் தனிச் சன்னதியானது, வல்லாள மகாராசன் கோபுரத்தில் தென்சுவரை ஒட்டியவாறு நான்காம் திருச்சுற்றில் பிரம்ம தீர்த்தத்தின் எதிரில் எழுப்பப்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள கால பைரவர் சிலை யானது எட்டு கரங்களுடன் நின்ற நிலையில் உடுக்கை, கத்தி கபாலம், கேடயம், மணி (கரத்திற்கு ஒன்றாக) ஆறு கரங்களிலும், மற்றும் சூலத்தினை இரு கரங்களிலும் ஏந்தியவாறு செதுக்கப்பட்டுள்ளது. காலபைரவர் தன் கரங்களில் பயங்கர ஆயுதங்களை ஏந்தியிருப்பினும் அவரது முகமானது சாந்த சொரூபமாகக்



காட்சியளிக்கிறது. அவரது தலையில் அணிந்துள்ள கிரீடம் மற்றும் கழுத்தில் அணிந்துள்ள மாலை அணிகலன்கள் மிக நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. மேலும் முழங்கையின் மேற்பகுதியில் அணிந்துள்ள அணிகலன்களும், மார்பின் மையப் பகுதியில் வளைந்து செல்லும் பூணூலும் மிகவும் நேர்த்தியாய் அதிக சிரத்தை எடுத்து ஒவ்வொரு பாகமும் அதன் தனித்துவத்தை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தும் வகையில் சிற்பமானது செதுக்கப்பட்டுள்ளது.

இச் சிலையின் காலில் அமைப்பானது, நடுகல் வடிவில் காணப்படுகிறது. இவ்வளவு நேர்த்தியான சிலையினைச் சுற்றி பின்புறமாக ஒரு ஒளிவட்டமானது கல்லினாலேயே செதுக்கப்பட்டுள்ளது. அது பல வகையான அழகிய வேலைபாடுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கல்லினால் உருவாக்கப்பட்டிருக்கும் வட்டமானது, நாம் கணித வடிவியலில் திசைக்காட்டி (காம்பஸ்) கொண்டு ஒரு வட்டத்தினை அளவெடுத்து வரைந்தது போன்று எந்தவித சிறு பிழையுமின்றி மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. சிலையின் தலைப் பகுதியில் தீப்பிழம்பு போன்ற ஒளி வட்டம் துலங்க காலபைரவரின் உருவத்தைப் பார்க்கும் பொழுது மிகவும் அற்புதமாகச் சிற்பியின் கைவண்ணம் நம் கண்களில் காட்சியாக விழுகிறது. மேலும் கால பைரவரின் வெவ்வேறு வடிவங்களின் சிலைகள் பிரகாரத்தின் மேற்பகுதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சன்னதியில் உள்ள சிறு மண்டபத்தின் மேல் விதானத்தில் சிவபெருமானின் புராணக் கதைகளை மையமாகக் கொண்ட ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவை சன்னதியின் அழகுக்கு மேலும் அழகூட்டு கிறது.

இவ்வாலயத்தில் உள்ள கல்யாண சுந்தரேஸ்வரர் சன்னதியானது, வல்லாள மகாராஜா கோபுரத்தின் தென் திசையில் இருபத்தினான்கு தூண்களுடன்



அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடக் கலையில் தூண்களின் மேல் அமைந்த, மேற்பகுதியின் சுமையைத் தாங்கும் போதி கைகள் இச்சன்னதியின் தூணில் காணப்படவில்லை என்பது இக்கட்டிடக் கலையில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும், இச்சன்னதியின் முதன்மை யானவராகக் கல்யாண சுந்தரேஸ்வரர் இலிங்க உருவமாகக் காட்சி அளிக்கும்படி உருவாக்கப்பட்டுள்ளது அதனோடு நாகர், நாக கன்னியர், மேற்கு நோக்கிய நிலையில் துர்கா போன்ற தெய்வங்களும் எழில் மிகு காட்சியாக விளங்குகிறது.



அண்ணாமலையார் ஆலயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நந்தீஸ்வரர் சிலைகள் உள்ள போதிலும் ருத்ராட்ச மண்டபத்தின் மேற்கில் அமைக்கப்பட்ட நந்தியானது, இவ்வாலயத்தில் அமைந்துள்ள அனைத்து நந்திகளைக் காட்டிலும் மிகவும் பெரியது. இந்தப் பெரிய நந்தியானது வல்லாள மகாராசனால் கட்டப்பட்டது. மேலும், நந்தியானது நான்கு தூண்களைக் கொண்ட மண்டபத்தினுள் ஆறடி நீளத்திற்குப் படுத்து, அமர்ந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் நான்கு தூண்களிலும் கலை நயத்துடன் கூடிய சிற்பங்களும் முன் பகுதியில் உள்ள தூணில் காளையினைக் கட்டி வைக்கப் பயன்படுத்தும் சங்கிலி வளையங்களானது தொங்கும் நிலையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும், இது சிறிய வடிவிலான சிற்பங்கள் மற்றும் கலை நுணுக்க வடிவமைப்புகளையும் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது.

நந்தீஸ்வரனின் கழுத்தில் மணியினைக் கோர்த்த மாலையானது மாட்டப் பட்டுள்ளது. ஒவ்வொரு மணியும் ஒத்தளவில் செதுக்கப்பட்டுள்ளது. அம்மாலையின் முடிவில் நந்தினுடைய கழுத்தின் கீழ்புறத்தில் பெரிய மாவிலை போன்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ள மணியானது அம்மாலையின் அழகுக்கு அழகு சேர்க்கிறது. இம்மாலையினை ஒத்த, அதனை விடச் சற்று சிறிய மணிகளைக் கொண்டு மேலும் ஒரு மணி மாலையானது உலோகத்தால் செய்து அணிவித்திருப்பதைப் போன்று செதுக்கப்பட்டுள்ளது. நந்தீஸ்வரரின் மேற்புறத்தில் அழகுக் கலைகளுடன், பூ வேலைப்பாட்டுடன் கூடிய வகையில் போர்த்தப்பட்ட ஆடையினை ஒத்து சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி நந்தியின் செவி மடல்கள் இரண்டும் விரைப்பாக நிறுத்தப்பட்டு வடிக்கப்பட்டுள்ளது. அவ்வழியே அவற்றின் கண்கள் இரண்டும் நம்மை உற்றுப்பார்ப்பது போன்றும், அதன் நாவின் நுனியானது வெளியே வந்து நந்தியின் இரண்டு மூக்கு துவாரங்களைத் தொடுவது போன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வனைத்தும் சேர்ந்து கல்லில் செதுக்கப் பட்ட காளைக்கு உயிர் கொடுத்து மிகப்பெரிய காளை ஒன்று மண்ட பத்தில் வந்து அமர்ந்திருப்பது போன்று கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இப்படிப் பட்ட நந்தீஸ்வரருக்கு பிரதோஷ நாட்களில் சிறப்பு அபிஷேகங்களுடன் பூஜைகளும் நடத்தப்படுகின்றன,

அண்ணாமலையாரின் ஆலயத்தில் அமைந்துள்ள பல சன்னதிகளின் சிறப்பு களை பற்றி உளியானது உங்களுடன் பேசியது, மேலும் பல கலைத்திறன் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள மண்ட பங்கள் மற்றும் இத்திருக்கோயிலின் அதிசயங்களையும் அறிந்து கொள்ள உளியின் மொழியோடு தொடர்ந்து பயணியுங்கள்,

***(உளியின் மொழி தொடரும்)***

# பேரன்பு மிகுதியால்...

உனக்கான என் நேசமும்
எனக்கான உன் நேசமும்
முகமன் கூறிக்கெண்டதில்லை
அறிமுகமானவையெனக்கூட
அவை அறிந்ததில்லை

உனக்குப் பிடித்தவையும்
எனக்குப் பிடித்தவையும்
மோதிக் கொள்கின்றன
பேரன்பு மிகுதியால்

நாமோ மௌனித்து
அதலபாளத்தின் வேர்களில்
தனித்தனியாக
தொங்கிக் கொண்டிருக்கிறோம்

அமைதியான பயணத்தில்
பெருநேசம் விரவிய தெருக்களில்
தனித்தனியாக பதாகைகள்
ஏந்தத் தவறுவதில்லை நாம்

அப்பதாதைகள் அப்பாவித்தனமாக
இன்னொருவருடையதாகச்
சொல்லப்படுவது
எத்துணைப் பெரும்பொய்

பேராசைத்ததும்பி பொங்குவது
தவிர்த்துப் புறந்திரும்பி
பெருங்கேவல் அடக்கி
புன்னகைத்துக் கொண்டிருந்தோம்
முகமூடிகளைக் கழற்றி
வீசுவதற்கு எம்மில்
யாருக்குமே விருப்பமில்லை

பெருநேசப்பூக்கள் பூத்து
வியாபித்த நந்தவனங்களை
இருகரங்களால் மறைத்தபடி
இதயக்குறியீடுகளை மாறி மாறி
எறிந்து கொண்டோம்
பேசத்துடித்த பெருமாவலின்
வீச்சத்தில் வெறுமையை
உமிழ்ந்து நிரப்பினோம்

ஆனாலும் என்ன?
நீ
இருந்தாலும், பறந்தாலும்
இளைப்பாறினாலும்
இச்சை துறந்தாலும்
பெருவிருட்சமாகிப்
பேசாதிருக்கிறது,
கிளைவிரித்துக்
காத்திருக்கிறது,
என் பெருங்காதல்
நீ கைவிட்ட பின்னும்!!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை



# வின் தூறல்

மென்குளிர் வீசிட
மனங்குளிர்ந்து
கண்ணயர்ந்தேன்

காலைப்பனி
உசுப்பிவிட
சிலிர்த்தெழுந்து
சிகையலங்கரித்தேன்

மாவிலை உதிர்ந்து
சருகெல்லாம் ஒன்றாகி
பல சங்கதிகள் பேசிட
முன்புறமாய் தூற்றி
பின் புறத்தில் எரித்துவிட்டேன்

கருக்கட்டி
மழை பிரசவிக்கும் விண்ணை
கண் நிமிர்ந்தே பார்த்தவள்
நேற்று தொட்டு இன்று வரை

வீழவில்லை விண் தூறல்
சாயவில்லை இவள் விழிகள்

ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்
புல்மோட்டை



# ஹோட்டல்களில்... கவனமா இருங்க

பெரு சிறு நகர ஹோட்டல்களில் எப்படி எல்லாம் ஏமாற்று வேலை நடக்குதுன்னு பாருங்க ....

★ **இட்லி :** பொதுவாக இட்லி மெத்துனு இருக்கணும்னா, ஒரு டம்ளர் இட்லி அரிசிக்கு கால் டம்ளர் உளுந்து தேவை. இரண்டையும் தனித்தனியா ஊறவெச்சு, தனித் தனியாதான் அரைக்கணும்.. அஞ்சு மணி நேரம் புளிக்கவெச்சு, சுட்டெடுங்கன்னா பஞ்சு மாதிரி இட்லி தயார். ஆனா, என்ன நடக்குது இங்கே? கடை இட்லி அரிசி கால் பங்கு, ரேசன் அரிசி முக்கால் பங்கு, உளுந்து கால் பங்கு, ஜவ்வரிசி முக்கால் பங்கு, நைட்டு ஊறவெச்ச பழைய சாதம் கொஞ்சம், சோடா உப்பு எக்கச்சக்கமா... எல்லாத்தையும் அரைச்சு, மூணு மணி நேரம் வெயில்ல வெச்சுட்டு எடுத்து சுட்டால், கும்முன்னு குஷ்பு இட்லி தயார். அந்த இட்லியும் மீந்துருச்சின்னா, அப்பவும் பிரச்னை இல்லை. அடுத்த நாள் அரைக்கிற மாவுல மீந்துபோன இட்லியைப் போட்டு அரைச்சிடுவாங்க..

★ **சோறு :** தரமான சோறுன்னா, சோத்துப் பருக்கையை விரலில் வெச்சு மசிச்சா மை மாதிரி மசியணும். அப்பதான் அது வயித்துக்கு ஒண்ணும் செய்யாது. அப்படி இருந்தா கஸ்டமர்ஸ் நிறைய சாப்பிடுவாங்களே... அதுக்காகத்தான் பெரும் பாலான ஹோட்டல்ல முக்காப் பதத்துல சாதத்தை எடுத்துடுவாங்க. சாதம் பளிச்சுனு வெண்மையா இருக்கவும், லேட் ஆனாலும் காய்ஞ்சு போகாமல் இருக்கவும்



சாதம் வேகும்போதே சுண்ணாம்புக் கல்லைத் துணியில் கட்டி சாதத்தில் போட்டுடுவாங்க. அன்லிமிட்டட்னு அகலமா போர்டுல எழுதி இருந்தாலும், இந்தச் சோற்றைக் குறிப்பிட்ட அளவுக்கு மேல நீங்க சாப்பிடவே முடியாது..

★ **புரோட்டா :** பல ரோட்டுக் கடை ஹோட்டல்கள்லமைதாமாவோட சோடா உப்பு கலந்து, அதில் கழிவு டால்டாவை ஒரு பங்கு மாவுக்குக் கால் பங்கு டால்டா கணக்குல (ஹோட்டலுக்குன்னே விக்கிற மலிவு விலை டால்டா) கலந்து அடிச்சு அரை மணி நேரத்துல புரோட்டா சுடுவாங்க. புரோட்டா சும்மா பூ கணக்கா பொலபொலன்னு உதிரும். ஆனா, அத்தனையும் போங்கு புரோட்டா..

★ **சால்னா :** சிக்கன் கடையில் பொதுவா நாம கொழுப்பு, ஈரல், குடல், தலை, தோல், இதெல்லாம் வாங்க மாட்டோம். அதேபோல மட்டன் கடையில குடலோட சேர்ந்து இருக்கிற ஒட்டுக்கொழுப்பு, ஒட்டுக்குடல் வாங்க மாட்டோம். இதை எல்லாம் தூக்கிப்போடாம ஓரமாக் குவிச்சு வெச்சிருப்பாங்க. பழக்கமான கடைக்காரரா இருந்தா விசாரிச்சுப் பாருங்க. ‘ஹோட்டல்காரங்க மொத்தமா வாங்கிட்டுப் போயிடுவாங்க’னு அவரும் யதார்த்தமா சொல்லிடுவார். அரைக் கிலோ கறியோட இதை எல்லாத்தையும் ஒட்டு மொத்தமாப் போட்டு தூக்கலா கறி மசாலா, மிளகாய்த் தூள், கொத்த மல்லித்தூள், கொஞ்சம் மரத்தூள் அல்லது குதிரை சாணத்தூள் கலந்து, அஞ்சு ஸ்பூன் அஜினாமோட்டா கலந்து கொதிக்க வெச்சா அரை அண்டா நிறைய திக்கான சால்னா ரெடி..

**ஒரு முக்கியமான எச்சரிக்கை....**

தலையே போனாலும் சரி, (ரோட்டுக்) கடைகள்ல தலைக்கறி மட்டும் சாப்பிடாதீங்க. பொதுவாகவே செம்மறி ஆட்டோட தலையில புழுக்கள் இருக்கும். இது இயற்கையான விஷயம்தான். வீடுகளுக்கு வாங்குறப்ப பெரும்பாலும் வெள்ளாட்டுத் தலை தான் வாங்குவோம். செம்மறி ஆட்டுத் தலை வாங்கினாலும் கடைக்காரரு நம்ம கண்ணுல படாம தலையைக் கொதிக்கிற தண்ணில போட்டுட்டு, அப்புறம் அதை எடுத்து தரையில தட்டோ தட்டுன்னு தட்டி புழுவை எல்லாத்தையும் கொட்டிட்டுதான் மேலேயே எடுத்து வைப்பாங்க. அதை வீட்டுக்கு வாங்கிட்டுப்போய் நல்லா சுத்தம் பண்ணி சாப்பிடுவோம். ஆனா, மொத்தமா ஹோட்டலுக்கு விக்கிறப்ப எல்லாம் செம்மறி ஆட்டுத் தலையை இப்படி சுத்தம் பண்ண மாட்டாங்க. அப்படியே கைமாதான்..

எல்லாத்தையும்விட முக்கியம், ஹோட்டல்களுக்கு சப்ளை செய்யறதுக்குனே பஜாரில் மளிகைப் பொருட்கள் குறைஞ்ச விலைக்கு கிடைக்குது. எல்லாமே கலப்படம். பாலீஷ் செய்யப்பட்ட இலவச ரேசன் அரிசியோட பொன்னி அரிசி கலந்து விக்கிறாங்க. உடைஞ்ச கழிவுப் பருப்பு, கேசரிப் பருப்பைத் துவரம் பருப்புடன் கலக்கிறாங்க. மிளகாய்த் தூள், கொத்தமல்லித் தூள், டீத்தூளோட மரத் தூள், குதிரை சாணத்தையும் கலக்கிறது எல்லாம் சகஜமப்பா. நெய், எண்ணெய் வகைகளோட பன்றி, மாட்டுக் கொழுப்பு, வனஸ்பதி மற்றும் நாள்பட்ட கழிவு எண்ணெயையும் கலப்பாங்க. சாதாரண மலிவான ஹோட்டல்களிலும் கையேந்தி பவன்களிலேயுமே இப்படின்னா டாஸ்மாக் பார் பத்திச் சொல்லவே வேணாம். அதிலும் குறிப்பா, சென்னை பேச்சுலர் பாய்ஸ் ரொம்பக் கவனமா இருக்கணும்...

**கிரிஷ்ணன் ஆறுமுகம்**

# சிறகுகள் சிறைபடுவதில்லை

எழுத்தாக்கம்:

**குயில்.மு.இரசியா பேகம்** தஞ்சை



### 14. சந்திரன்

காலையில் பனி காற்று சிலுசிலு வென்று வீச, அதி காலை 5 மணி இருட்டாக இருந்தது..

மார்கழி மாத அதிகாலை தஞ்சை தெருக் களில் வீட்டு வாசல் தோறும் மாக்கோலம் மின்னும், ஒன்றை யொன்று மிஞ்சும்,போட்டிப் போட்டுக் கொண்டு நெஞ்சை அள்ளும் .

சந்திரன் வீட்டை விட்டு வெளியே வாக்கிங் போக வெளியே வருகிறான்.

தெருவில் வாசல் தெளித்து பாஞ்சாலி கோலம் போடுகிறாள்.

என்ன பாஞ்சாலி நலமா? இராசாங்கம் நலமா? என்கிறான்.

ஆமாம் தம்பி நீங்க நல்லா இருக்கீங்களா?

எப்போ வந்தீங்க?

நேற்று வந்தேன்...என்று சொன்னப்படி எதிர்த்த வீட்டை நோட்டமிட அது அமைதியாக இருந்தது...

சிறு ஏமாற்றத்துடன் சந்திரன் நகர்ந்தான்...

தெருவில் தூரத்து கோயில் மணி சத்தம்..

கிராம போனில் திருப்பாவை பாட...

ஆண்டாள் அதிகாலையில் மைத்துனன் நம்பி மதுசூதனை கனவுக் கண்டு கொண்டிருந்தாள்..

என் பாவை உறங்கிக் கொண்டு இருக்கிறாள்.. என்று பெருமூச்சு விட்டான்..



குயில்.மு.இரசியா பேகம்

எதிர்ப்பட்ட இளங்கோ ஏய் சந்திரா எப்போ வந்தாய்? என்றான்

நேற்று.. என்று ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

ஏய் சந்திரா படிப்பு எப்படி என்று பேசிக் கொண்டே வேக நடைப் போட்டார்கள்.

பேசிக் கொண்டே ஒரு மணி நேர நடைக்குப் பிறகு அரண்மணை தோட்டம் இலக்குமி குடிசைக்கு முன் கிடந்த கயிற்றுக் கட்டிலில் இருவரும் அமர்ந்தார்கள்.

இளங்கோ சந்திரனிடம் சேகர் வீட்டுக் கதையைச் சொல்ல ,உனக்கெப்படி இதெல்லாம்... என்று சந்திரன் கேட்க இந்திராணி சந்திப்பை இளங்கோ சொல்ல

சந்திரன் ஓ..அப்படி போகுதா கதை என்றபடி...

இலட்சுமி இங்கே வா என்றான்...

கூனிக் குறுகியபடி ஒரு ஒற்றைநாடி பெண் ஏங்க சாமி.. என்றாள்.

யாரது மாறன் என்றான்?

கோபால் அய்யா கார்வாரி என்றாள்..

அவனை அழைத்து வா ..என்றான்.

மாறன் ஓடி வந்தான் வணக்கம் அய்யா என்றான்.

ஏனிந்த வேண்டாத வேலை செய்கிறாய்?

அய்யா நானெதுவும் செய்யவில்லைங்க அய்யா.

சந்திரன் :

‘பொய் சொன்ன வாய்க்கு போசனம் கிடைக்காது என்பார்கள்.

நான் இப்போது விட்டேனா செவுலில் வாய் வெத்தலை பாக்குப் போட்டுக்கும். பின்னாலே கம்பி எண்ணும்..

எதுவேணும் சொல்?‘ என்றான்.

‘அரண்மனை தோட்டத்து அம்மா சேகரய்யாவை ரொம்ப நம்புறாங்க சாமி.

கோபாலய்யா ஒன்று விட்ட அண்ணந்தானுங்க அவுங்களை கண்டுக்கிறது இல்லீங்க..

அதனால கோபாலய்யா சொல்லித் தாங்க இதல்லாம்..

சாஷ்டாங்கமாக காலில் விழுந்தான்..

என்னை காப்பாத்துங்க அய்யா !

எல்லாம் இந்த ஒரு சாண் வயிறு படுத்தும் பாடுங்க..

நான் சொன்னது கோபாலய்யாவுக்கு தெரிந்தால் என்னை கொன்றுவிடுவாருங்க ‘அழுகிறான்.

சரி சரி இனியாவது ஒழுங்காக இரு..

இல்லைன்னா கம்பிதான்.



போ..போ..என்றான்.

பின்னர் இளங்கோ கொண்டுவந்த வடையை சுவைத்துக்கொண்டே இளங்கோ ‘உனக்கு ஒரு காதல் எனக்கு மட்டும் கண்ணில் கூட யாரும் தென்படவில்லை ‘என்று வருத்தப்பட

சந்திரா கயல் கோலம் போட்டுக் கொண்டிருந்ததே நீ பார்க்க வில்லையா?

என்ன? என்ற சந்திரனிடம்

‘ஆமாம் சந்திரா நான் பார்த்தேன்.

நீ தாண்டி போனபின் அவுங்க தெருவிற்கு வந்திருக்கிறார்கள்‘..

‘சரி வா வீட்டுக்கு அம்மா கையில் பலகாரம் சாப்பிடலாம்‘

இருவரும் வீடு திரும்பினார்கள்

எதிர்வீட்டு வாசலில் அழகிய கோலத்தில்..

‘நல்வரவு‘



என்ற வாசகம் மின்ன

இளங்கோ ஏய் சந்திரா... என்றான்..

சந்திரன் புன்னகைத்தான்..

## கயல்

கயல் கையால் ஒரு புடவை வெள்ளிக் கம்பிக் கொண்டு வேலைப்பாடு செய்துக் கொண்டிருந்தாள்.

கைவேலைகளில் கைத் தேர்ந்தவள் கயல்.

அழகிய வேலைப்பாடுகள் அவளின் தனித் திறமை.

சமையலிலும் சோடைப் போகவில்லை. அவள் கைப்பட்டது எல்லாம் துலங்கும்.

சந்திரன் கல்லூரிக்கு போய் முதல்வருட படிப்பு முடியப்போகிறது. எப்போது வருவார் பார்க்க முடியுமா? என்ற எண்ண வோட்டத்தில் கயல்.இது குளிர் விடுமுறை காலம் சந்திரன் வந்திருப்பார்.

அன்று மாடியில் துணி காய வைத்துக் கொண்டிருந்தாள் கயல். சந்திரன் குரல் கேட்க மாடியின் கைப்பிடி சுவரோரம் அமர்ந்து கொண்டாள் கயல்.ஜாலியின் துவாரம் வழியாக எதிர்த்த வீட்டைப் பார்க்க... வீட்டு வாசலில் நிறைய இளவட்டங்கள். எல்லாம் பேண்ட் சூட்டில். சந்திரன் கூடத்தான்... என்ன கம்பீரமாய். கயலுக்கு பெருமையாக இருந்தது.

ஒரு இளவட்டம் கேட்டார் கொடைக் கானல் சுமார் நாலுமணி நேரத்தில் அடைந்து விடுவோமா? என்று.4அல்லது 5 மணி நேரமாகும் என்று மற்றவரும் சொல்ல, சந்திரன் ஆங்கிலத்தில் ஏதோ சொல்லியபடி பெட்டி படுக்கைகளை டிக்கியை அடுக்கி கொண்டிருந்தார்.

கீழிருந்து கயல் என்ற அழைப்பு வர குனிந்தபடி கயலோடினாள்...

இது போதுமவளுக்கு....

அன்று மாலை இந்து கயலை பார்க்க வந்திருந்தாள்.

இருவரும் கிணற்றடி துறை கல்லில் அமர்ந்தவாறு பேசிக்கொண்டு இருந்தார் கள்...

இந்து அன்று சாக்கடையில் இரத்தம் இரத்தமென்று சத்தமாக கிடந்தது என்னவாயிற்று?

உங்க வீட்டிலிருந்து மாட்டு வண்டி வந்து எல்லோரையும் அங்கிருந்து அழைத்துக் கொண்டு போய்விட்டது.

நீங்கள் இருந்தால் பயந்துவிடுவீர்கள் என்றுதான்...

என்ன ஆச்சு இந்து சொல்லேன்..

சரி உனக்கு புவனாவை ஞாபகம் இருக்கா?

ஆமாம் குத்து விளக்கு மாதிரி அழகான பெண்.

ஆனால் ஏதோ பறிகொடுத்த மாதிரி இருந்தாள்

அவளுக்கென்ன?

அன்று மாமியாரும் மருமகளும் ஒரு திருமணத்திற்கு போயிருந்தார்கள்.

விருந்துண்ட பிறகு புவனா அம்மா எனக்கு தலை வலிக்கிறது வீட்டுக்கு போகிறேன் என்று வீடு திரும்பியவள்,

கத்தி எடுத்துக்கொண்டு பாத்துரூமில்

கழுத்தை அறுத்துக் கொண்டாள்...

போலீஸ் கேஸாகி ஒரே களேபரம் ..

அதிர்ந்துப் போன கயல் என்னடி சொல்கிறாய் என்றாள்.

**தொடரும்...**

# மாமனப் பாக்க மானுக்கு வெக்கமா

பெ.வெங்கட லட்சுமி காந்தன்
விருதுநகர்



ஆண்:
ரோசாப்பூ ரவிக்கைக்காரியே
என்னோட சொந்தக்காரியே

மாமன பாக்க
மானுக்கு வெக்கமா

பெண்:
அள்ளித்தான் விடாதீங்க
பவுசாத்தான் பேசாதீங்க

ஆணழகன் நீங்கதானோ
ஆர்ப்பாட்டம் பண்ணாதீங்க

ஆண்:
மெய்யாலும் சொல்லுறேனே
என்னத்தான் நம்பலியா

ஆசைதான் ஒம்மேல
அன்னக்கிளியே பக்கத்துலவா

பெண்:
வம்பளக்க வர்றீங்க
வக்கணையா பேசுறீங்க

வயசுப்பொண்ணத்தான் வளைச்சுப்
போட வந்ததென்ன

ஆண்:
பொய்யெல்லாம் சொல்லலியே
கோவம்தான் வேணாமே

என்னோட மனத்தான்
இன்னுமா புரிஞ்சிக்கல

பெண்
சும்மாத்தான் சீண்டிப்பாத்தேன்
மன்மதராசா நீங்கதானே

மேளம்கொட்டி தாலிகட்டு
ஒம்பின்னாடி நாவாரேன்



# மனசெல்லாம் ஒன் நெனவா

மனசெல்லாம் ஒன் நெனவா நானே
ராப்போது தூக்கமில்லே மானே
கனாவுல வந்து போறே வீணே
கண்ணெதிரே காட்சி எப்போ தேனே

கோலம் போடும் கோலத்தை நா பாக்க
ஆவலோடு ஓடி வந்தேன் வேர்க்க
காத்திருத்தேன் கண்ணுரெண்டும் பூக்க
மகராணி தரிசனமில்லே ஏங்க

ஆத்துப்பக்கம் தண்ணி மொள்ள வருவா
அங்கயாச்சும் பாத்துடலாம் மறவா
என்று எண்ணம் கொண்டிருந்தேன்  மெதுவா
அக்காமகளக் காணவில்ல பொதுவா

தேவதைக்கு தூது போ கிளியே
தேம்புகிறேன் மாமனிங்கு தனியே
வாங்கி வச்சேன் பவள முத்துமணியே
எனை வாக்கப்பட்டு வாரதெப்போ கனியே

**லீ லியாகத்அலி**

# முளை கருகும் காலம்

பசுமை கொழிக்கும் பள்ளிப் பருவம்
பக்குவம் மறந்த
பறவையின் விரியும்
சிறகுகளால்
மன வானில் சிறகடிக்கும்
சின்னப் பருவம்

அன்பின் அடையாளங்கள்
அவதானம் இழக்கும்
இளமையின் அத்திவாரம்
வலைப்பின்னும் நட்பின்
நந்தவனச் சோலையில்
தேனருந்தும் தெவிட்டாத காலம்

வார்த்தைகள் கோர்க்கும்
வசைகளும் பாடும்
வண்ணங்கள் பார்க்கும்
வடிவான காலம்

கனவுகள் சுமக்க காலடி வைத்து
கருத்துகள் கேட்க
ஆசானை அணுகும்
அறிமுகக் காலம்
அவர் சொல்லே உண்மை என்று
உறுதியாய் உரைக்கும்
உன்னதக் காலம்

பக்குவமில்லா பெற்றோர் வளர்ப்பில்
பலதையும் இழக்கும்
பரிதாபக் காலம்
பயில்வதில் பயனை
பராக்காக்கும் வழியில்
பிழையது பலதை மறைத்திடத்
துணியும் பெற்றோர்த்தன்மை
கொடிதிலும் கொடிது

என் பிள்ளை நல்லம் என்று
பலரின் முன்னே நாவாற
நனைத்தலில் நகரும்
வாழ்வு நாளைய சாபமே

இடம் பொருள் உணர்ந்து
முளைக்கும் விதையை
புதைத்திடல் அழகோ...
மறைக்கும் மண்ணை
விலக்கிட வழி தேடல்
வலிதிலும் வலிதே

உன்னத உலகைச்
சமைத்திடத் துடிக்கும்
இளசுகள் இதயம்
திருந்திடத் திட்டம்
உரிமைகள் கோரும்
உண்மைப் பெற்றோர்
சார்ந்திடச் சாலச் சிறந்திடுமே

வளரும் பயிரை
வளர்த்திடத் தெளிக்கும் நீரின்
சாயலில் சான்றோராய்
பெற்றவர் துணிந்தால்
வெற்றியே

சேஹு மொஹம்மது
பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ.

உம்மாவையும் சாச்சாவையும் விமான நிலையத்தில் வழி அனுப்பி வைத்து விட்டு நிம்மதி பெருமூச்சு விடுகின்றான் றம்ஸீன். உம்மாவைப் பிரிவது பெருந்துயரென்றாலும் அதனையும் விட உம்மாவின் மகிழ்ச்சி அவனுள் பேரானந்தமாய்ப் ப்ரவாக மெடுத்தது. மனது முழுக்க சந்தோசம் நிரம்பியிருந்தது. இனம்புரியாத.ஒரு மனநிறைவு.

ஒரு மகனாக இருந்து பொறுப்புணர்வோடு உம்மாவுக்கு திருமணம் செய்து வைத்தது ஒன்றும் பெரிய சாதனை இல்லதான். என்றாலும் அவனுக்கு ஏதோ ஒருவித புளகாங்கிதம்.

தான் சந்தோசமாக வாழ வேண்டிய இளமை காலம் முழுவதையும் ஒரு சுமை தாங்கியாகவே மாறி தன் குடும்பத்தாருக்காகவே கழித்தும் அழித்தும் விட்டிருந்தாள் அவனது தாய் பரீனா.



# சுமைதாங்கி

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி..

ஐந்து சகோதர சகோதரிகளுடன் நடுத்தர குடும்பம் ஒன்றில் பிறந்த மூத்த பிள்ளை அவள். வாப்பா சில்லறைக் கடை ஒன்றின் சொந்தக்காரர். நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினை சூழ்நிலையில் எப்படியோ அவருடைய கடையும் நட்டமடைந்ததால் குடும்பம் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. கடனிலிருந்து மீண்டெழுந்து கடையை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு அவர் எவ்வளவோ பகீரதப் பிரயத்தனங்களைச் செய்தும் அவரால் முடிந்திருக்கவில்லை .

பரீனா.. குடும்பத்தின் மூத்த பிள்ளை என்பதால் அவளது 16 வயதிலேயே அவளுக்கு திருமணம் முடித்து வைத்து விட்டார்கள் பக்குவம் இல்லாத வயது. படிப்பறிவில்லாத பருவம். குடும்பத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு ஆளானாள் பரீனா. அடிக்கடி கணவனுடன் முரண்பட்டு சில போது பிரிந்து மீண்டும் சமாதானம் செய்து இணைத்து வைத்த போதும் மீண்டும் மீண்டும் முரண்பாடுகள் தலைதூக்க தலாக் முடிவான பொழுது அவளது வயிற்றில் மூன்று மாதம் கரு தரித்திருந்தது.

கணவன் துணை இல்லாமலே பெற்றோரின் பராமரிப்பிலும் கண்காணிப்பிலும். பிறந்தவன் தான் ரம்ஸீன். அவனை மிக்க கரிசனையோடு வளர்த்து படிக்கவும் வைத்திருந்தார்கள் அவளுடைய பெற்றோர்கள். அவன் இன்று ஒரு வைத்தியர். திருமணம் செய்து இரண்டு வயதில் பெண் குழந்தைக்கு தந்தையாகவும் இருக்கின்றான்.

தனது தந்தையின் முகம் தெரியாது வளர்ந்தவன் அவன். படிப்பறிவில்லாத தாயின் அன்பிலும் அரவணைப்பிலும் இடையிடையே வாழ்ந்தாலும் மூத்தம்மா மூத்த வாப்பாவிடம் தான் வளர்ந்தவன். என்றாலும் அவன் உள்ளத்திலும் உணர்வுகளிலும் உம்மா பற்றிய எண்ணங்களே மேலோங்கி எந்நேரமும் ஓடிக் கொண்டிருக்கும்.

இத்தனை காலமும் அரபு தேசத்துக்குச் சென்று வீட்டுப் பணிப் பெண்ணாக உழைத்து பாட்டனாரின் பெரிய இழப்பினை ஈடு செய்தது அவனது உம்மா பரீனாதான். தனது வாப்பாவின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்தியதோடு மட்டும் நில்லாது கூடப்பிறந்த இரண்டு சகோதரர்களுக்கும் தொழில் ஆரம்பிக்க முதல் பெற்றுக் கொடுத்தாள். அது மட்டுமன்றி இரண்டு சகோதரிகளுக்கும் வீடு கட்டி திருமணமும் செய்து கொடுத்துவிட்டு 40 வயதில் தான் சொந்த நாடு திரும்பி வந்தாள். அரேபிய பாலைவனம் போல் அவளது உள்ளமும் வெறுமையாகவே இருப்பதை ரம்ஸீன் அடிக்கடி உணர்ந்து கொண்டான்.

இத்தனை காலமும் கற்பூரமாய் உருகி மெழுகுவர்த்தியாய் ஒளி கொடுத்து தன் குடும்பம் செழிக்க முழுக்காரணமாக இருந்திருக்கின்றாள் பரீனா. மூத்த வாப்பாவும் பின்னர் மூத்தம் மாவும் மரணித்த பின் தனித்து விடப்பட்டிருந்தாலும் ரம்ஸீன் திருமணமான பின்னர் தான் அவளைத் தனிமைத் துயர் வாட்டத் தொடங்கி யிருத்தது. யாரும் இல்லாத, ஆறுதல் இல்லாத, அரவணைப்பில்லாத தனிமை மிகவும் கொடுமைதான். சகோதரசகோதரிகளுடன் கூட பிறந்த ஒருவருக்கு தனித்து வாழ்வது என்பது மிகவும் சிரமமான காரியம்தான் .ஆனால் பரீனா எதையுமே காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்திருந்தாள். அவள் பொறுமையின் சிகரம். இந்த உம்மாவால் மட்டும் இத்தனை பொறுமையாகவும் பக்குவமாகவும் இருக்க எப்படி முடிகிறது என்று றம்ஸீன் அடிக்கடி வியந்து போனதுண்டு. தான் உயிரோடு இருக்கும்

காலத்திலேயே உம்மாவுக்கு மறுமணம் செய்து வைக்க பெற்றோர்கள் முயன்றும் அவள் தன் குடும்பத்தை பார்க்க வேண்டும் என்பதற்காக அதனை மறுத்து வந்திருந்தாள் பரீனா.

இந்த 40 வயதிலும் பரீனா மிகவும் அழகுடனும் இளமையுடனும் காணப் படுகின்றாள். அதுமட்டுமின்றி இனிமை யாகவும் மென்மையாகவும் பேசும் சுபாவ மும் பரீனாவுக்கு அணிகலன்களாகவும் அமைந்திருந்ததன.

எப்படியாவது உம்மாவைத் தனிமைத் துன்பத்துள் சிக்கித் தவிக்க இடமளிக்கக் கூடாது. உம்மாவுக்கு மறுமணம் செய்து வைக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடனிருந்தான் றம்ஸீன். உம்மா வுடன் நாசூக்காகப் பேசிப் பார்த்தான். 'இந்த வயசில இனியென்ன திருமணம் வேண்டிக் கிடக்கு நான் இனி திருமணமெல்லாம் செஞ்சி என்னத்த சாதிக்கப் போறன்.எனக்கு திருமணம் வேணாம்' என்று ஆரம்பத்தில் அடியோடு மறுத்தாலும் நாளாக நாளாக தனிமைக்குத்



துணையாக, பேச்சுக்குத் துணைக்காக, கடைசி காலத்தில் ஒரு ஆறுதலுக்காக வேனும் தனக்கு ஒரு துணை வேண்டும் என்பதை உணர தலைப்பட்டிருந்தாள் இந்த உணர்வும் எல்லோரும் அவருடன் பேசிப் பேசியே ஏற்படுத்தியிருந்தார்கள்.

எனவேதான் றம்ஸீன் தன்னுடன் பணியாற்றும் சக வைத்திய நண்பரின் தந்தை பிரபல தொழிலதிபர் அக்ரம் ஹாஜியாரை உம்மாவுக்கு திருமணம் செய்ய தீர்மானித்தான்.

அக்ரம் ஹாஜியார் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் தனது அன்பு மனைவியை இழந்து தனிமையில் வாடியவர். தன்னைப் போல ஒருவரின் துணை தனக்கு ஆறுதல் அளிக்கும் என்பதை நம்பினார். அதனால் பரீனா வைத் திருமணம் செய்ய பூரண சம்மதம் தெரிவித்தார்.

கடந்த மாதம் தான் உம்மாவின் திருமணம் நடந்தேறியது வாழ்க்கையில் எதையோ பூரணப்படுத்திவிட்டதை உணர்ந்தான் றம்ஸீன் .உள்ளம் மெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது.

இப்போது உம்மாவை சாச்சாவே துபாய்க்கு அழைத்துச் செல்கிறார். அங்கு தான் அவரின் அவர் தொழில் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றார். 'உம்மா நீங்க எங்கே இருந் தாலும் சந்தோசமாக இருக்கணும். இத்தனை காலமாக இழந்த சந்தோசம் அத்தனையையும் இனி மேலாவது அனுபவிக்கணும்' என்று மனதுக்குள் பிரார்த்தனை செய்துவிட்டு விமான நிலையத்திலிருந்து ஊருக்கு செல்லத் தயாராகின்றான் றம்ஸீன். இப்போது அவனுள்ளத்தில் பூரண திருப்தி குடி கொண்டிருந்தது.

# விடைபெறும் நொடிகள்





சிறகின் மென்மைத் தழுவிய இறகு,
‘என்னைப் பிரிந்த பின் உன் பறக்குதல்
முட்டிக்கொண்டுவிடாதோ?‘ எனக் கேட்டது.

மரத்தின் பச்சை பளபளப்பில் வாழ்ந்த இலை,
‘நான் உன்னை விட்டால் உன் சாயலை யார் தருவார்கள்?‘
என்று நிசப்தமாகச் சொன்னது.




மழைத்துளி கடலை நோக்கிச் சொன்னது:
‘நான் உன்னோடு கலந்த பிறகு
என் பெயரை நீ மறந்து விடுவாயோ?‘

பூக்கள், காற்றோடு பிரியும் தருணத்தில் கேட்டது:
‘என் மணமில்லாமல் உன் பயணம்
வறண்டதாய் ஆகிவிடுமோ?‘

நதி, கடலோடு சேரும் முன்னே சொன்னது:
‘என் தனித்த பயணத்தின் கதைகளை
நீ நினைவில் வைத்திருப்பாயோ?‘

சூரியன் மறையும் நேரத்தில் ஒளி சொன்னது:
‘நாளை மீண்டும் வரும்போது
என்னை அன்போடு வரவேற்பாயோ?‘



விளக்கு அணையும் முன் தீப்பொறி கேட்டது:
‘என் ஒளியில் நீ பார்த்த முகங்களை
நினைவில் வைத்திருப்பாயா?‘

மனிதன் பிரியும் முன் இதயம் கேட்டது:
‘என் துடிப்பை உணர்ந்தவர்களே,
நான் அமைதியான பின்
என் நினைவுகள் உங்களை
இன்னும் சுட்டெரிக்குமா?‘

அஸ்மியா நிஸாம்
அக்குறனை இலங்கை

# மருத்துவ உலகில் ஒரு தமிழ் மாமணி

**கவிநிலா மோகன் : –**

.

கவிநிலா என்ற இதழ் நடத்திவந்த இதழாசிரியர், நீதிமதி, சுகந்தம், தாமரைப் பூக்கள் போன்ற பத்திரிக்கைகளில் உதவி ஆசிரியர், நடிப்புத் துறையில் மலர்ந்தும் மலராத பூக்கள், நேர்க்கோட்டு நியாயங்கள், வேலை காலியில்லை போன்ற மேடை நாடகங்கள் நடத்தியவர். மேலும் தஞ்சை மாவட்ட நடிகர் சங்க உறுப்பினர்.. டாம் டூம் கல்யாணம், வீணையடி நீயெனக்கு போன்ற படங்களில் பாடலாசிரியர்.. மேலும் மகத்தான மருத்துவர் இப்படி பன்முக மன்னன் திரு கவிநிலா மோகன் அவர்களின் சுவாரஸ்யமான பேட்டி இதோ உங்களுக்காக.

நேர்கண்டவர் **ஏ டி. வரதராசன்**



***நிலா மோகன் என்பது தங்கள் பெயரா அல்லது புனைப் பெயரா ?***

எனது பெயர் நடனசிகாமணி சந்திர மோகன் ( ந. சந்திர மோகன்) எனது புனை பெயர் கவிநிலா மோகன் கவி நிலா என்ற கவிதை இலக்கிய மாத இதழை மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அரசு வேலை கிடைக்கும் வரை நடத்தினேன் அந்த ஞாபகமாக

*கவிஞர் நிலாமோகன் மருத்துவர் நிலாமோகன் இவை இரண்டில் எந்த புனைப்பெயர் உங்களுக்கு மிகவும் பிடிக்கும்? ஏன்?*

நிலாமோகன் Mbbs மருத்துவராக சந்திர மோகன் இலக்கியவாதியாக கவி நிலா மோகன்.

இலக்கியமும் மருத்துவமும் இரண்டு கண்களாக தொடர்கிறேன். நிலாமோகன் Mbbs: மருத்துவத்தில் புனைப்பெயர் இல்லை. நிலாமோகன் Mbbs தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் MBBS படித்த போது அரசு பதிவு பெற்ற மதுரை பாண்டியன் கவிதைப் பயிற்சி கல்லூரியில் படித்து கவிஞர் பட்டம் பெற்றேன் என் தந்தை என்னை இதய அறுவைச் சிகிச்சை நிபுணராக உருவாக்க ஆசைப்பட்டார். இலக்கிய மோகத்தால் தமிழ்மீது கொண்ட காதலால் அந்த ஆசையை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. அதனால் என் மகனை எலும்பு அறுவைச் சிகிச்சை நிபுணராகவும் என் மகளை மகப்பேறு அறுவைச் சிகிச்சை நிபுணராகவும் உருவாக்கினேன்.

**தாங்கள் முதலில் எழுதிய காதல் கவிதை ஞாபகம் இருக்கிறதா? இருந்தால் பகிரலாமே...**

வாலிபத்தில்
தினம் தினம் தீபாவளி
வயசுக்கு வந்தாச்சு

இரவெல்லாம்
வெடிச் சத்தங்கள்
ஏக்கம் வழிந்தாச்சு

கண்ணின்
பார்வையெல்லாம்
ஊசி வெடிகள்

பருவம் பத்திக்கிச்சு
மனசெல்லாம்
பூப்பூத்த மத்தாப்புகள்

காதல் வந்தாச்சு
பேச்செல்லாம்
எப்போதும்



ஹைக்கூஊ கவிச்செம்மலுக்கு தஞ்சைத் த்மிழ் மன்றம் விருது

சரவெடிகள்
காதல் வளர்ந்தாச்சு

உதிரும்
சிரிப்பெல்லாம்
தரைச் சக்கரங்கள்
காதல் உறுதியாச்சு

ஊரெல்லாம்
பேச்சுகள்
எங்கும்
வானவேடிக்கை
காதல் பரவியாச்சு .

**ஒரு செய்தியை மனதில் பதியும் படி சொல்வதற்கு சிறப்பான பா வகை ஹைக்கூவா அல்லது தமிழ் பா வகைகளா? ஏன்?**

ஒரு செய்தியை மனதில் பதியும்படி சொல்வதற்கு சிறப்பானவைதமிழ் பாவகைகளான வெண்பா விருத்தம், ஆசிரியப்பா போன்றவை தான் ஹைக்கூ கவிதையில் கண்ட காட்சியை மனதில் பதியும்படி சொல்லலாம் எல்லாவற்றையும் இதில் சொல்ல முடியாது. இயற்கையை மட்டுமே பேசக்கூடியது சிறந்த ஹைக்கூ என்பார்கள் முன்னோடிகள். உண்மையை சொல்லும் கற்பனை ஏற்காது உவமை உருவகம் ஏற்காது கவிதைக்கு

பொய்யழகு ஹைக்கூவிற்கு மெய்யழகு. சுண்டக்காய்ச்சிய மொழிநடை என்பார்கள். விரிவாக எழுதகூடாது... வார்த்தை சிக்கனம் வேண்டும்.

சமூக குடும்ப அவலங்களை ஏற்றத் தாழ்வுகளை மனித உணர்வுகளை உணர்ச்சிகளை இதில் கூறினால் அது ஹைக்கூ கிடையாது. அதற்கு பெயர் சென்ரியு. ஆகவே ஒரு செய்தியை ஆழமாக அழகாக சொல்வதற்கு ஏற்றவை தமிழ் பாவகைகளே. இதை உறுதியாக அறுதியிட்டுக் கூறுகிறேன்.

வாழும் ஹைக்கூ ஆசான் ஹைக்கூ பேரருவி பேராசிரியர் முனைவர் ஈரோடு தமிழன்பன் ஹைக்கூ பற்றி கூறுகிறார்...

இயற்கையின் மீது இயற்றப்பட்டால் தான் அது ஹைக்கூ. இயற்கை இருக்க வேண்டும்... இயற்கையின் அடையாளம் இருக்க வேண்டும்.

மக்களைப் பற்றி மக்கள் வாழ்க்கையைப்பற்றி எழுதுகிறபோது அது மாறி சென்ரியுவாகிறது

உதாரணமாக கவிக்கோ அப்துல் ரகுமான் ஹைக்கூ போட்டியில் வெற்றி பெற்ற என் கவிதை....

**பௌர்ணமி வெளிச்சம்**
**கொடிக் கயிற்றில் தொங்கும்**
**சொட்டுச் சொட்டாய் நிலவு**

**தனித்தமிழ் வேண்டுமா, வேண்டாமா? சாத்தியமா சாத்தியம் இல்லையா? உங்களைக் கவிஞராக பரிணமிக்கச் செய்தது எது?**

தனித்தமிழ் கண்டிப்பாக வேண்டும். அதனால் தான் குழந்தைகளுக்கு தூய தமிழில் பெயர் சூட்டுங்கள்

வணிக சந்தையில் கடைகளுக்கு பிற மொழி கலப்பின்றி பெயர்ப்பலகை வைக்க வேண்டும் என்று வலியுறுத்திகூறுகிறோம்

வளரும் குழந்தைகளுக்கு தமிழிலேயே உரையாடி மகிழுங்கள் என்று பொது வெளியில் கோரிக்கை வைத்து ஊக்கப் படுத்துகுறோம் .

பிறமொழிக் கலக்காத தூய தமிழ்

நந்தவனம். பவுண்டேசன் திருச்சி நாற்பது ஆண்டுகால இலக்கிய பணிகளுக்காக 23*2*2025 அன்று திருச்சியில் வழங்கிய தமிழ்மாமணி விருது.



மொழி நடையில் பேச வேண்டும் எழுதவேண்டும் என்று தனித்தமிழ் இயக்கத்தை தொடங்கிய தமிழை ஆங்கிலத்தை வடமொழியை சிறப்பாக கற்றுத் தேர்ந்த தமிழ் ஆய்வாளர் மறைமலையடிகள் விரும்பி உயர்தனி செம்மொழியாம் தமிழை வளர்த்தார். அதே வழியில் செல்லத்தான் எனக்கும் ஆர்வம். மருத்துவராக இருப்பதால் சில நேரங்களில் அது. சாத்தியமற்றுப் போகிறது.சாத்தியம் சற்றுக் குறைவு தான்.

இருந்தாலும் எல்லாவழிகளிலும் முயற்சியை விடாமல் தொடர வேண்டும்

கவிஞராக பரிணமிக்க செய்தது தனித் தமிழ் தான் எந்த மரபுக்கவிதையாக இருந்தாலும் எதுகைக்காக மோனைக்காக தமிழ் வார்த்தைகளை தேடித்தேடி கற்று கவிதைக்குள் கொண்டு வருகிறேன்.

சிறப்பான கவிதையை உருவாக்கவும் வெற்றி பெற்ற கவிஞராக ஒளிரவும் கண்டிப்பாக தனித்தமிழ் தேவை தான்.

தனித்தமிழ் ஒன்றால் மட்டுமே தமிழைத் தூக்கி நிறுத்த முடியும்.

'என்ன வருத்திநீ கவிசெய்யினும் முன்னோர்கள் செய்ததன்றி நூதனம் ஒன்றுமில்லை' என்பார்கள் அப்படி என்றால் நாம் நம் முன்னோர்களை நம்மால் மிஞ்ச முடியாதா? அல்லது மிஞ்சக் கூடாதா?

என்ன வருத்திநீ கவி செய்யினும் ................ நூதனம் ஒன்றுமில்லை என்று கூறினார்கள்.

இன்றைய கவிஞர்களை உற்சாகப் படுத்தி எழுத வைக்க கூறி இருக்கலாம் அன்று கவிஞர்கள் கவிராயர்கள் புலவர்கள்



வள்ளலார் அறப்பணி மாமன்றம் தஞ்சாவூர் சார்பில் நிறைய அன்னதானம் ஆடைதானம் வழங்கியதற்காக அறப்பணித்திலகம் விருதினைவி.ஜி. சந்தோஷம் பொற்கரங்களில் பெற்ற இனிமையான தருணம்.

---

கவிதை எமக்குத் தொழில் என்று வாழ்ந்தார்கள் இன்று அப்படி இல்லை.

மிஞ்ச முடியாதா என்ற கேள்விக் கணை ஒவ்வொரு கவிஞரையும் துளைக் கும். ஆத்மார்த்தமாக தவநிலையில் முழுமூச்சாக இறங்கி எழுதும் கவிஞர்கள் இருக்கிறார்கள்

மிஞ்சக் கூடாதா... இந்த கேள்வி ஆச்சரியமாக இருக்கிறது.

கூடாது என்ற கட்டுப்பாட்டை யாராலும் எந்தக் காலத்திலும் போட முடியாது.

மிஞ்ச முடியும் ஒருநாள் அதுவும் நடக்கும்.

அவரவர் மொழிப்புலமையை ஆழ்ந்த இலக்கண அறிவைப் பொறுத்தது. முயன் றால் முடியாதது எதுவுமில்லை. காலம் விரைவில் பதில் சொல்லும்.

**தமிழின் மொழியாளுமை முழுதாகத் தெரிவது, கவிதையிலா, கட்டுரையிலா, கதைகளிலா...?**

தமிழின் மொழியாளுமை முழுமை யாகத் தெரிவது கவிதைகளில் தான் என்னைப் பொறுத்தவரை.



அதுவும் மரபுக்கவிதைகளில் அதிக மாக தேவைப்படும் அனைவராலும் எதிர் பார்க்கப்படும்.

புதுக்கவிதைகளில் நவீனக் கவிதை களில் ஓரளவு மொழியாளுமையை காட்டு வார்கள்.

கதைகளில் யதார்த்தம் தெளிந்த நீரோடை போல் கதை சொல்லும் திறமை தேவைப்படுகிறது புனைவு ஒப்பனை தேவையில்லை புராண சரித்திர கதைகளுக்கு கொஞ்சம் மொழியாளுமை கற்பனை கவிநடைவேண்டும்.

கட்டுரைகள் பயணக் கட்டுரை வாழ்வியல் கட்டுரை ஆன்மீகக் கட்டுரை எதுவானாலும் மிகைப்படுத்தாத உண்மை நிலையை செய்தியை ஒளிவுமறைவின்றி தெளிவாக புரியும்படியாக எளிமையாக சொல்லக்கூடிய படைக்கும் திறன் முக்கியம்.

அதிக மொழியாளுமை மரபுக்கவிதை களுக்கு மட்டுமே தேவை என்பதுஎன் அனுபவக் கூற்று.

படிக்கும் பழக்கத்தைப் பற்று. என்ற ஈற்றடிக்கு ஒரு வெண்பாவும், 'வெண்பா' என்ற தலைப்புக்கு ஒரு ஹைக்கூவும்...

**வெண்பா**

*அடிக்காது கற்பிக்கும்*
*ஆசானில் கற்று*
*துடிக்கும் இளமையில்*
*தேர்ந்த- அடியாய்*
*விடியாத வாழ்வில்*
*வெளிச்சத்தை ஏற்ற*
*படிக்கும் பழக்கத்தைப்*
*பற்று.*

**ஹைக்கூ**

நேரிசை வெண்பா
உள்ளத்திலிருந்து பொங்கி வழிகிறது
கவிதை வெள்ளம்

**தாங்கள் எழுதிய நூல்கள் மற்றும் விருதுகளைப் பற்றி சொல்லுங்கள்**

எழுதிய தனி நூல்கள்...
புதுக்கவிதை நூல்கள் 2
ஹைக்கூ கவிதை நூல்கள் .12
தன்முனைக்கவிதை நூல்கள் .4
மரபுக் கவிதை நூல்கள் 1
நான் தொகுத்த நூல்கள் 9
நான் பெற்ற விருதுகள் நூற்றுக்கு மேல்
சமீபத்தில் பெற்ற 2 சிறப்பு விருதுகள்

தமிழ்மகுடம் விருது
தமிழ் மாமணி

**~~தாங்கள் பெற்றதில் உயரிய விருது எது? எங்கே யாரால் வழங்கப்பட்டது?~~**

**எழுத்தில் அடுத்து நீங்கள் சாதிக்க நினைப்பது என்ன?**

அடுத்து தமிழில் சாதிக்க நினைப்பது 50 புத்தகங்கள் வெளியிடவேண்டும் என்

நூல்களுக்காக ஒரு ஆய்வரங்கம் ஒருநாள் நிகழ்வாகநடத்த வேண்டும்

அடுத்து தமிழக அரசு வழங்கும் தமிழ்ச்செம்மல் விருதைப் பெற வேண்டும் என்பது என் வாழ்நாள் இலட்சியம்

**கவி எழுத தேவை கற்பனையா? மொழி ஆளுமையா?**

கவிதை எழுத கற்பனையும் வேண்டும் மொழி ஆளுமையும் வேண்டும்.

கற்பனை இல்லாமல் கவிதை வாழாது...

மொழி ஆளுமை இல்லாமல் கவிதை சிறக்காது.

சரியான விகிதத்தில் இரண்டும் இரண் டறக் கலக்க வேண்டும்

.

**கவிஞர்களுக்கு தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

கவிஞர்களுக்கு அறிவுரை சொல்லும் அளவுக்கு நான் பெரிய கவிமேதையல்ல

கவிஞர்களே நிறைய தேடித்தேடி படியுங்கள்.

எப்பொருள் பற்றியும் எப்போதும் கற்பனை செய்யுங்கள்.

சுயமாக சிந்தித்து சமுதாய சிந்தனை யோடு மக்களுக்காக எழுதுங்கள்.

உள்ளத்தில் தோன்றுவதைக் கவிதை யாக்கி உலகிற்குச் சொல்லுங்கள்

கவிதை எமக்குத் தொழில் என்று எந்தக் காலத்திலும் சொல்லாதீர்கள்

நிம்மதி அமைதி இல்லாமல் கவிதை எழுதவேமுடியாது... அதற்காக

வாழ்வதற்கு அடிப்படையாய் ஆதார மாய் நிரந்தர வருமானத்திற்காக ஒரு தொழில் வேண்டும்

உங்கள் தனித்தன்மையை இழக்காமல் காலம் முழுவதும் எழுதிக் கொண்டே இருங்கள்...

இது அறிவுரை அல்ல அனுபவப் பேரு

**இனி ...**

**கவிதை என்பது....**

உள்ளத்தில் உதிப்பது கவித்துவமானது. காலத்தால் அழியாதது... காலம் கடந்தும் நிற்கும் .

**கவிஞன் என்பவன்...**

சமூக சிந்தனையோடு மக்களுக்காக பாடுபவன்.

**காதல் என்பது...**

எந்தக் காலத்திலும் கலையாத மானிட உணர்வு.

**பிடித்த பழமொழி...**

பெத்த மனம் பித்து
பிள்ளை மனம் கல்லு

எழுத்தாளர் லேனா தமிழ்வாணன் பொற் கரங்களால் அறப்பணிச் செம்மல் விருது



**நட்பு...**

ஒருமித்தக் கருத்துடன் மனங்கள் கலந்து விட்டுக் கொடுத்து ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வது

**எது ஆச்சரியம்...**

குழந்தைகளைக் கொன்றுவிட்டு கணவ னுக்கு துரோகம் செய்வது

**எது அவமானம்...**

தமிழனாக இருந்து கொண்டு ஒரு தமிழனுக்கு உதவாமல் இருப்பது

**எது உயர்ந்த செல்வம்...**

கல்வி தான் அழியாத உயர்ந்த செல்வம்

**பிடித்த உணவு...**

வள்ளலார் வழியில் வாழ்வதால் முருகனை வழிபடுவதால் சித்தர்களைப் பின்பற்றுவதால் சைவ உணவே பிரதான மாய் பிடித்தது.

**பிடித்த ஊர்...**

தமிழ் கலை இலக்கிய அறக்கட்டளை கரூரில் நடத்திய இலக்கிய விழாவில் இலக்கிய சேவைகளுக்காக தமிழ் மகுடம் விருது நடிகர் பாண்டியராஜன் பொற்கரங்களால் பெற்ற மறக்க முடியாத தருணம்.



சித்தர் பூமியான திருவண்ணாமலையே எனக்கு பிடித்தமான ஊர்...

கிரிவலம் செல்லும் போது மலையே சிவனாய்காட்சிக் கொடுப்பதால்.

**பிடித்த நிறம்...**

பச்சையும் மஞ்சளும்

**கடவுள் என்பது...**

நம்மை இயக்கும் சக்தி நம்மைக் காக்கும் மகாசக்தி .

**காமம் என்பது...**

ஆணுக்கும் பெண்ணுக்கும் அடிப் படைத் தேவை

அளவுக்கு அதிகமானால் ஆபத்து இல்லாவிட்டால் அதுவே துன்பம்

**தினமும் வெறுப்பது...**

நியாயமற்ற செயல்

**தினமும் நினைப்பது...**

சித்தர்களின் தலைவர் என் அப்பன் முருகப்பெருமானை .

**தினமும் கொடுக்க நினைப்பது...**

அன்ன தானம்

**தினமும் எடுக்க நினைப்பது...**

நல்லோரின் ஆசியை இறைவனின் பேரருளை

**இறப்பு என்பது...**

இவ்வுலகை விட்டு மறைவது (இறைவன் கையில்)

**பிறப்பு என்பது...**

பூமிக்கு வருவது (மனிதன் கையில்)
மனிதன் மாறுவதால் இதுவும் கைமாறி விட்டது

**தமிழ் நெஞ்சம் இதழைப் பற்றி;;;**

உலகத் தமிழர்களை இணைக்கும் ஒப்பற்ற தமிழ்ப்பணி.

தாய்த்தமிழை வளர்க்கவும், தூய தமிழை ஆராதிக்கவும், தமிழ் கவிஞர்களை ஆதரிக்கவும் உதயமானது இந்த தமிழ்நெஞ்சம் மாதஇதழ் .

ஆசிரியர் இதழை ஒவ்வொரு மாதமும் சிறப்பான வடிவமைப்புடன் புதிய செய்தி களுடன் உலக கவிஞர்களின் பலவிதமான உன்னதக் கவிதைகளுடன் கொண்டு வருகிறார்.

கவிஞர்களை கொண்டாடும் இதழ். கவிதைகளை ஊக்கப்படுத்தும் இதழ். மொத்தத்தில் இலக்கியம் பேசும் அர்த்த முள்ள இதழ்.

பொன்விழா கண்ட இந்த இதழ் நூற்றாண்டு காண இதயம் நிறைந்த வாழ்த்துகளை தெரிவிக்கின்றேன் ..



## அடிமையாய் க்கிடக்கும் அருமைத் தமிழினம்!

தித்திக்கும் செந்தமிழ்
தெவிட்டாத தேன்தமிழ்
எத்திக்கும் இருக்கின்ற
இன்றமிழின் சிறப்புணர்ந்தும்
நித்திரையில் அடிமையாய்க்
கிடக்கின்ற தமிழினமே!
முத்தமிழைக் காத்திடவே
வழியின்றிக் கிடக்கின்றாய்!

தாய்மொழியை...தமிழ்மொழியைப்
பள்ளிகளில் தள்ளிவைக்க
பாய்விரித்துப் படுத்துள்ளாய்
பரிதிநம் மொழிகாக்க
வாய்ப்பில்லை என்றுணராத்
தமிழினமே விழித்தெழுவாய்!

வளங்கள் பலகோடி
வண்டமிழில் வீற்றிருக்க

துலங்காது தூங்குகின்ற
தமிழினமே விழித்தெழுவாய்
அளப்பரிய அருந்தமிழை
அழிக்கின்றார் அயலவர்கள்
உளமுணர்ந்தும் வாய்திறக்க
வழிஇன்றிக் கிடக்கின்றாய்

ஓங்குபுகழ் செந்தமிழை
விழாக்களிலே விலக்கிவிட்டுத்
தாங்கியுள்ள இந்தியினைத்
தாங்குகின்ற அடிமை நீ
ஆங்கிலத்தை அயல்மொழியைக்
கற்கின்ற வழிசெய்தாய்
தூங்குகின்ற தமிழினமே
அடிமைத்தளை உடைத்தெழுவாய் !

முனைவர் வே.பூங்குழலி பெருமாள்
தமிழ் விரிவுரையாளர்
புதுச்சேரி

# ஏன் அழுதாள்

**தங்க. ஆரோக்கியதாசன்**

நகராட்சியில் குப்பை வாறும் ஒப்பந்தத் தொழிலாளியான கன்னியம் மாள் மண்டை பிளக்கும் உச்சி வெயிலில் குப்பை வண்டியைத் தள்ளிக் கொண்டு அந்தத் தெருவில் வந்தாள்.

கன்னியம்மாள், வாங்கும் கூலிக்கு வஞ்சனை இல்லாமல் வேலை செய்வாள். அவளுக்குனு ஒதுக்கப் பட்ட நாலு தெருக் களில் உள்ள குப்பைகளை வண்டியில் ஏற்றி வந்து குப்பைக் கிடங்கில் கொட்டுவது தான் அவளின் அன்றாட வேலை. இருந்தாலும் தெருவில் கிடக்கும் குப்பைகளையும் வாரி பெருக்கி சுத்தம் செய்வாள். என்ன தான் செய்தாலும் கன்னியம்மா அந்தத் தெருவாசிகளுக்கு குப்பைக் காரிதான்.

அன்று ஏனோ அசதியில் அவள் உடம்பு ஓய்வுக்காக கெஞ்சியது. “இது தான் கடைசி லோடு குப்பைகளை அள்ளிப் போட்டுட்டு வீட்டுக்குப் போய் அக்கடானு படுக்கனும், என நினைத்து, இன்னும் பத்து வீடு தான், தம் பிடிச்சி வண்டிய தள்ளினு போய் குப்பைய வாங்கிடலாம். இல்லனா, குப்பை எடுக்க ஆள் வரலைன்னு யாராவது சானிடரி இன்ஸ்பெக்டரிடம் கம்ப்ளைன்ட் பண்ணா வேலையே போயிடும்” என்று பயந்து விசில் ஊதிக் கொண்டே குப்பை வண்டியை இழுத்துக் கொண்டு போனாள்.

ஒவ்வொரு தடவையும் அவள், விசிலை ஊதும் போது அடிவயிற்றில் காற்று வாய்க்கு வந்து விசில் வழியாக வெளியேறும் போது இரண்டு பக்கத்து விலா

எலும்பும் வின்னுனு வலிக்கும், என்ன செய்றது, வேலைக்குனு வந்துட்டா செஞ்சி தானே ஆகனும் என்று உயிர் போகும் வலியையும் பொறுத்துக் கொண்டு வண்டியை இழுத்தாள்..

எவ்வளவோ நாற்றத்தைப் பொறுத்துக் கொண்டு குப்பைகளை வாங்கும் அவள், குப்பையைக் கொண்டு வந்து போடுபவர்களிடம், மக்கும் குப்பைய தனியாகவும், மக்காத குப்பைய தனியாக வும் பிரித்துப் போடுங்கள் என்று எத்தனை முறை சொன்னாலும், யாரும் கேக்கறதில்ல. “நீ எதுக்கு இருக்குற அதுக்குத் தானே, சம்பளம் வாங்குற, பிரிச்சிப் போடு என்று சட்டம் பேசுவார்கள். சிலர் சண்டைக்கும் வருவார்கள்.

ஆனால், குப்பைகளைப் போடும் போது, அருவருப்போடு முகத்தை அஷ்ட்டக் கோணலாக்கி ஏதோ தொடக் கூடாததைத் தொட்டு விட்டதைப் போல துணியால் மூக்கை மூடிக்கினு குப்பையப் பாக்கறதே பாவம்ற மாதிரி முகத்தைத் திருப்பி வேண்டா வெறுப்பா குப்பைய வண்டியில் இடதுகையால தூக்கிப்

போடுவார்களே, அதைத்தான் அவளாள் தாங்கிக்க முடியாது.

இந்த குப்பைகள் அவரவர்கள் வீடுகளில், மணி கணக்காக நாறிக் கொண்டிருக்கும், அப்போதெல்லாம் அதை சகித்துக் கொண்டவர்கள், குப்பையை வண்டியில் போடும் போது மட்டும் இவளையும் இவள் வண்டியையும் பார்த்து அருவருப்படைவார்கள்.

இருந்தாலும், செய்யும் தொழிலே தெய்வம். செய்ற வேலைய சுத்தமா செய்யனுங்கற எண்ணம் கொண்ட கன்னியம்மா சிறிதும் அருவருப்படையாமல் நாத்தமெடுக்கும் குப்பைய வாங்கி வண்டியில் இருக்கும் மட்கும் தொட்டியிலும் மட்காத தொட்டியிலும் தனித் தனியாகப் பிரித்துப் போடுவாள்.

சில நேரத்தில் குப்பைகளைப் பிரித்துப் போடும் போது எது மட்கும் குப்பை எது மட்காத குப்பைனு லேசா குழப்பம் வரும். அது எதுன்னா பெண்கள் பயன்படுத்திய நாப்கின் பேடுகள் தான். அதை எதில் போடுவது என்ற குழப்பம் வந்தாலும், அதை எடுத்துப் போடும் போது மட்டும் அவளுக்கு லேசா மனசு கூசும். அவளும் பெண்தானே. அப்படிப் பட்ட நேரத்தில், அதை ஏதோ ஒரு குப்பைத் தொட்டியில் போட்டு விடுவாள்.

ஒரு சிலர் சமூக அக்கறையுடன் குப்பைகளைத் தனித் தனியாக பிரித்தே கொண்டு வந்து வண்டியில் இருக்கும் தொட்டிகளில் போடுவார்கள். ஒரு சிலர் டீக் குடிக்க காசும் குடுப்பார்கள். கன்னிம்மா அதை வாங்கமாட்டாள் “இந்த வேலைய செய்றதுக்குத்தான் எங்களுக்கு சம்பளம் குடுக்குறாங்க, அதுவே போதும்” என்பாள்.

கன்னியம்மாவின் சேவையைப் பார்த்து அந்த ஊர்த் தலைவர் ஒரு நாள் அவளைக் கூப்பிட்டு ஊருக்கு நடுல இருக்கிற எடத்துல சுதந்திர கொடிய ஏற்ற வச்சது அவளுக்கு ரொம்ப பெருமையா இருந்தது. அவள நிக்க வச்சி அந்தக் கூட்டத்துல யார்

யாரோ எதை எதையோ ரொம்ப பெருமையா பேசினாங்க. அங்கு நிக்கறதுக்கு கன்னியம்மாமவுக்கு கூச்சமா இருந்ததாலும் சந்தோசமா இருந்தது. அந்த நெனப்போடே அந்த நாள் எப்படி போனதுனே தெரியல. அந்த ஐயாவ பாக்கும் போதெல்லாம் கும்பிடு போடுவாள்

அன்று, அந்தத் தெருவில் இவளின் விசில் சத்தத்தைக் கேட்டு அழகான குழந்தை ஒன்று வீட்டு வாசலைத் தாண்டி



தத்தி தத்தி நடந்து வந்து கேட்டை பிடித்துக்கொண்டு நின்றது. கரு கருவென்ற சுருண்ட முடியோடு சிரிச்ச முகமா துரு துருத்த கோலிக் குண்டு கண்களுடன் பார்ப்பதற்கு அழகான பொம்மையைப் போல் இருந்தது. அது கன்னிம்மாவையும் குப்பை வண்டியையும் பார்த்து பொக்கை வாயில் சிரித்தது. தூக்கச் சொல்லி இரண்டு கைகளையும் நீட்டியது. குழந்தை பெத்துக் கொள்ள முடியாத கன்னியம்மா குழந்தைகள் மீது கொள்ளைப் பிரியம் வச்ச காரணத்தால் அந்தக் குழந்தையைப் பார்த்ததும் தன்னை மறந்து, ஓடிப் போய் தூக்க கை நீட்டும் போது,

"ஏய் உனக்கு அறிவில்ல, குப்பை வார்ர அழுக்கு கையால குழந்தைய தொட்டு தூக்கிறியே கொஞ்சமாவது அறிவு இருக்கா? ச்...சீ.... நீயும் உன் கோலமும் அழுக்கு புடிச்ச அசிங்கம் புடிச்ச கையால குழந்தைய தொடுறியே, குழந்தைக்கு நோய் வந்தா நீயா பார்ப்ப. போ.. போ.." என்று விரட்டினாள்.

"இல்லம்மா.. வந்து... குழந்தை தான் என்று சொல்வதற்குள் நைசா குழந்தைய கொஞ்சர மாதிரி கொஞ்சி குழந்தைய திருடினு போயி, நகைய கழட்டிகினு குழந்தைய வித்துடலாமுன்னு பாக்குறியா போ...போ...போ... அந்தப் பக்கம், குழந்தைய தூக்குனே பொல்லாதவளா மாறிடுவேன்" என்று அடிக்காத குறையாக வெறுப்போடு விரட்டினாள் அந்தக் குழந்தையின் தாய்.


துக்கத்தோடு மௌனமாக, எதுவும் பேசாமல் குப்பையை அவளிடமிருந்து வாங்கி வண்டியில் போட்டுக் கொண்டு, கண்ணீருடன் விதியை நினைத்து வண்டியைத் தள்ளிக் கொண்டு போனாள்; கன்னியம்மா. அப்போது, அவள் ஊதிய விசிலில் இருந்து சத்தம் வரவில்லை கண்ணீர் தான் வந்தது, அதில் சில ரத்தத் துளிகளும் இருந்தது. அப்போது,

"அய்யோ என் குழந்தை, என் குழந்த பாதாள சாக்கடையில் விழுந்திடுச்சி," என்ற அலறல் சத்தம் நடந்து போய்க் கொண்டிருந்த கன்னியம்மாவின் காதில் விழுந்தவுடன்

பதறி துடித்து ஓடி வந்த கன்னியம்மா, கீழே மூடி திறந்திருந்த பாதாள சாக்கடையில் குதித்து சாக்கடையில் தத்தளித்துக் கொண்டிருந்த குழந்தையை ஒரு பூச்செண்டைப் போல வாரி எடுத்து மார்பில் அணைத்து உச்சி மோந்தாள். அந்தக் குடிந்தையின் வாசம் சாக்கடை நாற்றத்திலும் மணமாக அவளை வசீகரித்தது அதில் மயங்கிய அவள், அதே மயக்கத்துடன் அந்தக் குழந்தையை இரு கையாளும் தூக்கி வெளியே நீட்டினாள்.

அங்கிருந்தவர்கள் பதட்டத்துடன் ஓடி வந்து சாக்கடையும் கழிவுமாக இருந்த குழந்தையை வாங்கி மூச்சி இருக்கிறதா என்று பார்த்தனர். நல்ல வேளை குழந்தைக்கு மூச்சி இருந்தது. இருந்தாலும் மருத்துவ மனைக்கு தூக்கிக் கொண்டு ஓடினர். அதன் பிறகு தான் கன்னியம்மாவை தூக்கினர். அதற்குள் கன்னியம்மா, குழந்தை தன் கையில் இருக்கும் நினைப்போடே அந்த பாதாளச் சாக்கடையில் மயங்கி சரிந்தாள். ஆம், கன்னியம்மாள் பாதாள சாக்கடையில் இருந்த விசக் காற்று தாக்கி இறந்து விட்டாள்.

சாவில் இருந்து தப்பிப் பிழைத்து வந்த தன் குழந்தையை மார்போடணைத்த அந்தத் தாய் செத்துப் போன கன்னியம்மாவை பார்த்து குற்ற உணர்வில் பெருங்குரலெடுத்து அழுதாள். அவள் ஏன் அழுதாள்? எதற்காக அழுதாள்? ■



தொடர் : 05

**ரஸ்னா ரம்ஸான்**
இலங்கை , அக்குறணை

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

*சா*லை வீதி

அந்த பரபரப்பான நகர சாலையில் அவினாஷ் தன் வேலைகளை முடித்து விட்டு அஷ்வின் அனுப்பிய லொகேஷனுக்கு வந்து சேருவதற்காக காரில் பயணிக்கிறான். அவனுக்கு சாலினியை முதன் முதலில் நேரடியாக பார்ப்பதை நினைக்கையிலும் அவள் தன்னை அடையாளம் கண்டு கொள்வாளா..? என்றெண்ணும் போதும் ஆண்மகனவனின் இதழ்களில் வெக்கம் கலந்த புன்னகை தோன்றியது.

போட்டோவில் அவளை அவன் பார்த்திருந்தாலும் நேரில் அவளுக்கு தான் யாரென்றே கூறாமல் அவள் மனதை அறிய நினைப்பதை நினைக்கையில் அவனுள் ஏதோ இனம் புரியாத, வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி பறப்பதைப் போன்று இதுவரை அவன் அனுபவித்தில்லாத உணர்வுகள் அவனை வட்டமிட்டன. இருந்தும் தன் போன்றே சிறுவயதில் எடுக்கப்பட்ட முடிவிற்காக அவளும் காத்திருக்கிறாளா..? அவள் தன்னை ஏற்றுக் கொள்வாளா? என்ற அவள் மனதை தன்னால் புரிந்து கொள்ள முடியுமா ? என்ற கேள்விகளும் அவனை சூழ்ந்தன.

இந்த சிந்தனைகளிற்குள் அவன் ஆழ்ந் திருந்தால் கார் ஓட்டுவதில் அவனின் கவனம் சிதறியது.

அவனின் கார் மரமொன்றில் வேகமாக மோதப் பார்க்க தன் சிந்தனைகளிலிருந்து வெளி வந்தவன் நடக்கப் போகும் விபத்தை நினைத்து அதிர்ச்சியடைந்து விரைவாக சுதாகரித்துக் கொண்டு காரை நிறுத்தி தன் நெஞ்சில் கை வைத்து மூச்சு வாங்கியவன் என்னாச்சு எனக்கு , நா ஏன் சின்ன பிள்ள போல இருக்கன் ?

உறுதியான ஒரு பொலீஸ் அதிகா ரியாய் கடமைகளில் கவனமாயிருந்தவன். இப்போது காதலின் சிந்தனைகளினால் தன் கவனத்தை சிதறியதை எண்ணி மொபைலில் சாலினியின் புகைப்படத்தை பார்த்து சிரித்துக் கொண்டிருக்க சரியாக அஷ்வினின் தொலைபேசி அழைப்பு வர தன்னை சரிப்படுத்தியவன் அவனின் அழைப்பை ஏற்று சொல்லுடா என்றான்.

அஷ்வின் ‘எங்கடா இருக்க? பிக்கப் பண்ணிட்டயா ?

அவினாஷ் ‘இல்லடா‘

அஷ்வின் ‘இன்னும் என்னடா பண்ற‘

அவினாஷ் ‘டிராஃப்பிக்‘

அஷ்வின் ‘டேய் நா ஒன்னோட நண்பன்டா ஒன்னோட குரல் பதட்டமா இருக்கு என்ன சரி பிரச்சனையா? நீ எங்க இருக்க? லோகேஷன் அனுப்பு நா வாரேன்‘

அவினாஷ் ‘டேய் வேணாம் டா நா லொகேஷனுக்கு கிட்டவாகிட்டன் கொஞ்சம் வேர்க் டென்சன் அதான் வேற ஒன்னும் இல்ல‘

அஷ்வின் ‘ சரிடா கவனமா கார ஓட்டு நா அப்றம் பேசுறேன்‘

அவினாஷ் ‘ சரிடா ‘

அஷ்வின் அழைப்பைத் துண்டித்ததும் கவனமாக கார ஓட்டு என்ற அஷ்வினின் வார்த்தைகள் எதிரொலிக்க அதே எண்ணத்தோடு காரை ஓட்டி செல்கிறான்.

ஐஸ்வர்யாவின் வீடு

ஐஸ்வர்யா வெடிங் பார்ட்டிக்கு செல்வ தற்காக மஞ்சல் நிற சல்வார் ஒன்றை எடுத்து வைத்து அணிய தயாராக இருக்க அக்கா என ஓலம் போட்டுக் கொண்டே அறைப்பக்கம் வந்தாள் ராகினி.

ராகினி ‘என்னக்காபன்றீங்க‘

ஐஸ்வர்யா ‘வெடிங் பார்ட்டிக்கு போனும்ல அது தான் ரெடி ஆகுரேன்‘

ராகினி ‘ அக்கா இந்த சல்வார் வேணாம்

ஐஸ்வார்யா ‘ ஏன் இதுக்கென்ன நல்லா தானே இருக்கு ‘

ராகினி ‘இருக்கா வாரேன‘

ராகினி அலுமாரியை திறந்து நீல நிற புடவையொன்றை எடுத்தவள் ‘அக்கா இது ஒனக்கு ரொம்ப நல்லா செட் ஆகும் ‘

அந்தப் புடைவையைக் கண்ட ஐஸ்வர்யா அதிர்ச்சியில் சிறிது நேரம் உறைந்து நின்றாள். அவளின் கண் முன் பல காட்சிகள் நிழலாய்த் தோன்றி மறைந்தன. அவளின் செய்கையை கண்ட ராகினி என்னாச்சிக்கா என அவளருகில் சென்று அவளின் தோளை தொடவும் தான் ஐஸ்வர்யா சுயநினைவிற்கு வந்தாள்.

ராகினி 'என்னாச்சி எதுக்கு இப்டி ரியக்ட் பண்ற?

ஐஸ்வர்யா 'அது... அது ஒன்னும் இல்லமா

ராகினி ' ம்ம் சரி க்கா இந்த சாரி ஒனக்கு ரொம்ப நல்லா இருக்கும்'

ஐஸ்வர்யா 'இல்லமா இந்த சல்வார் நல்லம்'

ராகினி 'அக்கா ப்லீஸ் இத செலக்ட் பண்ணுங்க

ஐஸ்வர்யா ' இல்லமா வேணாம்'

ராகினி விடாது அவளை அந்த புடவையை பிடிவாதம் பிடித்து அணிய வைத்தவள் சரிக்கா நீ ஜுவல்ஸ்லாம் போட்டு ரெடியாகு நான் போய் ரெடியாகுறேன்

ஐஸ்வர்யா ' சரி மா '

ராகினி சென்றதும் ஐஸ்வர்யானின் மணக்கண்களில் ஒருகாட்சி தோன்றியது.

கடற்கரையோரம் காற்றும் இதமாக வீச அவன் கை பற்றி அமர்ந்திருந்தாள் ஐஸ்வர்யா

'ஐஸ்சு மா ஒனக்கு இன்னக்கி ஒரு கிப்ட் இருக்கு'

ஐஸ்வர்யா 'எதுக்கு இன்னக்கி அப்டி என்ன ஸ்பெஷல் டே?

'ரொம்ப ஸ்பஷெல் டே தான் இன்டக்கி கெஸ் பண்ணுப் பார்ப்போம் என்னனு'

ஐஸ்வர்யா 'ஒங்க பேர்த்தேடயும் இல்ல, என்னோட பேர்த்டேயும் இல்ல, நம்ம லவ் ஸ்டார்ட் டேயும் இல்ல அய்யோ நீங்களே சொல்லுங்க எனக்கு தெரியல'

'இன்டக்கி என்ன பொறுத்தவரை என்னோட வாழ்க்கைல ரொம்ப முக்கிய மான நாள் '

ஐஸ்வர்யா 'புரியல அப்டி என்ன ஸ்பெஷல் டே'

'அதுவா? அது வந்து என்னோட லைப்ல என்னோட தேவதை தரிசனம் தந்த நாள் இது ஐய்சுமா நா ஒன்ன மொத மொதலா பார்த்தது இந்த நாள்ல தான்'

ஐஸ்வர்யா 'அவளோ நியாபகம் வச்சிக் கிறீங்களா ?

'ம்ம் என்னோட லைப்ல என்னோட வந்த தேவதை நீ ஒன்ன எப்பவும் இழக்க கூடானு நினக்கிறன்'

ஐஸ்வர்யா 'ம்ம் நா எப்பவும் ஒங்க கூடவே இருப்பன் சரியா லவ் யூ'

'லவ் யூ டுமா சரி இத பாரு நா உனக்காக கொண்டு வந்த கிப்ட்'

ஐஸ்வர்யா 'என்ன இது'

'பிரிச்சு பாரு '

ஐஸ்வர்யா அவன் கொடுத்த கிப்டை எடுத்து அதன் கவரை பிரித்து பார்க்க நீல நிறத்தில் அவளிற்கு பிடித்தவாறே எவ்வித டிசைன்களுமின்றிய புடவையொன்று இருந்தது.

ஐஸ்வர்யா 'வாவ் ஐலைக் இட்

'உனக்கு ப்லு கலர் தான் ரொம்ப நல்லா இருக்கும் புடிச்சிருக்கு தானே'

ஐஸ்வர்யா ' யெஸ் ரொம்ப புடிச்சிருக்கு'

அவன் அவள் கரத்தை இறுக்கமாய் பற்றிக் கொண்டான்.

அக்கா ரெடியாகிட்டயா என்ற ராகினி யின் குரலில் தன் கடந்த கால நினைவி லிருந்து சுயநினைவிற்கு வந்தாள் ஐஸ்வர்யா.

ஐஸ்வர்யா ‘ம்‘

ராகினி ‘என்னக்கா நீ இந்தா இந்த ஜுவல்ஸ்ஸ போடு இந்த செயின் உனக்கு செட்டா இருக்கும் வாவ் இப்போ தேவதை போல இருக்க...

ராகினி ஐஸ்வர்யாவை கட்டியணைத்து விடுவித்து சரிகா நா எப்டி இருக்கன்?

அப்போது தான் ஐஸ்வர்யா ராகினி யைக் கவனித்தாள்.

ராகினி பிங்கும் பீச்சும் கலந்த புடவை அணிந்து கூந்தலை விரித்து அழகாக இருந்தாள் துறு துறுவென சிறு பிள்ளையென இருந்தவளை முதன் முதலில் புடவையில் கண்ட ஐஸ்வர் யாக்கு கண்கலங்கியது. அவள் ராகினியை இறுக்கமாய் அணைத்துக் கொண்டாள். அவ்விறுக்கத்தில் ஐஸ்வர்யாவின் மனதிலி ருக்கும் கடந்த காலத்தின் ரணங்களும் ஒளிந்திருந்தன. ராகினிக்கு அவளின் கடந்த காலம் தெரியா தென்றாலும் அவள் முதுகை ஆதரவாக தடவி விட்டாள். அவளின் இச்செய்கை ஐஸ்வர்யாவிற்கு தங்கள் தாயை நினைவு படுத்தியது.

ராகினி ‘சரிக்கா நா பிரியாக்கு கோல் பண்ணி பாக்குறன் கிளம்பிட்டாங்களானு‘

ஐஸ்வர்யா ‘சரி மா‘

ராகினி பால்கனிக்குச் சென்று பிரியா விற்கு அழைக்க பிரியா நாங்க வரும் போது கோல் தரோம் எனக்கூற ராகினி போட்டோ எடுத்தவாறே மொட்டை மாடிக்கு செல்கிறாள். ஐஸ்வர்யா கண்ணாடியில் தன்னைப் பார்த்து எனக்கு மட்டும் எதுக்கு இவளோ வேதனை வெளிய யார்கிட்டயும் சொல்ல முடியல என கண்கள் கலங்க தன்னுள்ளே கூறிக்கொண்டவள் கண்களை துடைத்து கொண்டு ராகினி என அவளை கூப்பிட்டு கொண்டே மொட்டை மாடியை நோக்கிச் செல்கிறாள்.

(நேசம் தொடரும்)



**வெயிலில் காய்ந்து**
**மழையில் நனைந்து**
**உணவிற்காக வாலாட்டி**
**வீதிகளிலேயே வாழ்ந்து**
**விதியென மடியுமெங்களின்**
**அம்மண அந்தரங்களையும்**
**நின்று கல்லடித்து ரசிக்கும்**
**உங்களைப் போல**
**எங்களுக்கு**
**நிற்க நேரமுமில்லை**
**செய்திட ஏதும்**
**வேலையுமில்லை தான்.**

**அப்பு ராஜகுமார்**

# எது சரி?



இராமர் என்பவர் ஒரு கதாபாத்திரம்; இராமர் என்பவர் ஒரு அரசர்; இராமர் என்பவர் கடவுளின் அவதாரம். இராமர் என்பவர் ஒரு அடையாளம். கம்பர், இராமருடைய கதாபாத்திரத்தை, தம் கம்பராமாயணத்தில் மிக அழகாகவும் உயர்வாகவும் சித்தரித்து இருக்கின்றார். எனவே தான் இராமரைப் போல ஒரு கணவர் வேண்டுமென்று தமிழ்ப் பெண்கள் எண்ணுவது உண்டு. ஏகபத்தினிவிரதனாக இராமரை, கம்பர் காட்டியது ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த தத்துவத்தை உலகுக்கெல்லாம் உணர்த்துவதற்காகத்தான்.

இராமர் ஒரு உதாரண புருஷராக, அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக நல்லதொரு மன்னனாக, நல்லதொரு மகனாக, நல்லதொரு கணவனாக, நல்லதொரு அண்ணனாக, நல்லதொரு போர் வீரனாக இவ்வாறு எல்லா செயல்பாடுகளிலும் சிறந்து நிற்கக்கூடிய ஒரு கதாபாத்திரமாகத்தான் கம்பராமாயணத்தில் கம்பர் இராமரைக்கொண்டுவந்து நம் கண்முன் காட்டுகின்றார்.

இராமர் செய்யக்கூடிய செயல்களில் எல்லாம் ஒரு நீதி இருக்கும்; ஒரு தர்மம் இருக்கும். ஒரு எதிரியை எவ்வாறு வெல்வது? எதிரியை வெல்வதற்கு நண்பர்களை எல்லாம் எவ்வாறு ஒருங்கிணைப்பது? திறமை வாய்ந்தவர்களை எல்லாம் நம் பக்கம் எவ்வாறு சேர்த்துக் கொண்டு அரவணைத்து அவர்களின் வழியாக வெற்றியை பெறுவது? என்ற செய்தியை எல்லாம் இராமரின் வழியாக கம்பர் நமக்கு காட்டுகின்றார்.

அப்படிப்பட்ட இராமர் சித்தபிரமை பிடித்தவர் என்றும் சித்தம் கலங்கி, தன்னிலை மறந்து, ஒரு செயலைச் செய்தார் என்றும் சொல்லுவது ஒருக்காலும் ஏற்கவியலாத ஒன்றாகும். வாலி என்ற ஒரு கதாபாத்திரம் ஒரு வரம் பெற்று இருக்கிறது. அந்த வரத்தின் படி வாலியை எதிர்த்து எவர் போர் புரிந்தாலும் அவருடைய சக்தியில் பாதி வாலியை வந்து சேரும் என்பதுதான் அந்த வரம். அவனை எதிர்த்து போர் புரிந்தால் ராமருடைய பலம் குறைவது என்பது வேறு; இன்னொன்று வாலியை வதம் செய்வது ராமனுடைய நோக்கமன்று. வாலியை நேருக்கு நேர் நின்று போர் முடிந்து வெல்ல வேண்டும் என்ற எந்த ஒரு நிர்ப்பந்தமும் இராமருக்கு இல்லை. சுக்ரீவனைக் காப்பாற்றும் நோக்கத்திலே அவர் அந்த முடிவினை எடுக்கின்றார். அதே நேரத்தில் அவருடைய பலத்தையும் அவர் இழக்கத் தயாராக இல்லை. எனவேதான் மறைந்திருந்து வாலியை வெல்லும் யுக்தியை அவர் கையாளுகின்றார். இது எந்த விதத்திலும் தவறானதாகப் படவில்லை என்றாலும் கூட கம்பரே அது தவறு என்பதை வாலியின் வழியாகவும் தாரையின் வழியாகவும் கேள்வியை இராமரை நோக்கி எழுப்புகின்றார். இதுவே கம்பர் ஒரு நடுநிலையாளர் என்பதை காட்டுகிறது. தம்முடைய கதாபாத்திரம், தம் கதையினுடைய நாயகனே தவறு செய்தாலும் அது தவறு என்பதை எடுத்துக்காட்டக்கூடிய திறன் கம்பருக்கு இருந்தது. அவர் சொல்லும் விதத்தில் அதைச்சொல்லி இருப்பார். வைரமுத்து அவர்களைப் போல அவர்வேறு மாதிரியாக குறிப்பிடவில்லை.

கடவுள் மறுப்புக் கொள்கை தம் கொள்கை யாக இருக்கும் பொழுது, இராமரைக் கடவுளாக நினைத்து நடத்தப்படக்கூடிய கம்பன் கழகத்திலிருந்து ஒரு விருது அறிவிக்கப்படும் பொழுது அதனை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதே வரவேற்கத்தக்கது. அவ்வாறு கருத்துகளைத் தாண்டி, ஏற்றுக்கொள்ளும் மனநிலை ஒருவருக்கு வருமேயானால் அந்த அவையில் தம் கருத்துக்களை திணிக்கும் வகையிலோ அல்லது அந்த கம்பன் கழகத்தினுடைய கருத்துக்கு எதிரான ஒரு கருத்தை அவர்கள் மனம் புண்படும் வகையிலான ஒரு கருத்தினைத் தெரிவிப்பது என்பதோ அவை நாகரீகம் ஆகாது என்பதை யும் வைரமுத்து அவர்கள் உணர்ந்து இருக்க வேண்டும்.

இன்னொன்றும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒரு கொள்கையின் அடிப்படையில் ஒரு அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது அது நடத்தும் விழாவிலே ஒரு சிறப்பு விருந்தினராக இருந்தாலும் அந்த அமைப்பின் வழியாக விருதை பெறக் கூடியவர் மிகச் சிறந்தவராக இருந்தாலும் கூட அவர் அந்தக் கொள்கைக்கு எதிரான கருத்துக்களைச் சொல்வாரே ஆயின் அதனை அதே மேடையில் மறுத்துரைப்பது என்பது எந்தவித தவறும் ஆகாது. மறுக்காமல் அவை நாகரீகம் கருதி நாங்கள் வாளாவிருந்து விட்டோம் என்று சொல்வதும் கூட அவரது கருத்துக்களை ஏற்றுக் கொண்டதாகத்தான் பொருள்தரும். எனவே எந்த ஒரு அமைப்பும் அந்த அமைப்புக்கு எதிரான கருத்துக்களை அந்த அமைப்பில் விழாக்களிலே குறிப்பிடும் பொழுது உடனடியாக அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கருத்தை அங்கேயே பிரதிபலிக்க வேண்டும். அதுதான் சரியானதாகவும் இருக்கக் கூடும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

**இராம வேல்முருகன் வலங்கைமான்**



# அருமைப் பெண்கள்

## பாவலர் கருமலைத்தமிழாழன்

வடுக்கள்தாம் முகம்தன்னில் பதிந்த போதும்
வாட்டம்தான் வந்துவந்து சூழ்ந்த போதும்
படுத்துகின்ற மாமியாரின் சொற்கள் கேட்டும்
பழிதூற்றும் நாத்திமாரின் கொடுமை தாங்கிக்
கடுகடுக்கும் பகல்கணவன் கடுப்பை ஏற்றும்
கனிவுவொன்றே தன்னுடைய பண்பாம் என்றே
அடுத்தவரின் பசிதன்னைப் போக்கு தற்கே
அடுப்பாக எரிகின்றாள் நாளும் பெண்தான் !

வந்தபோது இளமைதுள்ள இருந்த வள்தான்
வாய்த்திட்ட கணவனொடு பிறந்த வர்கள்
சந்தமொழித் தம்பியரைத் தங்கை மாரைச்
சந்தனமாய்த் தன்பிள்ளை போலப் பேணிச்
சிந்தைதனில் தான்குழந்தை பெறுவ தற்கும்
சிந்திக்கா மலிளமைதான் கழிந்த போதும்
பந்தமுடன் புகுந்தவீட்டைக் கட்டிக் காக்கப்
பரிதாப உருவானாள் தேய்ந்தே பெண்தான் !

பிறந்தவீட்டின் உறவுகளைத் தோழி மாரைப்
பிரிந்துபுது வீட்டிற்குள் புகுந்த பின்பு
மறந்திட்டாள் தாய்வீட்டைச் சுற்றத் தாரை
மனமெல்லாம் கணவனவன் குடும்பம் எண்ணிப்
பறந்தவாறு நாளெல்லாம் பணிகள் செய்து
பக்குவமாய் அனைவரிடம் நடந்த போதும்
சிறந்தவளென் றேற்காமல் தாழ்வு செய்தும்
சிதையாமல் உழைப்பவள்தான் அருமைப் பெண்கள் !

# ப்ரோக்கோலி அவோகா ரசம்

துர்க்கா கார்த்திகேயன்

என்ன இன்னிக்கு அதிசயமா இரவு உணவுக்குச் சோறுன்னு பார்த்தா ப்ரோக் கோலி அவோகா ரசமாம்.

இதையா இன்னிக்கு செய்யப் போறா? அடக் கடவுளே என்னைக் காப் பாற்று.தொட்டுக்க என்ன என்று கேட்கத் திராணி இல்லாமல் அவசரமாகக் காலணி களைக் குனிந்த மாட்டினார்

'நான் கொஞ்சம் நேரம் பாண்டன் ஏரிவரைக்கும் போயிட்டு வரேன்'.

'சரி சரி நேரமா வந்துருங்க. சூடா



சாப்பாடு தயாராயிருக்கும்'.

அதற்காகவே நேரம் தாழ்த்தி வரணும் என்று மனதில் உறுதி பூண்டவராய் வேக நடை நடந்தார்.

காதில் மாட்டியிருந்த செவிப்பேசியில் எட்டு ஊரு எச்சில் ஊறும், எலந்தப் பழம், கல்யாண சமையல் சாதம், நித்தம் நித்தம் நெல்லுச் சோறு, என்னச்

சமையலோ பாடல்கள் வரிசையாக ஒலிக்க ஆரம்பித்தன.

ஏரிக்கருகே நுழையும் போதே பாண்டன் இலைகளின் மென்வாசம் மூக்கைத் துளைத்தது.

வாழ்க்கையிலேயே தான் செய்த உருப்படியான விஷயம் ஏரிக்கருகில் வீடு வாங்கியது தான். அது ஒன்றாவது மனதுக்கு இதமாக இருக்கிறதே.

பாண்டன் ஏரியின் பரந்த சமுத்திரம் ஒத்த நீர்ப்பரப்பை ரசித்தவாறு ஓரளவு நடந்தப் பின் ஏரியைப் பார்த்தவண்ணம் இருக்கும் இருக்கையில் அமர்ந்தார்.

பல வருடமாக உள்ள பழக்கம் தான். என்ன முன்பு எல்லாம் ஏரியைச் சுற்றி ஒரு சுற்று நடப்பார்.

இப்போது உடம்பு இடம் கொடுப்ப தில்லை. அதனால் அரைச்சுற்றுதான்.

அரசாங்க வேலையிலிருந்து ஓய்வுப் பெற்று பத்து வருடமாகிறது. இரண்டு பிள்ளைகளையும் நன்றாகப் படிக்க வைத்தார். மூத்தவர்

அமெரிக்காவிலும் இளையவர் ஆஸ்தி ரேலியாவிலும் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு மண முடித்துப் பேரப் பிள்ளைகளும் எடுத்தாச்சு. வருடம் ஒரு முறை தம்பதியர் பிள்ளைகள் வீட்டிற்கும் போய் வருவார்கள்.

நீர் நிலையில் லேசானக் காற்றுப்பட்டு நெளிக் கோலம் போட்டது.

அரை மணி நேரம் கடந்து இருக்கும்...

தூரத்தில் இருந்த காமன்வெல்த் பள்ளியிலிருந்து மாணவர்கள் வெளியே வருவதைப் பார்த்தார்.

இந்தியா, பங்களா உழைப்பாள சகோ தரர்களும் ஏரிக்கு வருவதை கண்டார். மாலை வேளையில் நட்புக் குழாமோடு உட்கார்ந்து இளைப்பாறுவார்கள்.

'சரக்சரக்' என ஒலி எழுப்பியவாறு நடுத்தர வயது இந்திய ஆண் ஒருவன் மெதுவோட்டம் ஓடிக்கொண்டிருந்தான். அடிக்கடி பார்க்கும் முகம்தான். அவன் பின்னே அவனுடைய மனைவி விரைவு நடை போட்டு வருகிறாள்.பாவம் அந்தப் பெண்ணுக்குக் அவளுடைய கணவனைப் போல ஓட முடியாது போல.

அவள் முகத்தைப் பார்த்தால் அவருக்கு ஊரிலிருக்கும் தன் சகோதரி பெண் ஞாபகம் வரும்.

இந்தப் பெண் இன்னிக்கு என்ன சமைத் திருக்கும். அவர்கள் வீட்டில் ப்ரோக்கோலி



துவையலோ அவோகா பொரியலோ?.

இருக்கலாம் இருக்கலாம் எல்லாம் இந்த யூடியூபினால் வந்த வினை. உலகம் முழுவதும் இருக்கிற சமையலைக் கத்துக் கிட்டு இந்தப் பெண்கள் படுத்திற பாடு இருக்கே...

அரண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்ன்னு சும்மாவா சொன் னாங்க.

குளிர்ந்த ஏரிக்கரைக்காற்றும் அவர் மனதை இளைப்பாற்றவில்லை அன்று.

மனம் பல கசப்பை மேலாகக் கொண்டு வந்தது.

சில நாட்கள் முன்பு

'இன்னிக்கு சாமைஇட்லியும்முட்டைக் கோஸ் சட்னியும் செஞ்சிருக்கேன். நான் கோயிலுக்குக் கிளம்பறேன். நேரத்துக்கு நீங்கப் பசியாறிடுங்க'

‘ஏன் ஏன் அதை ஏன் செய்யணும் இதுக்கு சமைக்காமலேயே விட்டுருக்கலாமே‘

‘சாமையிலே எவ்வளவு சத்து இருக்கு தெரியுமா. உங்களுக்கு எப்பப்பாரு தேங்காய் சட்னி தவிர ஏதும் தெரியாது‘

அவள் கூறியதைக் கேட்டு மனம் தொய்ந்து ’தொப்’ பெனச் சோபாவில் உட்கார்ந்தார்.

ஒரு நாளாவது சாதாரண இட்லியும் தேங்காய் சட்னியும் சாப்பிட மாட்டோமா என்று மனம் ஏங்கியது.

கேட்டால் சண்டை தான்.

வரும். அவர்களிருவருக்கும் கருத்து வேற்றுமையே இந்தச் சமையலினால்தான்.

சரி அப்படி இப்படின்னு ஓட்டினா நாள் கிழமைன்னாலும் விடுவாளா? மாட்டாள். அன்னிக்கும் லோங்கான் பழ பாயசம், சிவப்பு அரிசியில் சர்க்கரைப் பொங்கல், தட்டைப்பயறு வடைன்னு அவர் ஆசையைத் தட்டி விடுவாள்.

யாராவது விருந்தாளிக வந்தா அப்ப இதைவிடப் பெரிய கூத்து நடக்கும்.

வந்தவுடனேயே தாகசாந்திக்கு சங்குப்பூ ஜூஸ்.

பிறகு சிற்றுண்டிக்கு பாண்டன் இட்லி, கொத்தமல்லி தோசை, கோதுமை ரவை கிச்சடி, ஓட்ஸ் பொங்கல், வாழைத்தண்டு சட்னி, பலாக்கொட்டை வடை, தாமரைத் தண்டில் டிபன் சாம்பார், தர்பூசணி அல்வா கடைசியா தாய்லாந்து துளசி போட்ட மோர்னு அதகளம் தான் போங்க.

விருந்தாளிக முகம் அனிச்சம் பூ



மாதிரி வாடிடுமேன்னு எதற்கும் சொல்லி வைப்போம்னு

‘ஏம்மா இப்படி எல்லாம் சமைச்சு வந்தவங்களை அவஸ்தைப்படுத்தற‘

‘நாக்குக்கு ருசியா இருப்பதெல்லாம் உடம்புக்கு நல்லதில்லைன்னு தெரியாதா உங்களுக்கு‘

‘அது சரி அதுக்காக வர்றவங்களை ஏம்மா சோதிக்கிற ‘

‘உங்களுக்குத் தான் நாக்கு நீளம். தஞ்சாவூர்காங்க இல்லை அதான் வக்க ணைக்கு குறைச்சல் இல்லை அவர்களுக்கு இதெல்லாம் பிடிக்கும் பாருங்க‘

தன் வேர்களை இழுத்து விட்டதால் சற்று மனம் விசனப்படுவார்.

இந்தப் பெண்களே மோசம். எப்ப எதைப் பேசணும்னே தெரியாது.

இருந்தாலும் அவருடைய தஞ்சாவூர் பின்னணி மேல் அவருக்கு அலாதி பிடிப்பு தான். எதற்காகவும் மாற்றிக் கொள்வதாக இல்லை.

சாப்பிடும்போது விருந்தாளிக முகத்தைப் பார்த்தால் எந்த வாட்டமும் தெரியாது. ஆனா என்ன

ஒரு முறைக்கு மேல் மீண்டும் அவர்கள் வீட்டிற்கு வருவ தில்லை. வேலைப் பளு வாகவும் இருக்கும்.

சரி இப்படியே போகுது சாப்பாட்டு சாகரம் என்றால் காலையிலே எழுந்தவுடன் முதலில் சியா விதை வென்னீர் அரை லிட்டர்.

அரை மணி நேரம் கழித்து தான் காப்பியே. பிறகு மூத்த குடி மக்களுக்கென்று அவர்கள் பேட்டையில் நடக்கும் உடற்பயிற்ச்சிக்கு கட்டாயமாகப் போக வேண்டும்.

காலை உணவாகச் சுண்டல் வகைகள் ஏதாவது ஒன்று.பதினொரு மணி அளவில் கடுகடுக்கும் பச்சிலைத் தேனீரும் பப்பாளி தர்பூசணி போலப் பழத்துண்டு ஏதாவது ஒன்று.

சமயத்தில் தான் பொது மருத்துவமனையில் இருக்கிறோமோ என்றுக் கூட அவருக்குச் சந்தேகம் வந்துவிடும்.

மதியம் ஏதாவது ஒரு ஊர்பெயர் தெரியாத அரிசியில் வடித்த சாதம்

பாரம்பரிய வகையாம். சாம்பார் என்ற பெயரில் பிள்ளைகள் படிக்கும் காய்கறி அட்டை இருக்குமே அதில் உள்ள ஒவ்வொன்றையும் போட்டுப் பரிட்சித்து பார்க்கணும் அவர் மனைவிக்கு.

பிறகு கண்டத்திப்பிலி வகை மூலிகை ரசம் அது கொஞ்சம் பரவாயில்லை.

நாட்டு வகையும் மேற்கத்திய வகை காயும் கலந்த பிரட்டல் என்று நாக்கு மரத்து விடும் சமையல். பத்து வருடமாக மரக்கறி உணவு தான்.வரும் முன் காக்கிறாளாம்.

மாலை வேளையில் சுக்கு காப்பியும் கொய்யாவும்.

எண்ணெயில் குளித்த சமாச்சாரம் எதுவும் அவர்கள் வீட்டில் கிடையாது.

இரவு உணவுக்கு ஆவியில் வேக வைத்த உணவு. இட்லி இடியாப்ப வகை தான். சரி அதாவது நல்லாயிருக்குமா.ம்ஹூம்.

அரிசியே சேர்க்காத பல வகை இட்லி அதற்குப் பல் வகை தாவர

சட்னி. பொட்டானிக்கல் கார்டனே வீட்டுக்குள் வந்தது போல இருக்கும் அவருக்கு.

இடியாப்பத்திலும் ஒரு சிக்கல். வத்தக் குழம்பு இடியாப்பம், சோள இடியாப்பம் என்று அதிலும் பன்முகத் திறமை தான்.

அம்மா இப்படியா சமைச்சு போட்டது. சாம்பார்னா முருங்கையில் தான், அடைன்னா அவியல், சொதின்னா காரக்கறி, இடியாப்பம்னா சால்னாவும், கோழிப் பிரட்டல்னா பருப்புருண்டை குழம்புன்னு ஆசையா சமைச்சு போடுமே. தவ்வு பிரட்டலும் நெத்திலி சம்பலும் அம்மா கைமணத்தில் தனி ருசி தான். நினைக்க நினைக்கக் கண்களின் ஓரத்தில் கண்ணீர் வழிந்தது.

என்ன செய்வது. கடந்த காலம் திரும்ப வராதே. அது தவிர அவருக்கு ஒரு வென்னீர் கூடப் போடத் தெரியாது என்பது தான் இதில் சுவாரசியமே.

‘ ஹாய்! நல்லருசு ‘

# பொண்ணு கிடைக்கல

பல்லவி

பொண்ணு பார்த்து நானும் இங்க
முடிஞ்சு போனேன் டா
திண்ணையில ஏறி இறங்கி - முட்டி
ஒடிஞ்சு போனேன் டா

கலர் கலரா பொண்ணு
நிறைய ஊரில் இருக்குது
கை பிடிக்க கரம் பிடிக்க
மட்டும் மறுப்பு கூறுது

சரணம் 1

எம்எஸ்சி எம்பிபிஎஸ் படிப்பு கேட்குது
எம்பளாய்மென்ட் நியூஸ் போல அடுக்கி வைக்குது..

மாசமான சம்பளம் எவ்வளவு கேட்குது
மோசமான அப்பனைய தாண்டி நிக்கிது..

வயசும் உயரம் எத்தனைனு அளந்து பாக்குது
வருமான பே சிலிப்ப தட்டி நோக்குது..

தோட்டம் தொறவ இப்ப யாரும் கேட்பதில்லையே
கட்டுன வீடு கடன கேட்க மறப்பதில்லையே..

சரணம் 2

மண்ண பார்த்து நின்ன பொண்ணு
கண்ணப் பார்க்குது
தனக்கு நிகர் தராசு வச்சு
நிறுத்து கேட்குது

தன் வாழ்க்கை தன் கையில்
பொண்ணு நினைக்குது - அது
தப்பு இல்ல என்று தானே
ஆணும் உரைக்குது... ஆனால்

கரட்டு மேடு விவசாயம்
ஏன் ஒதுக்கிற
கரம்பு சட்ட போட்டவன
அழுக்கா ஏன் பார்க்கிற...

எல்லாம் டைக் கட்டி கம்ப்யூட்டர் கேட்டா
எவன் சோறு போடுவது..?
திடீரென ஊர அடைச்சா
இவன விட்டா யாரைத் தேடுவது ..?

**ம.சேரன்**, வாலாந்தூர்

குரல் கேட்டுத் திரும்பினால்

அவருடைய நீண்ட நாள் சீன நண்பர் லீ தன்னுடைய மிதிவண்டியை தள்ளிக் கொண்டு அருகே வந்தார்.

இவருக்கும் சீன மொழி தெரியும் என்ப தால் லீயுடன் கலகலக்க ஆரம்பித்தார்.

இவருடைய வயதுதான் லீக்கும் இருக்கும். ஆனால் நல்ல சுறுசுறுப்பு.

இருவரும் பேசிக் கொணடே இருக்க ஆக்கர் சூரியன் மெதுவாக மறைந்துக் கொண்டிருந்தான்

ஏரி எங்கும் செந்நிறமாக்கி.

அன்று என்னவோ லீக்கு அவ்வொளி யில் தன் மிதிவண்டியுடன் புகைப்படம் எடுக்கணுமாம்.

லீயின் ஆசையைப் பல கோணங்களில் படம் எடுத்து நிறைவேற்றினார். இந்த வயதிலும் லீயின் குலையா உற்சாகம் நல்லரசையும் தொற்றிக் கொண்டது.

‘இரவு உணவுக்கு என்னாலா?‘

கடையிலிருந்து வாங்கியிருந்த பீ ஹூன் பொட்டலத்தைக் லீ காண்பித்தார்.

‘உனக்கு அலுக்கவே அலுக்காதா இதையே எப்படி தினமும் சாப்பிடற‘

‘வேற என்ன செய்யறது. இது மூன்று வெள்ளி தான். இல்லைனா நானில்ல சமைக்கணும்.

உனக்கு இருக்கற மாதிரி எனக்கு

வீட்டில் சமைச்சு போட மனைவியா இருக்கு' என்று சிரித்தார்

ஆம் லீயின் மனைவி மறைந்து பல வருடமாகிறது. குழந்தைக் குட்டிகளும் கிடையாது.

காலையில் சுயநளபாகம். இரவு மட்டும் கடையில்.

'சாப்பாட்டுல்ல என்னலா இருக்கு. அதெல்லாம் நாம நிறைய சாப்பிட்டாச்சு. நம்ம அரசாங்கம் பரிந்துரைக்கிற மாதிரி ஆரோக்கியமான உணவைச் சாப்பிட்டா தெம்பா இருக்கலாம்' என்றவாறு தன் புஜத்தை வளைத்துக் காண்பித்தார்.

எதையுமே பொருட்படுத்தாத மனிதர். இந்த வயதிலும் தன்னை ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுத்திக் கொண்டு உற்சாக மாய் இருப்பார்.

சிறிது நேரம் கழித்து லீயிடம் விடை பெற்று விட்டு வீடு நோக்கிச் சென்றார் நல்லரசு.

சாலைச்சந்திப்பு அருகே நிற்கும்போது வேகமாக கடந்துச் சென்ற வண்டியில் இருந்த வாசகம் அவரைக் கவர்ந்தது.

உங்கள் தேவைக்கேற்ப நாங்கள் சேவை செய்கிறோம்.

ஏனோ வீட்டில் அடுப்படியில் வெந்துக் கொண்டிருக்கும் மனைவி ஞாபகம் வந்தது.

புளோக் அருகே செல்லும் போதே ப்ரோக்கோலி அவகேடோ ரசம் மணம் கீழ்த்தளம் வரை வீசியது போல ஏனோ அன்று அவருக்குத் தோன்றியது.

# உன் உயர்வில்...

நீ நினையாத பொழுதொன்றில்
பெருஞ்சுமையொன்று
உன் தலைமீது பாரமாகலாம்.

நீ எண்ணாத தடைகள் வந்து
அழுத்தங்கள் தந்து
உன் பாதையை மறைக்கலாம்.

நட்பென்று நீ நினைத்தோர்
சட்டென்று திசைமாற
உன் நிலை தளர தடுமாறலாம்.

மெய்யென்று நீ நினைத்த
நாடகங்கள் அரங்கேற
மெய்யுணர்ந்து நீ நொந்துடையலாம்

எல்லாமும் இனிதாகும்
எல்லோரும் நல்லோரென நினைந்தே
உலகில் நீ ஏமாறலாம்

தடை தாண்டி நீ சென்றிடு
கண்விழித்து மீண்டெழுந்திடு
கடந்தவை யாவும் கனவாகலாம்

காட்டிக்கொடுத்தோரும்
கண்டு மகிழ்ந்தோரும் நாளை
உன் உயர்வில் வாய் பிளக்கலாம்

அன்றும் இன்றுபோல்
அழகாய் புன்னகைத்திடு
உன் சாதனைகள் சரித்திரமாகலாம்!

செண்பகச் சோலையாள் ஆய்ஷ்



# தவம்

**சுந்தரிமணியன், புதூர்**

அந்திமாலையின் இளவெயிலை ரசித்துக் கொண்டிருந்த கண்மணிக்கு முதுவேனில் காலத்தின் இயற்கையின் அழகு விருப்பமான ஒன்று. அண்டை வீட்டில் பூத்திருந்த செம்பருத்திப்பூ என்னைப் பார்க்கமாட்டாயா? என்பது போல் தலையை நீட்டி எட்டிப்பார்த்தது. நல்ல பால்ரோஸ் கலரில் அதன் இதழ்கள் விரிந்திருந்தன. தவிட்டுக் குருவிகள் எல்லாம் கீச் கீச்சென்று கத்திக்கொண்டு இளம் மாலையைத் தாலாட்டிக் கொண்டிருந்தன. கண்மணிக்கு மனதில் இருந்த அழுத்தமெல்லாம் வடிய இந்த இயற்கைதான் வடிகாலாக இருந்தது.

வீட்டிலிருந்து வந்த கார்முகிலனின் முனகல் சத்தம் தன்னையும் அறியாமல் ஒரு அலுப்பை உண்டு பண்ணதியது. எத்தனை காலம்தான் இந்த நிலை? இதிலிருந்து விடுபட்டு ஓடிப்போய்விடலாமா எனத் தோன்றியது. அதிகாலையில் எழுந்து சமைத்து கார்முகிலனுக்கு பிரஷ் செய்ய பேஸ்ட் எடுத்துக் கொடுத்து கொப்பளிக்கச் செய்து, பெட்பேன் வைத்து கழிவைக் கொட்டி சுத்தம் செய்து, சாப்பிட அமரும்போது சாப்பாடும் ஒருவித வெறுப்பை உண்டு செய்கிறது. இது ஆறுமாசம் ஒரு வருசம் என்றால் பரவாயில்லை, ஆறு ஆண்டுகள் ஓடிவிட்டது. இன்னும் இவருக்குச் சரியாவதுபோல் தெரியவில்லை.

டாக்டரிடம் கேட்டால் உடல்நிலை தேறிவிட்டது. ஆனால் காலில் வெரிகோஸ் பெயின் இருப்பதால் நடக்கமுடியாமல் வலி முடக்கிவிட்டது என்றார். மருந்து, மாத்திரை, மருத்துவமனை என்று அலைந்ததுதான் மிச்சம். வருடங்கள் ஓடியும் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை. காலையில் இருந்து ஒரே மாதிரியான வேலை மனம் மகிழ்ச்சியில்லாமல் சோர்ந்து போனது.

தனக்கான சமையல், தனக்குப் பிடித்தமான சினிமா, கலை, இலக்கியம் என்ற ரசனைகள் எல்லாம் காணாமல் போயின. உறவுகள் எல்லாம் தள்ளிப்போயின. எப்போதும் வருபவர்கள் கூட வந்து எட்டிப் பார்ப்பதில்லை. படுக்கையில் கிடக்கும் இவரின் நிலை இயல்பான வாழ்க்கையின் மகிழ்ச்சியை அழித்துவிட்டது. கண் மணிக்கு துறுதுறுவென்று இருந்த இளமைக்காலங்கள் மனதில் ஓடி அவ்வப்போது ஏக்கத்தைக் கொடுக்கும். ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் வீட்டில் சுகமாக இருக்கலாம் என்ற கனவு தகர்ந்தது. தன்னுடைய உடலும் சோர்வடைவதைக் கண்கூடாக உணர்ந்தாலும் அதைப் பற்றி பெரிதுபடுத்தவோ பேசவோ ஒருவருமில்லை.

மகன் கபிலனுக்கு படிப்பு, அவனது வேலை மட்டுமே சரியாக இருந்தது. அவன் மட்டுமே தனக்கான பிடிமானமாகக் கண்மணி எண்ணினாள். மகனிடம் பேசினால் மனதிலுள்ள கவலைகள் சற்றுக்

குறையும். அதுவும் தனது கணவன் கார்முகிலனின் உடல்நிலை, மருத்துவம் பற்றிய பேச்சே மிகுதியாக இருந்தால் புளித்துப் போய்விடும். வீடு தாண்டிய விசயங்கள் பேச மனது அலைபாயும். நேரமில்லாததால் கபிலனும் “பிறகு பேச லாம்மா” என்பான். அத்தோடு ஊமை யாகிப் போவாள் கண்மணி.

அன்றொருநாள் திடீரென்று காலையில் காப்பி போட்டு அவரை எழுப்பியும் கார்முகிலன் மூச்சுவிடத் தடுமாறி புஸ் புஸ் என்று துன்பப்பட்டதை உணர்ந்து கபிலனிடம் சொல்லி ஆம்புலன்சுக்கு போன் செய்து வரச்செய்தாள். கபிலனும் அவளும் டிரைவரும் சேர்ந்து கார்முகிலனை ஆம்புலன்சில் ஏற்றி, மருத்துவமனையில் சேர்த்து ஐசியுவில் வைத்தார்கள். சாதரண மாகச் சரியாகிவிடுவார் என்று நினைத்த கண்மணிக்கு

“டாக்டர் பிழைப்பது சிரமம்” என்று சொன்னவுடன் திடுக்கிட்டுப் போனாள். தனக்குத் தெரிந்த நண்பர்களை வரச் செய்தாள். கபிலனும் அவளும் சேர்ந்து பேசினார்கள்.

“அம்மா அப்பா பிழைக்கிறாப்பல தெரியல. வீட்டுக்குக் கொண்டு போய்ட லாமா?”

“இல்லைப்பா. வேண்டாம் இன்னும் கொண்டுபோய் என்ன செய்யப் போகி றோம். அவர்கூடப் பிறந்தவங்க சொல்லி விட்டும் ஒருத்தர்கூட வந்து எட்டிப்பாக்கல. நமக்கு உதவி செய்ய ஒருத்தரும் இல்ல. வீட்டிற்குக் கொண்டு போனால் சாஸ்திர சம்பிரதாயம் செய்யணும். எடுத்த பிறகு வீட்டைக் கழுவணும் சுத்தம் செய்யணும் வர்றவங்களுக்குச் சாப்பாடு ஏற்பாடு செய்யணும். நம்மால முடியாது. பேசாம மின்மயானத்துக்குக் கொண்டு போய் தகனம் பண்ணறதுதான் சரியா இருக்கும்” என்றாள்.

மறுநாள் காலையில் இறந்துபோன கார்முகிலனின் பிணத்தை மின்மயானம் கொண்டு சென்றார்கள். ஆறு ஆண்டுகள் கூடவே இருந்த கணவன் இல்லாதது பெரும்துன்பத்தைத் தந்தாலும் இனி மேல் அரக்கப் பரக்க காலையில் எழவேண்டாம். இரவு அவர் எப்படி இருக்கிறார் என விழித்துப் பார்க்கத் தேவையில்லை. அவரது கழிவையும் சுத்தம் செய்யவேண்டாம். தனக்கான வாழ்க்கையை வாழலாம் என்பது ஒரு வித அமைதியைத் தந்தது.

மறுநாள் தனது தோழி ஆதிரை துக்கம் கேட்கவர,

“என்னப்பா சாரோட பிணத்தை வீட்டுக்கு ஏன் கொண்டுவரல” என்றவ ளுக்கு,

“ஊரையே கூட்டி அழுவதால் என்ன ஆகப்போகிறது. இருக்கும்போது ஒருவரும் உதவி செய்யவில்லை. போனபிறகு வந்து என்ன பயன்? அதனால்தான் வீட்டிற்குக் கொண்டுவரவில்லை” என்றாள் தெளிவாக. சொந்தபந்தங்களின் ஆதரவின்மை அவளை இந்த முடிவுக்குக் கொண்டுவந்திருக்கவேண்டும் என்பதை உணர்ந்த ஆதிரை,

“நீ எடுத்தது சரியான முடிவுதான்” என்றாள்.

“இனிமேல் அவர் உயிரோடு இருந்தால் மிகவும் கஷ்டப்படுவார்” என்று கலங்கிய கண்மணியின் கைகளை ஆறுதலாகப் பற்றினாள் ஆதிரை.

ஆறு ஆண்டுகளாகப் படுக்கையில் கிடந்த தன் கணவனை எட்டியும் பார்க்காத உறவுகளுக்காக ஏங்குவதை விட தன்னால் முடிந்த அளவு வருடக்கணக்கில் பார்த்து கணவனின் இறுதிப்பயணத்தை முடித்தாயிற்று என்ற நிறைவுதான் அவள் மனதில் நிலைத்திருந்தது.

# கடவுள் தந்த வரம்

**கவிமணி இரஜகை நிலவன்**
மும்பை



'பத்மா எல்லாப் பொருட்களையும் ஒதுக்கி வைத்து வீட்டு டி.வியிலிருந்து பேட்டி எடுக்க வருபவர்களை வரவேற்க தயாராகிக் கொண்டிருந்தார், இன்றைய இந்தியாவின் பிரபல பரத நாட்டியக் கலைஞர், மிகவும் நன்றாகப் பாடக் கூடியவர்.

திரைப்படங்களில் கூட நடித்தும் பினனணி குரலில் பாடியும் இருக்கிறார்.

பேட்டிகள் என்பது அவருக்கு அலுத்துப் போய்விட்ட சமாசாரம். இருந்தாலும் தன்னுடைய இமேஜைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு தன்னைப் பற்றி தனி அபிப்பிராயம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்.

கொஞ்ச நேரத்தில் டி.வி. கேமிரா சகிதம் நிருபர்கள் வந்துவிட எல்லோரையும் அமரச் சொல்லி விட்டு நீங்கள் கோணம் பார்த்து எப்படி அமர்ந்து எங்கே அமர்ந்து பேசினால் டி.வி.யில் அழகாக வரும் என்று பாருங்கள், நான் சாப்பிடுவதற்கு கூல்டிரிங்ஸ் கொண்டு வருகிறேன் என்றார்.

நீங்கள் ஒரு வேலைக்காரப் பெண்மணி வைத்துக் கொள்ள கூடாதா? என்று நிருபர் கேட்டார்.



ஸாரி சார், போன முறையும் இதே கேள்வியைத் தான் கேட்டீர்கள், என் வீட்டில் எல்லாமே என் கைப்பட செய்தால் தான் எனக்குப் பிடிக்கும் என்றவாறு உள்ளே சென்று குளிர்பானம் எடுத்து வந்து எல்லோருக்கும் கொடுத்தார்.

'சரி மேடம் நீங்கள் சோபாவின் அந்த ஓரத்தில் அமருங்கள். எங்கள் பாலு இந்த பக்கத்தின் கடைசியில் அமரட்டும்? என்று கேமிரா மேன் சொல்ல சிறிது நேரத்தில் பேட்டி ஆரம்பித்தது.

எல்லோருடைய பேட்டிகளும் ஒரே மாதிரியாக இருப்பதால் கொஞ்சம் வித்தியாசமாக கேட்கலாம் என்று எண்ணு கிறேன். ஒன்றும் தவறாக நினைக்க மாட் டீர்களே என்றான் பாலு.


குண்டக்க மண்டக்க கேட்காமல் தெளிவாக இருந்தால் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

நீங்கள் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை?

அந்தக் கேள்வியை எதிர்பாராத பத்மா கண்டிப்பாக பதில் சொல்ல வேண்டுமா? என்று கேட்டார் கொஞ்சம் திகைப்புடன்.

விருப்பம் இருந்தால்... ஆமாம். குமாரி பத்மாவதி குணசேகரனுக்கு வயசு என்ன இருக்கும்.

நாற்பதைத் தாண்டிக் கொண்டிருக்கி றேன். பெண்களின் வயதை சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் பிறந்த ஆஸ்பத்திரியில் போய் பிறந்த தேதி தான் தேட வேண்டும் போலிருக்கிறது என்று சிரித்த பாலுவுடன் சேர்ந்து சிரித்த பத்மா, அப்படியெல்லாம் ஒன்று மில்லை எனக்கு நாற்பத்தி நான்கு






**கவிஞர் அ. வெண்ணிலா அவர்களின் ஆய்வுத் தொகுப்பு தேவரடியார்...**

**கவிஞராக பயணத்தைத் தொடர்ந்த அ. வெண்ணிலா சிறுகதையாளராகவும் நாவலாசிரியராகவும் கட்டுரையாளராக வும் பரிணாமம் பெற்று ஓர் ஆய்வாளராக தந்திருக்கும் தொகுப்பு தேவரடியார். ஆறு கவிதைத் தொகுப்புகள், இரு சிறுகதைத் தொகுப்புகள், ஒரு கட்டுரைத் தொகுப்பு, மூன்று கட்டுரைத் தொகுப்புகள், ஒரு வரலாற்று நாவல் வெளியிட்டுள்ளார். பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை ஒரு தொகுப்பாகவும் கவிதைகளை ஒரு தொகுப்பாகவும் தந்துள்ளார். தேவரடியார் என்னும் தேவதாசிகள் குறித்த அவரின் ஆய்வுத் தொகுப்பு தேவரடியார். கலையே வாழ்வாக என்று அடையாளப் படுத்தியுள்ளார். கோவில்களில் இறை சேவைக்காக நேர்ந்து விட்ட தேவரடியார்கள் கலைகளைக் கற்று தேர்ந்து வளர்ந்து வந்திருக்கிறார்கள் என்கிறார். தேவரடியார்கள் மீதான மதிப்பீட்டை உயர்த்திக் காட்டியுள்ளார். அகநி வெளியிட்டுள்ளது. தொடர்பு எண் 9444360421**

பொன். குமார்

வயதாகிறது என்றார்.

பாலு திரும்பிப் பார்க்க கேளுங்கள் என்றார் பத்மா.

பரத நாட்டியத்தின் பேரொளி என்று பட்டம் வாங்கிய மேதையே. நீங்கள் இன்றும் என் கேள்விக்குப் பதில் சொல்ல வில்லை.

என்ன? என்று தெரியாதது போலக் கேட்டார் பத்மா.

நீங்கள் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று நிருபர் பாலு கேட்ட போது அவர்களிடையே மனத்திரையில் அந்தக் காட்சி விரிந்தது.

பாலன், நான் கடைசியாகக் கேட்கி றேன் உங்கள் பதில் என்ன?

எத்தனை முறை நீ என்னைக் கேட்டா லும் உனக்கு சொல்லப் போகின்ற பதில் இது தான் பத்மா.

அது முடியாத காரியம்.

அப்படியென்றால் நாம் பிரிந்து விடுவது தான் நல்லது.

பாலன் உருகி உருகி என்னைக் காதலித் தீர்களே, அது எல்லாம் போலிதானா?

உன்னை விட்டுப் பிரிந்து போனாலும் நான் உன்னைக் காதலித்துக் கொண்டே இருப்பேன் பத்மா.

பின் என்னை மணந்து கொள்ள மட்டும் ஏன் இத்தனை கண்டிசன் போடுகிறீர்கள்.

இது கண்டிசன் என்று தப்பாக கணக்கிடுகிறாய் பத்மா. நான் காதலிக் கும் பெண் என் மனைவியின் அழகை நான் மட்டும் தான் ரசிக்க வேண்டும். திருமணமான பிறகும் உன் நடனத்தை நாக்கைத் தொங்கப் போட்டு பார்ப்ப வர்கள் உன் உடல் அழகை இரசிப்பதை நான் காணவிரும்பவில்லை.

இது தப்பான அபிப்பிராயம் பாலன், பரதம் என்பது ஒரு கலை, உடலை ரசிக்க வருவதற்கு இது ஒன்றும் காபரே டான்ஸ் அல்ல. நான் திருமணத்திற்கு பிறகும் நடனம் ஆடினால் கலையை ரசிக்கும் ரசிகர்கள் தான் வருவார்களே தவிர நீங்கள் நினைக்கிற விசிலடிக்கும் கூட்டம் பரத நாட்டியம் பார்க்க வராது. ரெக்கார்ட் டானஸ் பார்க்கத் தான் போகும்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இப்போது பத்மாவதி குணிசேகரனாக இருக்கும் நான் உங்கள் மனைவியான பிறகு பத்மாவதி பாலனாகி விடுவேன், அதனால் உங்களுக்குத் தானே பெருமை.

பொறுமைகளை எல்லாம் மூட்டையில் கட்டித் தூக்கிய போடு. நன்றாக ஞாபகம் வைத்துக் கொள் பத்மா, நான் வேண்டுமா? இல்லை பரதம் வேண்டுமா? என்று முடிவு எடுத்து விடேன்.

இரண்டு கண்களில் வலது கண் வேண் டுமா இல்லை இடது கண் வேண்டுமா என்று கேட்டால் எனக்கு இரண்டு கண்களுமே வேண்டும் என்று தான் சொல் வேன் பாலன்.

இது விதண்டாவாதம் பத்மா.

நானா விதண்டா வாதம் செய்கிறேன். சரி நான் பரத நாட்டிய மாடியதால் தான் நாம் சந்திக்க முடிந்த தென்பதாவது புரிகிறதா?



முடிவாகச் சொல்கிறேன் பத்மா, என்னைத் துணைவனாக்கிக் கொள்ள விரும்பினால் உன் காற்சலங்கைகளை மூட்டைக் கட்டி மூலையில் வைத்து விடுவது தான் நல்லது.

கொஞ்சம் கொஞ்சமாக பாலனை விட்டு பரதத்திலே வெறிபிடித்தவளாக முன்னேறி எத்தனையோ அவார்டுகள் வாங்கி எத்தனையோ பட்டங்கள் பெற்று, பல நாடுகள் போய் நிகழ்ச்சிகள் நடத்தி ஜனாதிபதியிடமே அவார்டு வாங்கிவிட்ட நிலையில் பாலனை நினைவு படுத்திய நிருபரை கூர்ந்து பார்த்தாள் பத்மா.

மேடம் உங்களுக்கு விருப்பமில்லை என்றால் பதில் சொல்ல வேண்டாம். நான் வேறு கேள்விகள் கேட்கிறேன் என்றான் நிருபர் பாலு.

இவனிடம் நான் காதலில் தோல்வியுற்ற வன், பரதத்திற்கு பதிலாக என் காதலை இழந்தவள் என்று கத்தலாமா என்று யோசித்தவள் ஒரு நிமிடம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு கல்யாணத்தில் எனக்கு நாட்டமில்லாமல் போனது தான் காரணம். திருமணம். என்ற கூட்டுக்குள் நான் முடங்கிப் போயிருந்தால் கணவன் குழந்தைகள் என்று என் வட்டமே சுருங்கிப் போயிருக்கும்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் போல கணவன் அமைவ தெல்லாம் கூட என்று ஆரம்பித்த நிருப ரிடம் இது கூட எனக்குக் கடவுள் தந்த வரம் தானே, நான் திருமணம் முடித்திருந்தால் இன்று பேர் புகழ் பெற்று டி.வி. நிகழ்ச்சிக்கு உங்கள் முன்னால் அமர்ந்திருக்க முடியுமா?

இனியும் 'வாழ்வில் உங்களுக்கு ஒரு நல்ல துணை கிடைத்தால் மணந்து கொள்வீர்களா?

கொஞ்ச நேரம் யோசித்தவள் தன்னு டைய இமேஜை பாதிக்கக் கூடாத பதிலாக சிந்தித்து கண்டிப்பாக மணந்து கொள்வேன். பாருங்கள் மக்களிடம் திருமணம் என்பது செக்ஸிற்காகவும் குழந்தைகள் பெற்றுக் கொள்வதற்காகவும் தான் என்ற அபிப்பிராயம் உள்ளது.

இருமனம் இணைவதே திருமணம். இரண்டு மனங்கள் ஒன்று பட்டு சேர்ந்து வாழ்க்கைப் படகை ஓட்டிச் செல்வது தான் திருமணம். நல்ல துணை கிடைத்தால் கண்டிப்பாக மணந்து கொள்வேன் என்று சொல்ல நிருபர் வரிசையாகக் கேட்டுக் கொண்டிருக்க இனிதாக பேட்டி முடிந்து டி.வி, காமிராகாரர் வெளியே கிளம்பி விட நிருபர் பாலு பத்மா என்னைத் தெரிகிறதா? என்று கேட்டான்.

நன்றாகத் தெரிகிறது பாலன். ஆனால் நாம் இருவரும் இரு துருவங்களுக்கு சென்று விட்டவர்கள்.

பேட்டிக்காக நான சில விஷயங்களைச் சொன்னாலும் இனி என் வாழ்வில் திருமணம் என்பதற்கே இடமில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு நீங்கள் போகலாம் என்றாள் .

# தமிழ்நாடு ரெசிப்பீஸ்



## 5 - மீன் குழம்பு...



### I. பாரம்பரிய தமிழ் மீன் குழம்பு

**தேவையான பொருட்கள் :**

மீன் – ½ கிலோ
வெங்காயம் – 2 (நறுக்கியது)
தக்காளி – 2
பூண்டு – 8 பல்
மஞ்சள் தூள் – மேசை கரண்டி
மிளகாய்த் தூள் – 1½ மேசை கரண்டி
தனியா தூள் – 2 மேசை கரண்டி
புளி – நெல்லிக்காய் அளவு (பிழிந்து வைத்தல்)
எண்ணெய் – 4 மேசை கரண்டி
கடுகு – ½ தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
கறிவேப்பிலை – சில தழைகள்

**செய்முறை :**

1. முதலில் மீனை சுத்தமாக கழுவி மஞ்சள் தூள், உப்பு சேர்த்து அலசி வைக்கவும்.
2. வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை தாளிக்கவும்.
3. வெங்காயம், பூண்டு சேர்த்து நன்றாக வதக்கவும்.
4. தக்காளி சேர்த்து நன்கு நெய் பிரியும் வரை வதக்கவும்.
5. மஞ்சள், மிளகாய், தனியா தூள் சேர்த்து நன்றாக கலக்கவும்.
6. புளிச்சாறு, உப்பு, தேவையான தண்ணீர் சேர்த்து கொதிக்கவிடவும்.
7. குழம்பு கொதிக்க ஆரம்பித்ததும் மீனை மெதுவாக சேர்க்கவும்.
8. 10 நிமிடங்கள் மிதமான தீயில் வேகவிட்டு இறக்கவும்.

---

### 2. செட்டிநாடு மீன் குழம்பு

**தேவையான பொருட்கள் :**

மீன் – ½ கிலோ
சின்ன வெங்காயம் – 15
பூண்டு – 10 பல்

இஞ்சி - ஒரு இன்ச் துண்டு
தக்காளி – 2
சோம்பு – 1 தேக்கரண்டி
பட்டை, கிராம்பு – சிறிது
மிளகாய்த் தூள் – 2 மேசை கரண்டி
தனியா தூள் – 2 மேசை கரண்டி
மஞ்சள் தூள் – ¼ தேக்கரண்டி
புளி – நெல்லிக்காய் அளவு
எண்ணெய் – 5 மேசை கரண்டி
உப்பு – தேவையான அளவு

### செய்முறை :

1. இஞ்சி, பூண்டு, சின்ன வெங்காயம் சேர்த்து விழுதாக அரைக்கவும்.
2. வாணலியில் எண்ணெய் ஊற்றி சோம்பு, பட்டை, கிராம்பு தாளிக்கவும்.
3. வெங்காய விழுது, தக்காளி சேர்த்து நன்கு வதக்கவும்.
4. மசாலா தூள்கள் சேர்த்து நன்கு குழையட்டும்.
5. புளியனைச்சாறு, உப்பு, தண்ணீர் சேர்த்து கொதிக்கவிடவும்.
6. பின்னர் மீனை சேர்த்து மிதமான தீயில் வேகவைக்கவும்.

---

## 3. கோங்கணா ஸ்டைல் மீன் குழம்பு (தேங்காய் கலவையுடன்)

### தேவையான பொருட்கள் :

மீன் – ½ கிலோ
வெங்காயம் – 2
தக்காளி – 2
தேங்காய் – ½ (துருவி விழுதாக்கவும்)
பூண்டு – 8 பல்
மிளகாய்த் தூள் – 1½ மேசை கரண்டி
தனியா தூள் – 2 மேசை கரண்டி
புளி – சிறிய பந்து
எண்ணெய் – 3 மேசை கரண்டி
உப்பு, கறிவேப்பிலை – தேவையான அளவு

### செய்முறை :

1. எண்ணெயில் வெங்காயம், பூண்டு வதக்கவும்.
2. தக்காளி சேர்த்து நன்கு நெய் பிரியும் வரை வதக்கவும்.
3. தேங்காய் விழுது சேர்க்கவும்.
4. மசாலா தூள்கள், புளி, உப்பு சேர்த்து கொதிக்கவிடவும்.
5. மீன் சேர்த்து வேகவைத்து, குழம்பு கெட்டியாக வந்ததும் இறக்கவும்.

---

## 4. மாங்காய் மீன் குழம்பு

**சிறப்பு: புளி பதிலாக மாங்காய்**

### தேவையான பொருட்கள் :

மீன் – ½ கிலோ
கொத்துமல்லி தூள் – 1 மேசை கரண்டி
வெங்காயம் – 2
தக்காளி – 1
மூலிகை மாங்காய் – 1 (பழுக்காதது)
பூண்டு – 6 பல்
மிளகாய்த் தூள் – 1½ மேசை கரண்டி
எண்ணெய், உப்பு – தேவையான அளவு

### செய்முறை :

1. வெங்காயம், பூண்டு வதக்கி தக்காளி சேர்க்கவும்.
2. மசாலா தூள், மாங்காய் துண்டுகள் சேர்த்து நன்கு வதக்கவும்.
3. தண்ணீர், உப்பு சேர்த்து கொதிக்கவிட்டு மீனை போடவும்.
4. குழம்பு கெட்டியாகும் வரை மிதமான தீயில் வேகவைத்து இறக்கவும்.

---

## 5. கேரளா ஸ்டைல் மீன் குழம்பு (தேங்காய் புளி குழம்பு)

### தேவையான பொருட்கள் :

*மீன் – ½ கிலோ*
*தேங்காய் – ½*
*புளி – சிறு எலுமிச்சை அளவு*
*இஞ்சி, பூண்டு – 1 மேசை கரண்டி விழுதாக*
*வெங்காயம் – 1*
*மஞ்சள் தூள் – ¼ மேசை கரண்டி*
*மிளகாய்த் தூள் – 2 மேசை கரண்டி*

*செய்முறை :*

1. *தேங்காய், மஞ்சள், மிளகாய் தூள் சேர்த்து விழுதாக்கவும்.*
2. *எண்ணெயில் வெங்காயம், இஞ்சி பூண்டு வதக்கி, விழுதை சேர்க்கவும்.*
3. *புளியனைச்சாறு சேர்த்து கொதிக்கவிடவும்.*
4. *மீன் சேர்த்து மிதமான தீயில் வேகவைத்து இறக்கவும்.*

https://www.facebook.com/tamilnatu.recippis



# சுவடுகளாகும் வரலாறு

யுக மாறுதல்களை
மெதுவாக சமாளித்து விடலாம்
வளரும் குழந்தைகளை
ஆசுவாசப் படுத்த ஆயுள்போதுமோ

காகம் கரைந்தால்
விருந்தினர் வருகையாம்
எதிர்பார்த்துக் காத்திருக்க
உறவினரே மரணம்

பெற்றோர் மந்திரமெல்லாம்
பிள்ளைகள் கேட்பதாயில்லை
காலத்தால் அழிந்து
சுவடுகளாகும் வரலாறு

அவதியின்றி வாழ
அடுத்தவர் பேச்சை நிறுத்திடனும்
அளவோடு நடந்திட
உறவுகளே சுகமாகும்

கடனில்லா வாழ்வு
சுகமான சுவர்க்கம்
யாசகம் கேட்பது
தன்மானம் குறைக்கும்

இலங்கும் விண்மீன்கள் எல்லாம்
அதுவாக இருப்பதில்லை
இடை நடுவே இருப்பது
கோள்களே என புரிவதில்லை

தூரத்து நிலவு
இரசிப்பதற்கு மட்டுமே
தூரத்து உறவு
பெயர் சொல்லத்தான்

பெற்றோரின் வீடு
உயிருள்ளவரை குதூகலம்
உயிர் பிரிந்துவிட்டால்
குருவிகலைந்த கூடுதான்

கனத்த கவலையில்
கனவுகளுக்கும் தடைதான்
நினைவிழந்து போனதால்
நோயாளியானேன் நானும்

போதை மனிதனுக்கு
பேசுவதும் விளங்காது
பெருமை பிடித்தவனுக்கு
போகும்வழி புரியாது

சென்றதை நினைப்பதைவிட
நிகழ்வதை நினைப்பது மேல்
கைவிட்ட உறவுகள்
கழிந்தது போனாலும் பரவாயில்லை

இருளாகிப்போகும் உள்ளத்திற்கு
இருப்பிடமும் அமாவாசைதான்
விழித்த கண்களுக்கு
வெளிச்சமெல்லாம் பாதைதான்

சேஹ் மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ, பூனாவை

# கேப்புசினோ காதல்

நௌஷாத் கான்.லி
அபுதாபி

வெளியே அருவியாய் அடைமழை, தீவிர காதலோடு கொட்டி தீர்த்தது.

கட்டிலை விட்டு எழுந்திருக்க மனமில்லாமல் இப்படியும் அப்படியுமாக புரண்டு புரண்டு படுத்தேன்,ஏனோ தூக்கம் மட்டும் வந்தபாடில்லை, பத்து மணிக்கெல்லாம் எழுந்து விடுவேன் என்ற நம்பிக்கையில் வைத்த அலாரம் அந்த நேரம் பார்த்து அதிக சப்தத்துடன் தொல்லை கொடுத்தது ..ஒலித்த அலாரத்தின் சப்தம் தாங்காமல் வேறு வழியின்றி அலறிய அலாரத்தை எழுந்து நின்று நிறுத்தினேன் .

இனிமேல் தூங்கினாலும் தூக்கம் வரப்போவதில்லை, பேசாம குளிச்சு முடிச்சிட்டு பைக் எடுத்திட்டு போய் ஊரை ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வர்றது மட்டுமின்றி எனக்கு பிடிச்ச கேப்புசினோவை காபி ஷாப்புக்கு சென்று குடிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.



அப்போது வெளியே கொஞ்சம் குளிர் அதிகமாக இருந்ததால் வாட்டர் ஹீட்டரை ஆன் செய்து விட்டு தண்ணி சூடாக வேண்டி கொஞ்ச நேரம் காத்திருந்தேன்.

கொஞ்சம் டயர்டாக இருந்ததால் மீண்டும் சோம்பேறித்தனமாய் கட்டிலில் சாய்ந்தேன். அப்போது வானில் பெய்து கொண்டிருந்த அடை மழை கொஞ்சம் கொஞ்சமாக நின்ற பிறகு வெறும் தூறல் மட்டுமே லேசாக இருந்தது ஏனோ வானம் மட்டும் பயங்கரமாக இருட்ட தொடங்கியது .

மின்னல் ஒளி அறைக்கதவை தாண்டி மின்னியது, தொடர் இடி சத்தம் பயத்தை உண்டாக்கியது வேறு வழியில்லாமல் பயத்துடன் கண்களை மூடிக்கொண்டேன்.

அப்போது விஷ்ணு, விஷ்ணு என்று ஒரு குரல் ஒலித்தது, அது நிச்சயமாக ஒரு பெண் குரல் தான் .

விஷ்ணுக்கு உள்ளுக்குள் பயம் இருந்தாலும் அந்த குரலில் மயக்கும் ஒரு காந்தத்தன்மை இருந்ததால் பயம் நீங்கி ஆவலோடு குரல் வந்த திசையை நோக்கினான் .

அந்த அறை அப்போது புகை மண்டலமாய் காட்சியளித்தது, அப்போது அந்த புகைமண்டலத்தின் நடுவே இருந்து தேவதையாய் ஒரு பெண் காட்சியளித்தாள்

அவள் மெல்ல மெல்ல விஷ்ணுவை

நோக்கி வந்தாள், அவள் அவனருகே வந்ததும் உட்கார்ந்திருந்த விஷ்ணுக்கு தன் கைகளில் உள்ள கேப்புசினோவை தன் கைகளாலேயே அன்புடன் பரிமாறினாள். அவன் கேப்புசினோவை குடித்து முடித்த அடுத்த நொடி அவன் கட்டிலில் சாய்ந்தான் அவன் உடைகள் தானாகவே மாற்றப் பட்டு இருந்தது, அவன் மேல் ஜன்னத்துல் பிர்தவ்ஸ் வாசனை சென்ட்டின் மணம் வீசியது மல்லிகை பூவை சூடியிருந்த அவளும் அவன் மேல் சாய்ந்தாள்.

அரை கிறக்கத்தில் அவன் இருந்தாலும் அவன் உடலில் என்னென்னவோ மாற்றம் நிகழ்ந்தது .

அவனது உடல், நாடி, நரம்பு ,ஆவி முழுதும் சொல்ல முடியாத சுகம் அவன் கண்ணுக்குள் மெல்ல, மெல்ல காதல் போதையாய் ஏறியது.

விஷ்ணுவை அந்த தேவதை கட்டிய ணைத்தாள் ,முத்தமிட்டாள் மொத்தத்தில் அவனுள் அவள் உறைந்தாள்.

சில மணி நேரங்களுக்கு பிறகு ...

விஷ்ணுவின் அறை கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது ,திடீரென திடுக்கிட்டு எழுந்தவனுக்கு என்னவோ போல் இருந்தது.

இதுவரை நடந்தது கனவா? நிஜமா என்று சுதாரிப்பதற்குள் அறைக்கதவு மீண்டும் தட்டப்பட்டது ..

வேறு வழியில்லாமல் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தான் .

டே விஷ்ணு மணி பன்னிரண்டு ஆகுது, லீவு நாளுல தூங்கலாம் அதுக்குன்னு மத்தியானம் வரைக்கும் தூங்குறது எல்லாம் நல்லது இல்லப்பா, சீக்கிரம் போய் குளிச்சிட்டு வா மத்தியானம் சாப்பாட்டை யாவது கரெக்ட்டா ஒரு மணிக்குள்ள வந்து சாப்பிடு என்று திட்டி விட்டு அம்மா சென்று விட்டாள்.

அப்போது தான் வாட்டர் ஹீட்டர் பத்து மணிக்கு போட்டது ஞாபகம் வந்தது

வேக, வேகமாக வாட்டர் ஹீட்டரை ஆப் செய்ய பாத்ரூம் ஓடினான் ஆனால் வாட்டர் ஹீட்டர் ஆப்-பில் தான் இருந்தது.

அம்மா வந்து வாட்டர் ஹீட்டரை ஆப் செய்திருக்க வாய்ப்பில்லை ஏனென் றால் அறைக்கதவு பூட்டிய படியே தான் இருந்தது. விஷ்ணுக்கு எல்லாமே குழப்பாகவே இருந்தது.

நடந்ததெல்லாம் கனவாக தான் இருக் கும் என்று நினைக்கும் போது யதார்த்த மாய் கண்ணாடியை பார்த்தான்.

அவன் கழுத்தருகே ஒரு பெண்ணின் முத்தத்தழும்பு பல் அச்சோடு இருந்தது ..

அவனது உடலும் ரொம்ப டயர்டாக இருந்தது அது மட்டுமின்றி அவனது கால் சட்டையும் அவனது விந்து துளிகளால் நனைந்திருந்தது.

எது நிஜம், எது கனவு என்று புரியாமல் ஒரு வித பயத்துடன் குளிக்க பாத்ரூம் சென்றான்.

தண்ணீர் நல்ல சூடாகவே இருந்தது .அவனது உடல் வலிக்கு, அசதிக்கு அந்த சுடுநீர் ரொம்ப சுகமாக இருந்தது.

ஒரு பக்கம் உள்ளுக்குள் பயம் இருந் தாலும் அந்த தேவதையை இன்னொரு

# காதலைத் தேடுகிறேன்

காதல் ஜோதியாய்
உன்னை எண்ணி
பெருமை கொண்டேன்
அருகில் வரும் நேரங்கள்
அனல் போல் சுடுகிறாய்

அடையாளம் இன்றி
காற்றாய் உன் பின்னால்
உன்னைத் தொடர்ந்தேன்
அணைந்து போகிறாய்
அடையாளம் தேடி
அலைந்து திரும்புகிறேன்

அமைதியான நீரோடையாக
நிதானமான உன் நகர்வு
சில நேரங்கள் பெரு மழைக்கு
உடைப்பெடுக்கும் ஓடையாக
சீறிச் சினக்கிறாய்

உன்னைப் புரிந்து
கொள்ளும் ஆராய்வில்
என்னை மறக்கிறேன்
கார்கால இருளாக
எல்லாமே மங்கலாக
வெறுமையாகத் திரும்புகிறேன்

இன்னும் தேடுகிறேன்
தொலைந்து போகாத
நம்பிக்கையில்
உன்னிடம் காதலை

**அ . ஜெகன்**
சுவிஸ்

முறை பார்க்க மாட்டோமான்னு அவனது மனம் ஏங்கியது.

மதியம் சாப்பிட்ட பிறகு உடல் அசதியால் மீண்டுமொரு தூக்கத்தை போட்டான்.

மாலை ஆறு மணிக்கு வெளியே சென்றவன் ஊரை சலிக்க சலிக்க சுற்றி விட்டு அந்த நகரத்தில் இருக்கும் இருபத்தி நான்கு மணி நேரமும் இயங்கக் கூடிய அந்த காபி ஷாப்புக்கு கேப்புசினோ குடிக்க நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு சென்றான்.

ஒரு கப் கேப்புசினோ ஆர்டர் செய்தான், ஒரு அரை மணிநேரத்திற்கு பிறகு சர்வர் இரண்டு கப் கேப்புசினோவை வைத்தான். ஹலோ பிரதர் எதுக்கு ரெண்டு கப் கேப்புசினோ வைக்குறீங்க என்று கோபமாக கேட்டான்.

நீங்க தானே சார் ரெண்டு கப் கேப்புசினோ ஆர்டர் செஞ்சீங்கன்னு சொல்லிட்டு அவன் அந்த இடத்தை விட்டு சென்று விட்டான்.

இதுவரை அமைதியாக இருந்த வானம் ஏனோ மீண்டும் அடை மழையை கொட்டியது. அப்போது கேப்புசினோவின் வாசனை விஷ்ணுவை ஏதோ செய்தது.

மீண்டும் அந்த காபி ஷாப்பில் கனவில் வந்த தேவதை விஷ்ணு பக்கத்து இருக்கையில் உட்கார்ந்ததோடு மட்டுமின்றி தன் கரங்களால் கேப்புசினோவை அவனுக்கு பரிமாறிவிட்டு அவனது இடதுபுற கழுத்தோரத்தில் முப்பத்திரண்டு பல்லும் ஆழ படும் படி தீராக்காதலோடு முத்தமிட்டாள்.

விஷ்ணு கொஞ்சம், கொஞ்சமாக சொர்க்கத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

# சொக்குப்பொடி

அமுதசுரபியில்
அள்ள அள்ள
குறையுமோ
குறையாதோ
எனக்கு த் தெரியாது..
எப்போதும் குறையாத
தங்கச் சுரபி நீ ....

சொட்டும் மழையில்
நடந்து வருகிறாய்
தேகத்தில் வனப்பு
என்மனம் நினைக்கிறதே
மழை இன்னமும்
பெய்தால் நல்லது
இன்றே...
நினைத்திட த்
தோன்றுகிறது.

யமுனை நதிக்கரையோரம்
ஏழு அதிசயங்களில் ஒன்றாக
தாஜ்மஹால் ...!
வைகை நதியோரம்
உயிரோவியமாய்
எனக்கு
நீ மட்டுமே ...!

உனது அழகை வர்ணித்து
கவிதைகள் எழுதுகிறேன்
அழகாகவேத் தெரிகிறது
காகிதத்தில் எழுத்துக்கள்
ஒன்றுச் சேர்ந்து
பூச்செண்டுகளாய் ஆனதே
எனக்கு வியப்பானது.

மழைத்தூறலில்
நனைந்துகொண்டு
நடந்து வந்தேன்
குடையில்லாத எனக்கு
குடையாய் பிடித்தாய்
உன் துப்பட்டாவை !
மழையும் நின்றது
வாழ்க துப்பட்டா
வரட்டும் மழை..

ஓரவிழிப்பார்வைத் தொடர்ந்து
ஈரவிழிப்பார்வை வரையில்
இருதலைக்காதல்
தந்திடும் விதவிதமான
சோதனைகளும்
போராட்டங்களும்
எண்ணில்
அடங்குவதில்லை ...

உனது கைக்குட்டையில்
இதழ்கள் பதித்தேன்
நீயும் கண்டுப்பிடுத்தாய்
மறுநாள் மாலையில்
கடற்கரையில்
படகுக்குஅடியில்
பரிசாக
முத்தமழைப்
பொழிந்தாய்
உனக்கு
என்மேல்
காதல்
புரிந்துக்கொண்டேன்.

சன்னலை
திறந்து வைக்கிறாய்
நான் உன்னைப்
பார்ப்பேனென்று
நான் பார்க்கும்போது
மற்றவர்கள்
என்னைப்பார்க்கிறார்கள்
உண்னைத்தவிர...!

எனது நெஞ்சத்தில்
காது வைத்துக்கேட்டிடு
இதயம் தொடர்ந்து
உனதுப்பெயரினை
உச்சரிப்பதை
நீயும் உணர்ந்திடுவாய் .

கண்களின் வழியே
மனசும் சொல்லிடும்
வித்தைக்கு பெயரே
காதல் எனும்
மூன்றெழுத்து..
சொக்குப்பொடி

கவிஞர்
இரா. சீ . பாலகுமார். M.A .,
சந்தோசபுரம்.,
சென்னை -600073

# அன்பின் பாலம்

## ஸில்மா ஹிதாயத்துல்லா

*பகுதி-03*

*காலம் கடந்துவிட்டால்
காதலும் கசந்துவிடுமா
கண்மணியே...
காதலின் ஆழம் அது
நெஞ்சை நிறைத்து விடுமா
என் உயிரே....*

தம்பியிடம் பேசிவிட்டு சோஃபாவில் உட்கார வந்த நவாஸுக்கு என்னமோ போல இருந்தது. இலேசாக நெஞ்சு பாரமாவதை உணர்ந்தான்.

"உம்மா......."

அவனை அறியாமல் சத்தம் போட்டான். அப்படியே சோஃபாவில் சரிந்தான்.

தொலைபசி சிணுங்கும் மெல்லிய ஓசை அவனது காதுகளை அடைந்தது.

கண்களை முழுவதுமாகத் திறந்திட முடியவில்லை. இயன்றவரை முயற்சித்து மெல்லிசாகத் திறந்தான்.

தொலைபேசித் திரையில் 'ARMY COMMANDER' என்று இருந்தது.

"ஏ நீங்க ஏன்ட பேர அப்பிடி save பண்ணி ஈக்கீறீங்க....? அழகா ஹிஸ்னா எண்டு சரி போடுறது தானே....?"

ஒரு கையால் டம்ளரைப் பிடித்துக் கொண்டு மறுகையால் விம்மைத் தடவிய படி கெஞ்சலும் கொஞ்சலுமாக அவள் கேட்டாள்.

அவளின் தோள்களில் நவாஸின் இரு கைகளையும் அழுத்தப் பதித்து அவளைத் தன் புறம் திருப்பி, "ஹிஸ்னா எண்டால் எல்லாருக்கும் தெரியும் அது நீங்க தான் எண்டு. ஆனால் 'ARMY COMMANDER' எண்டால் ஒத்தருக்கும் தெரியாதே..." சொல்லிவிட்டுக் கண்ணடித்தான்...

அவசரமாகக் கையில் இருந்ததைக் கழுவிக் கூடையில் வைத்தவள், "ஓங்கட கொஞ்சலுக்கு ஒண்டும் கொறச்சல் இல்ல.. நாளைக்கு எல்லாரும் நான் தான் ஹிட்லர் மாதி ஓங்கள வெச்சிட்டு ஈக்கிற எண்டு செல்லப் போற.. பாருங்கே..." கொஞ்சம் கோபமாகவே பதில் அளித்தாள்.

"தாரு என்ன சென்னாலும் நீங்க ஏன்ட 'ARMY COMMANDER' தான். ஆனால் 'செல்லக் COMMANDER'" அவன் அவள் மூக்கைப் பிடித்து, ஆட்டியபடியே சொன்னான்.

அவனது கையைத் தன் கையால் தட்டிவிட்டு, மூக்கை நீட்டி, கன்னங்களை விரித்து, உதடுகளைக் குவித்து, பூனைக் குட்டி போல செய்கை செய்தாள்.

அவன், "என் செல்லப் பூனைக்குட்டி" என்றவுடன் கீழேயும் மேலேயும் முகத்தைத் திருப்பி, "வெவ்வெவ்வே" என்று பழித்துக்

காட்டிவிட்டு அங்கிருந்து அகன்றாள்.

கண்முன் நிழல் ஆடிய சம்பவத்தை நினைத்து அவனுக்கு சிரிப்பு மூண்டது.

சோபாவில் சரிந்தபடியே கண்கள் இலேசாகத் திறந்தபடியே இருக்க, அவன் உதடுகள் மட்டும் அவளை நினைத்துப் புன்னகைத்தன.

குளியலறையில் இருந்த ஹிதாயாவுக்கு நவாஸின், "உம்மா....." எனும் சத்தம் கேட்டது.

தன்னால் முடிந்தவரை துரிதமாக வெளியே வந்து, அவசர அவசரமாக ஆடை அணிந்து, ஹாலுக்கு ஓடி வந்தார் ஹிதாயா.

மகன் சோர்விழந்து, சாய்ந்து கிடப்பதையும் அவன் முகத்தில் புன்னகை படர்வதையும் அவதானித்த ஹிதாயா, மெதுவாக மகன் அருகில் சென்றார்.

மெல்ல மகனைத் தட்டி எழுப்பினார்.

முனகலுடன் நவாஸ், "ம்... ம்... ம்..." என்றான்.

தன் பலம் கொண்ட மட்டில் நவாஸை எழுப்பி சோபாவில் அமர வைத்தார்.

"என்ன மகன் உங்களுக்கு ஆன....?" என்று இதமாய்க் கேட்டார் அவர்.

அப்போது மேசை மேல் வைத்திருந்த 'டீ' அவரது கண்களில் தென்பட்டது.

அவன் அதைக் கூட குடிக்கவில்லை என்றால், அவன் மனதால் ஒரு நிலையில் இல்லை என்பதையும் விளங்கிக் கொண்டார்.

"தெரியா உம்மா.. நெஞ்சி நோவு மாதி... கொஞ்சம் பாரமும் மாதி... மூச்சு இறுகிக் கொண்ட மாதி...." கஷ்டப்பட்டுப் பதில் சொன்னான்.

அவனிடம், " இல்ல மகன் இன்டைக்கு நீங்க இன்னும் தின்னவும் இல்ல, குடிச்சோம் இல்ல போல.. அதான் உங்களுக்கு கேஸ்ட்ரிக் வந்து ஈக்கிம்...

நான் டக்கென்டு இஞ்சி 'பிளேன்டீ' ஊத்தித் தாரேன். இந்த 'டீ'ய குடிக்க வேணாம். அது ஆறிப்பெயித்து..."

உடனே அவரால் முடிந்தளவு வேகமாக 'பிளேன் டீ' தயாரித்து 'கிரீம் கேக்கர்' பிஸ்கட்டையும் அவன் முன் நீட்டினார்.

அவனுக்கும் அது தேவைப்பட்டது.

மறுபேச்சு பேசாமல் உம்மா தந்ததைக் கையில் எடுத்துக்கொண்டான்.

பிஸ்கட்டை இரண்டாக உடைத்து, தேநீரில் மூழ்கடித்தபடி முன்பின் ஆட்டினான்.



'ஏன், உம்மா என்னிடம் ஒரு கேள்வியும் கேட்கவில்லை?' என்று ஆராயத் தொடங்கினான்.

"உம்மா... நான் ஒங்கட மகன் தானே... ஹிஸ்னா ஒங்கட மருமகள் தானே.... ஆனால் ஏ நீங்க எங்க ரெண்டு பேரையும் ஒரே மாதி பாக்குற... எங்களுக்குள்ள எது நடந்தாலும் நீங்க தல போடுறோம் இல்ல... அதோட ஒத்தருக்கும் சப்போர்ட் பண்ணுறோம் இல்ல...."

அவனது சந்தேகத்தைக் கேட்டு விட்டான்.

முகத்தில் புன்னகை தவழ, "மகன், எந்த நாளும் மகன் எங்களோடு ஈக்கோணும் என்டு நெனச்சால் நாங்க மருமகளோட தான் குளோசா ஈக்கோணும்.

அப்ப மகனும் குளோசா ஈப்பது மருமகளும் குளோசா ஈப்பது." இலகுவாய்ப் பதில் அளித்தார்.

"மகன் மட்டும் போதும் என்டு நெனச்சால் மருமகளையும் எழந்துடுவோம்.. அதோட கொஞ்சம் கொஞ்சமா மகனையும் எழந்திடுவோம்...

அதான் மகன்... எனக்கு நீங்களும் முக்கியம்... ஹிஸ்னாவும் முக்கியம்....

நீங்க ரெண்டு பேரும் எந்த நாளும் சந்தோசமா ஈக்கோணும்....

இண்டைக்கு ஒங்களுகளுக்கு நடுவுல சண்ட வந்த எண்டு நாங்க தல போட்டால் நாளைக்கு இதால ஒரு சண்ட வரும்...

மாப்புள... பொம்புள இண்டைக்கு சண்ட போட்டுட்டு நாளைக்கு சேந்துக் கொள்ளுவாங்க...

அதுதான் அவங்கள இன்னம் இன்னம் குளோஸ் ஆக்க வெக்கும்..."

உம்மா பொறுமையாய் நீண்ட நேரம் தந்த விளக்கம் நவாஸுக்கு வியப்பைத் தந்தது.

உம்மா வாழ்க்கையில் அனுபவித்த பாடங்கள் தான் தூர நோக்குச் சிந்தனையோடு செயற்பட வைக்கிறது என்று விளங்கிக் கொண்டான்.

ஒவ்வொரு நாளும் நாம் பெறும் அனுபவ அறிவு, நம் அறிவு வளர்ச்சிக்கும் வாழ்வு மேம்பாட்டுக்கும் மிக முக்கியம் என்பதை நேரடியாகச் சொல்லாமல் உணர்த்திவிட்டார் உம்மா.

அனைத்து தாய்மார்களும் அனைத்து மருமகள்களையும் இப்படி அரவணைத்துக் கொண்டால் மகன்மார்களுக்கு டென்ஷன் குறைந்து விடுமே என்று மனதுக்குள் கருதிக் கொண்டான்.

உம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டு, கார் சாவியையும் கையில் எடுத்துக் கொண்டு, கார் அருகில் வந்தான். கார்க் கதவைத் திறந்து காரில் ஏறினான்.

காரை முன்னோக்கிச் செலுத்தினான். அவன் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

பிம்பமாய் ஹிஸ்னாவின் பழைய சிரித்த முகம் அவன் மனதில் தோன்றி மறைந்தது.

'அவள் ஒரு தலையை ஒரு புறம் திருப்பி, கீழே கவிழ்த்து, கண்களை மேலே உயர்த்தி, ஒரு பார்வை பார்ப்பாளே...

அந்தப் பார்வைக்கு ஈடாக எதை எழுதி வைத்தாலும் பரவாயில்லை என்று

தோன்ற வைக்குமே...‘

யாருக்கும் தெரியாமல் அவளை ரசித்து மகிழ்ந்த வினாடிகள் மனதைப் பஞ்சு போல இலேசாக்கியது.

’ஆனால் இப்பொழுது அவள் என்னை அந்தப் பார்வை பார்ப்பதும் இல்லை.

நான் அவளை அவ்வளவாக ரசிப்பதும் இல்லை.

கேலிப் பேச்சுக்களும் குறைந்தே போய் விட்டன.‘

பரஸ்பரம் இருவரும் அன்பு வைத்திருக்கிறோமே தவிர ஏதோ ஒட்டுதல் இல்லாமல் வாழ்வு ஒரு வெறுமையாகப் போவதை உணர்ந்தான்.

அடிக்கடி இருவருக்கும் சண்டை வருவதும், எரிச்சல் பட்டுக் கத்திக் கொள்வதும், தொடர் நிகழ்வுகளாய் அவன் மனக்காட்சி முன் வந்து போயின.

மன வேறுபாடுகள் வரும்போது சண்டை வந்துவிடுமோ என்ற பயத்தில் இருவரும் அமர்ந்து பேசுவதைத் தவிர்த்த நாட்களும் அவனைக் கவலைப்பட வைத்தன.

பிரச்சினை வந்தால் வாக்குவாதம் வந்துவிடுமோ என்று பயத்தில் அதைத் தீர்க்காமல் அப்படியே எழுந்து சென்ற நாட்களையும் எண்ணிப் பார்த்தான்.

தீர்க்கப்படாமலே போன வலிகள்தான் இருவர் மனதிலும் கொழுந்துவிட்டு எரிகின்றன என்பதையும் கண்டு கொண்டான்.

‘அவளிடம் போய் மன்னிப்புக் கேட்க வேண்டும்..

திரும்பவும் நாம் முதன் முதலில் வாழ்ந்தது போல் வாழ்வோமா என்று கேட்க வேண்டும்.

அப்போது அவள் முகத்தில் வரும் அந்த மலர்ச்சியை நான் ரசிக்க வேண்டும்..‘

காரை ஓட்டிக்கொண்டு கற்பனையில் ஆழ்ந்திருந்த அவனது கவனம் அவனை அறியாமல் பாதையில் இருந்து விலகியது.

“கீ.....க்” என்ற ஹோரன் சத்தம் அவனைத் தன்னிலைப் படுத்தியது.

சுதாகரித்துக் கொள்ளும் முன்னமே பெரிய பஸ் ஒன்று அவன் முன்னே வந்து நின்றது.

அவன் தடுமாற்றத்தில் நிலை குலைந்து போனான்.

காலால் முடியுமானவரை ‘பிரேக்‘ கை அழுத்தினான்.

திடீர் என்று அது பிடிபட மறுத்தது.

’பஸ்’ அவன் நேர் எதிரே வந்து விட்டது.

‘பஸ்‘ இன் விளக்கு வெளிச்சம் அவனது கண்களைக் கூச வைத்தன.

அவன் குழப்பத்தில் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

நவாஸுக்கு என்ன நடந்திருக்கும்......?

**அன்பின் பாலம் தொடரும்...**




## நான் படித்து இரசித்த நூல் – பத்மினி

நான் படித்து இரசித்த நூல்கள் எண்ணற்றவை. இலக்கிய நடை, கதா பாத்திரங்கள், இயற்கை வர்ணனை, எளிய உரையாடல்கள், எதார்த்த வாழ்வி யல், மனத்தை அசைத்துப் பார்க்கும் ஆழமான கருத்துகள் என்று பல்வேறு நூல்கள் பயனுடையனவாகவும், மகிழ்விப்பனவாக வும் திகழ்கின்றன.

அவ்வகையில் அண்மையில் நான் வாசித்த நூல் 'பத்மினி' என்ற ஓர் இந்தியக் காதல் கதை. ஆங்கிலத்தில் வெளிவந்த இந்நூலின் ஆசிரியர் ஆங்கிலப் புதினம் எழுதிய முதல் தமிழர் திரு டி. இராமகிருஷ்ணா. இவரது நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் பேராசிரியர் சிவ. முருகேசன். இத்தமிழாக்க நூலை சந்தியா பதிப்பகம் 2014 இல் வெளியிட்டுள்ளது.

விஜயநகரப் பேரரசைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றுகிறான் சலுவா. அக்குடும்பக் கொலையில் தப்பிய குழந்தை வளர்ந்து சென்னப்பாவாக சலுவாவிடமே உதவியாளராக சேருகிறது. பேரழகி பத்மினி மீது மோகம் கொண்டிருக்கிறான் சலுவா. பத்மினிக்கு சென்னப்பா மீது காதல். சென்னப்பா, பத்மினி இருவரும் தப்பி ஓடுகையில் பிரிந்து மீண்டும் இணைகின்றனர். (சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்ட இடம் வழங்கியது இந்த சென்னப்பா தான் என்று அறிகையில் நமக்கு வியப்பு ஏற்படுகிறது வரலாற்று உண்மை புலப்படுகிறது) முற்போக்கு எண்ணம் கொண்ட பெண்கள் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்னிந்தி யாவில் வாழ்ந்துள்ளனர். நான் மணந்து கொண்டவர் எப்படி இருந்தாலும் நான் அவரை நேசிக்கிறேன் (I love whom I wed) என்ற பழமையான எண்ணம் கொண்ட ஒரு பெண்ணையும் நான் யாரை நேசிக்கி றேனோ அவரையே மணந்து கொள்வேன் (I wed whom I love) என்ற எண்ணம் கண்ட ஒரு புதுமைப் பெண்ணையும் தன் கதையில் மோத விட்டுள்ளார் ஆசிரியர்.

'பத்மினி' என்ற ஒரு இந்தியக் காதல் கதை புதினத்தின் ஆசிரியர் தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளை. 1854 ஆம் ஆண்டு மதராசு ராஜதானியில் பிறந்தவர். இவர் ஒரு நூலாசிரியராகவும், கவிஞராகவும், கட்டுரையாளராகவும் இருந்துள்ளார். ஆங்கிலத்தில் எழுதுவதையே வழக்க மாக கொண்டிருந்தார் என்று கூறுகி றார் பேராசிரியர் சிவமுருகேசன் மொழி பெயர்ப்பாளர். இந்த நூலில் முன்னுரை எழுதிய மேதகு ஜேம்ஸ் பிரைஸ், இந்தி யர்களும் ஆங்கிலேயர்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது அவசியம். இந்திய இலக்கிய வளர்ச்சி இதற்குத் துணை

புரியும். எனவே இந்தியர்கள் ஆங்கில மொழியில் எழுதுவதை ஆங்கிலேயர் கள் வரவேற்க வேண்டும் என்கிறார். தமிழ் மண்ணில் இருந்து படைக்கப் பட்ட முதல் சரித்திர (ஆங்கில) நாவல் என்ற வகையில் இது முக்கியத்துவம் பெறுகிறது. இது இலண்டன் Swan sonnensvhein & co என்ற நிறுவனத்தால் 1903 இல் வெளியிடப்பட்டது. 122 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட வரலாற்று நூல் என்றாலும், அண்மையில் தமிழில் வெளிவந்த வரலாற்றுப் புதினங் களைப் போல விறுவிறுப்பும் திடீர் திருப்பங்களும் நிறைந்த கதையாக பின்னப்பட்டுள்ளது.

இந்தக் காதல் வரலாறு விஜயநகர பேரரசு வீழ்ச்சி அடைந்த தருணத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு. ஆங்கிலேயர்கள் புனித ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி தாங்கள் பெற்ற நிலப்பகுதிக்கு ஸ்ரீரங்க ராயபட்டினம் என்ற பெயர் சூட்ட முன் வந்தார்கள். ஆனால் ஸ்ரீரங்கராயன் தனது முந்தைய பெயரான சென்னப்பாவை குறித்துப் பெயர் சூட்ட விரும்பியதால் அந்த இடம் சென்னப்பட்டினம் என்று அழைக்கப்பட்டது. அப்பெயர் மதராசுக்கு இன்று வரை இருந்து வருகிறது என்பதையும் நாம் இந்நூல் மூலம் அறிந்து கொள்கிறோம். இந்தியர்கள் வாழ்க்கையில் காணப்படும் உயிரோட்டத்தையும், உணர்வுகளையும் திரு.வீ.இராமகிருஷ்ணா அவர்களின் இந்த கதை நன்றாகப் பிரதிபலிக்கிறது.

**ஓசூர் மணிமேகலை**



# தூயநல் வாழ்வு

சல்லடை சலிக்கும் போதினில் பாராய்
தங்கிடும் உமிகளை மேலே!
அல்லலே நிறைந்த வாழ்வினைச் சூழும்
ஆயிரம் மாசுகள் போக்க
வல்லவன் காட்டும் வாழ்வியல் பாதை
மனத்தினைப் புடமிடும் உணர்வாய்!
நல்லதே நினைக்க நலம்தரும் வள்ளல்
ஞானமும் உண்மையும் அருள்வான்

தூயவன் சென்ற கானகப் பாதை
துணிந்துமே சிந்திய குருதி
மாயமாய் நின்றே இரங்கிய செம்மல்
மனிதனே திருந்துவாய் இன்றே!
காயமே அடைந்து கனிவுடன் நடக்கும்
கருணையைப் போற்றியே தொழுவாய்!
ஆயனே எங்கள் உயிர்தரும் ஒளியே!
ஐயனே காத்திட வாராய்!!

பேசிடும் சொற்கள் பேற்றினைப் பெறவே
பீடிலா நன்மைகள் செய்க!
வீசிடும் அம்பால் விலங்கினை உடைத்து
விடியலைக் காணவே எழுக!
பூசிடும் பூச்சுப் புதுமையைப் படைக்கப்
புனிதனாய் உலகிலே மிளிர்க!
தூசியைத் துடைத்துத் துணிவுடன் எழவோம்
துலங்கிடும் தூயநல் வாழ்வே!!

**ரூபா அன்ரன்**
சுவிற்சர்லாந்து

# கற்பகத்தின் கல்யாணம்



**அன்புச்செல்வி சுப்புராஜூ**
பட்டாபிராம், சென்னை

7

'ஏன் பாட்டி... இராமேஸ்வரம் கோவிலில் வழிபாடு செய்ய விரும்புறவுக முதலில் அக்னி தீர்த்தத்துல... அதான் கடலுல நீராடி விட்டுத்தா, கோவிலுக் குள்ள இருக்கிற 22 தீர்த்தங்களில் குளிச் சிட்டு, ஈரத்துணிய மாத்திட்டு, சாமி கும்பிடணுமாம்ல.... அதும் இராவணனி டமிருந்து மீட்கப்பட்ட சீதாதேவி தன் கற்பை நிரூபிக்கணும்னு, அக்னி பிரவேசம் செய்ய வச்சாருல இராமன், அப்போ சீதையோட கற்புத்திறன் அக்னி யையே சுட்டதாகவும், அதைத் தாங்க முடியாத அக்னி பகவான், கடலுல மூழ்கி, தன் வெப்பத்தைத் தணித்துக் கொண்டதாகவும், அதனாலதா இதை அக்னி தீர்த்தங்கிறாங்கனு புராணத்துல சொல்லியிருக்காங்கதானே' கற்பகம் கேட்கவும் 'ஆமாத்தா, வாத்தியாரு மகள்ல, புத்திசாலியா இருக்க... ' பாட்டி பாராட்டினார்கள்.

'க்க்கும், அப்ப நாங்களாம் யாரு பெத்த புள்ளைக கெழவி' நொடித்த தங்கச்சி 'இராமாயணக் காலத்துல இருந்தே பொம்பளைகதான் கற்பை நிருபிக்கணும் போல... இதைக் கேட்டா... திமிருனு சொல்வாக, அந்த அக்னிபகவானுக்கே சூடு தாங்கலையாம், ஆனாலும் திருந்த மாட்டாக, இன்னும் வரதட்சணை போதல, எவங்கூடயோ பேசிட்டானு எத்தன சாவுக தொடர்கதையா கெடக்கு, ஊருல எவனாவது நம்மளை கேலி செஞ்சா கூட நாமதா டிரெஸூ சரியா போடலை, கெக்கே பிக்கேனு சிரிக்கிறா, குதிக்கிறானு நம்மளத்தானே கொறையா சொல்றாக, அவன யாராவது தட்டிக் கேக்குறாகளா' ன்னு பொருமினாள்.

' என்னாத்தா.... அக்னித் தீர்த்தத்துல குளிக்கவும், எரிமலையா வெடிக்கிற... கொஞ்சம் பொறுமையா பேசு... காலங்காலமா நடக்குறதுதானே... மாமா சொல்லவும் 'தப்பைத் தட்டிக் கேட்கணும், நிமிர்வா இருக்கணும்னு சொல்லியிருக்காரு எங்கப்பா' தங்கச்சி சொல்லவும், 'அப்பாவுக்கு ஒன்னும் ஆகாதுல தங்கச்சி' கேட்கும் போதே அழுதுவிட்டாள் கற்பகம்.

'சரி சரி, நீ அழுவாத, பாட்டி... கோவிலுக்குள்ள இருக்கிற 22 தீர்த்தங்கள பத்தி இப்பவே சொல்லிடுங்க... இருக்கிற கூட்டத்தைப் பார்த்தா அங்கே பொறுமையா கேட்க முடியாது' அத்தை சொல்லவும்... 'ஏய்... யாரங்கே... சோடா கொண்டு வாருங்கள்' தங்கச்சி சொல்ல மற்றவர்களுடன் கற்பகமும் சிரித்தாள்.

'விளையாட்டுப் புள்ள... ' தங்கச்சியின் கன்னம் கிள்ளி முத்தம் தந்த பாட்டி, ' கேட்டுக்கிட்டே வெரசாக்க நடங்க... மொதல்ல

1. மகாலட்சுமி தீர்த்தம் - செல்வம் பெருகும்

2.சாவித்திரி தீர்த்தம் - பேச்சுத்தெறமை வளரும்.

3. காயத்ரி தீர்த்தம் - உலகத்துக்கு நன்மை உண்டாகும்

4.சரஸ்வதி தீர்த்தம் - உயர்வான கல்வி கிடைக்கும்

5. சங்கு தீர்த்தம் - சுகபோக வசதி, வாழ்க்கை கிடைக்கும்.

6. சக்கர தீர்த்தம் - மன உறுதி உண்டாகும்.

7.சேது மாதவ தீர்த்தம் - தடைப்பட்ட காரியங்கள் வெற்றியா முடியும்

8. நள தீர்த்தம் - தடைகள் நீங்கும்

9.நீல தீர்த்தம் - எதிரிகள் நீங்குவர்.

10. கவய தீர்த்தம் - பகை மறையும்

11.கவாட்ச தீர்த்தம் - கவலை தீரும்

12. கந்தமாதன தீர்த்தம் - உங்கள் துறையில வல்லுநரா ஆகலாம்.

13. பிரமஹத்தி தீர்த்தம் - பிரமஹத்தி தோசம் தீரும்.

14. கங்கா தீர்த்தம் - பாவங்கள் பொடிபடும்

15. யமுனை தீர்த்தம் - பதவி தேடிவரும்

16. கயா தீர்த்தம் - முன்னோர் ஆசி கிடைக்கும்.

17. சர்வ தீர்த்தம் - முற்பிறவியில செஞ்ச பாவங்கள் நீங்கும்

18. சிவ தீர்த்தம் - சகல பிணிகளும் தீரும்

19. சத்யா மிர்த தீர்த்தம் - ஆயுள் விருத்தியாகும்.

20. சந்திர தீர்த்தம் - கலை ஆர்வம் அதிகரிக்கும்

21. சூரிய தீர்த்தம் - தலைமைப் பண்பு, முதல் இடம் கிடைக்கும்.

22. கோடி தீர்த்தம் - முக்தி அடையலாம்.

ஆக இந்த இருபத்திரண்டு தீர்த்தங்களில் குளிச்சா நம்ம பாவங்க தீர்ந்து, நிம்மதியா சந்தோசமா இருக்கலாமுனு பெரியவுக சொல்லுவாக... ' பாட்டி சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே தீர்த்தக் கிணறுகள் வந்துவிட எடுத்திருந்த டிக்கெட்டுகளை வாளிகளுடன் நின்றிருந்த இரண்டு பேர்களிடம் மாமா தந்தார்.

பஸ்ஸில் சென்றவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து, வாளிகளுடன் இருவரும் முன்னால் வேகமாக நடக்க மற்றவர்கள் பின்தொடர்ந்தது ஓடினார்கள். நீர் இறைப்பவர் ஒவ்வொரு தீர்த்தக்கிணறிலிருந்தும் நீர் இறைத்து ஒருவாளித் தண்ணீரை நான்கைந்து பேர்கள் தலையில் படுமாறு ஊற்றினார். 'ஏங்க, கொஞ்சம் தலை நனையற மாதிரி ஊத்தலாம்ல' ஒருவர் கேட்க '22கெணத்துலயும் குளிச்சு முடிக்கும் போது நனைஞ்சிடும். வெரசாக்க வாங்க...' அவர் ஓட, மற்றவர்களும் பின்னாலேயே ஓடி ஒருவழியாக தீர்த்தமாடி முடித்தார்கள்.

'வேகமா வாங்க... மடத்துக்கு போயி ஈரத்துணிய மாத்திட்டு வருவோம். 12 மணிக்கு கோயில் நடை சாத்துறதுக்குள்ள சாமி கும்பிடணும்ல' அத்தை சொல்லவும் வேகவேகமாக மடத்துக்குச் சென்று உடை மாற்றி மீண்டும் கோவிலுக்கு வந்தார்கள்.

'மொதல்ல தாயைப் பார்ப்போம். நம்ம செரமத்தை ஆத்தாகிட்ட சொல்லிட்டோமுனா அவ அப்பங்கிட்ட சொல்லிடுவா... இதா வழக்கம்' தாத்தா சொல்லவும் 'நீ பாட்டிக்கிட்ட பம்முற மாதிரியா தாத்தா...' யாரோ குரல் கொடுக்க 'ஏலேய்... கோவிலுக்குள்ள என்னா கிண்டலும், கேலியும்... வாய மூடிக்கிட்டு மனசார சாமி கும்பிடுகலே' மாமா சத்தமிடவும் அமைதியாக கருவறை வெளிச்சுற்றில் நுழைந்தார்கள்.

'இங்கு கோவில் கொண்டுள்ள அம்மனுக்குப் பேரு பர்வதவர்தனி அம்மன்.



ஆத்தா பீடத்திற்கு கீழே ஆதிசங்கரர் நிறுவிய ஸ்ரீசக்கரம் இருக்கு. சக்தி பீடத்துல இதை சேதுபீடம்னு சொல்வாங்க. ஆத்தாளுக்கு சித்திரை வருசப் பொறப்பன்னைக்கு மட்டும் சந்தனக்காப்பு அலங்காரம் செய்வாக. அம்மன் சன்னதி பிரகாரத்துல வீடணன் அமைச்ச ஆதிசேசன் மேல பள்ளி கொண்ட கோலத்துல பெருமாள் காட்சி தராரு. அடுத்ததா அஷ்டலட்சுமி மற்றும் மேற்கு நோக்கிய சண்டிகேஸ்வரி இருக்காங்க. மொதல் பிரகாரத்துல சீதை செஞ்ச மணல் லிங்கத்திற்கு இராமர் பூசை செய்யும் சன்னதி அமைஞ்சிருக்கு' மெல்லிய குரலில் தாத்தா சொல்ல, கேட்டபடியே அனைவரும் சாமி கும்பிட்டனர்.

'வாங்க அடுத்ததா ஐயனைக் கும்பிடலாம்...' தாத்தாவைப் பின்தொடர்ந்து சாமி சன்னதிக்குச் சென்றனர். அங்கே பல்லாயிரக்கணக்கான ருத்ராட்சங்கள் சேர்த்து பின்னப்பட்ட பந்தலில் நடராசர் காட்சி தந்ததைப் பார்த்துப் பக்திப் பரவசமுடன் வணங்கினர். 'இந்த சன்னதியில நாகவடிவில் உள்ள பதஞ்சலி முனிவரிடம் வேண்டிக்கிட்டா யோகக் கலையில் தேர்ச்சி பெறலாம், நாகதோசம் நிவர்த்தியாகும்' தாத்தா சொல்லவும் வேண்டிக் கொண்டனர்.

அடுத்ததாக, இரண்டு லிங்கங்களுக்கு நடுவில் சரசுவதி, சங்கரநாராயணர், அர்த்தநாரீசுவரர், ஏகாதச ருத்ர லிங்க சன்னதிகளில் வணங்கி. கர்ப்பகிரகத்தில் உள்ள ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த படிக இலிங்கத்தையும் வணங்கினர் 'இங்கே நாள்தோறுமு காலைல அஞ்சு மண்ணிலிருந்து ஆறுமணி வரை பாலாபிசேகம் செய்வாங்க, அடுத்த முறை பார்க்கணும், வாங்க.... உலகப் பிரசித்தி பெற்ற ஓரிடத்தைக் காட்டுறேன்' முன்னால் நடந்தார் தாத்தா.

# சமாளி!

பா.சக்திவேல்



அலுவலகத்திலிருந்து வந்தவுடன் மேசையில் தயாராக இருந்த காப்பியை குடித்துவிட்டு நார்மல் மோடுக்கு வந்தார் சிவா.

மகனுக்கு ஆன்லைன் ட்யுசன் கிளாஸ் என்பதால் அவரும் சற்று அவன் பாடத்தில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என காலையில் வேலைக்குப் போகும் முன்னே சிலவற்றை குறித்துக் கொடுத்து படிக்கச் சொல்லியிருந்தார்.

என்னப்பா! நோட்டை எடுத்திட்டுவா, என்ன செஞ்ச...?

இதோப்பா வர்றேன் என ஒரு கையில் கரும்புத்துண்டு மறுகையில் ஸ்மார்ட் ஃபோனுடன் வந்தான்.

புக் எங்கடா? சீறினார்..

புத்தகம் வந்ததும்... இயந்திரத்தனமாக விரித்து மடமடவென கேள்வி கேட்கத் துவங்கினார்...

மௌனமாக இருந்தான் மகன்..

இப்படியெல்லாம் நேரத்தை வீண டிச்சா உருப்பட முடியாது, இதைக் கூட படிக்க முடியவில்லையா எனக் கடிந்தார்...

பக்கத்தில் இருந்த கரும்புத்துண்டை நீட்டி கடிச்சு சாப்பிடுப்பா என்றான்...

ஆடுன நாலு பல்லுக்கு பதிலா நாற் பதாயிரத்துக்கு புதுபல் இப்பதான் வச்சிருக்கேன், உடனே வாங்கி கடிக்க முடியாதுடா! என்னை டைவர்ட் பண்ணாதே...

அதுபோலத்தான்பா பத்து லெவல் கேம்ஸ்ல முடிச்சிருக்கேன், வின் பண்ண னும்... நீ கொடுத்ததும் புக் எடுத்து படிக்க முடியாதுப்பா என்றான்...

ஆடிப்போனார் சிவா....



# தமிழ்ச்செம்மலுடன் சில கேள்விகள்


ஹைக்கூ தன்முனைக் கவிதைகள் பற்றி தங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறேன்.

க. தங்கவேலு கிருஷ்ணகிரி

ஹைக்கூ என்பது ஜப்பானிய கவிதை. அதனை தமிழில் மூன்று அடிகளை வைத்து எழுதும் வழக்கம் உள்ளது. 5 7 5 என்ற சீர்களின் அடிப்படையில் எழுதப்பட வேண்டிய கவிதை ஹைக்கூவின் முதல் இரண்டு அடிகள் ஒரு செய்தியைச் சொல்வதாகவும் மூன்றாவது அடியானது வேறு ஒரு திருப்பந்தரக்கூடிய செய்தியைச் சொல்வதாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் இதனுடைய அடிப்படை விதி. பெரும்பாலும் நிகழ்காலத்திலேயே செய்தியானது இருக்கும். கற்பனை உருவகம் உவமை போன்றவை எல்லாம் இருக்கக் கூடாது என்பதுதான் ஹைக்கூ ஆசிரியர்களுடைய கருத்து.

தன்முனைக் கவிதை என்பது தெலுங்கு நானிலு என்ற கவிதை வடிவத்தினைத் தழுவியதாகும். இது நான்கு அடிகளை உடையது ஒவ்வொரு அடியிலும் இரண்டு முதல் நான்கு சீர்கள் இருக்கலாம் முதல் இரண்டு அடிகள் ஒரு செய்தியைச் சொல்வதாகவும் அடுத்த இரண்டு அடிகள் அதனைத் தழுவியதாகவோ எதிரானதாகவோ அமைய வேண்டும் என்பது இதனுடைய அடிப்படை விதியாக உள்ளது.


அத்தனை பா வகைகளிலும் அழகாகப் பாடல்கள் எழுதுகின்றீர்களே. யாப்பிலக்கணமெல்லாம் நீங்கள் யார் யாரிடம் கற்றீர்கள்...? அப்புறம் உங்கள் ஆசிரியர்கள் பற்றியும் கொஞ்சம் கூறுங்களேன்...!



அணைக்குடி ச.சம்பத்

வெண்பா எழுதுவதற்கு எனக்கு ஒரு தமிழ் ஆசிரியர் கற்றுத் தந்தார். அவர் பெயர் ஜெயகாந்தன். ஆசிரியப்பா என்பது நானே முனைந்து கற்றது. ஆசிரியப்பாவில் வாசகர் கடிதங்களை தெசிணி அவர்களுடைய கவிதை என்ற இதழிலே எழுதி இருக்கின்றேன். எனது முதன்மையான ஆசான் பாட்டரசர் கி. பாரதிதாசன் அவர்களே ஆவார்.

நேர மேலாண்மையை எவ்வாறு கைக்கொள்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்களேன் ?



பேச்சியம்மாள் பிரியா சென்னை.

கோவை லிங்கா

பணி செய்யும் இடத்தில் பணியை மட்டும் செய்வதும் வீட்டுக்கு வந்த பிறகு வீட்டுச் சூழலுக்கு ஏற்ப நடந்து கொள்வதுமே நேரம் மேலாண்மைக்கு எனக்கு உதவும் வழியாக தெரிகிறது. அந்தந்த வேலைகளுக்கென்று ஒதுக்கப்பட்ட நேரத்தில் அந்தந்த வேலைகளை மட்டுமே செய்வது எனக்கு நேர மேலாண்மையை கடைப்பிடிக்கப் பெரும்பெரும் உதவியாக இருக்கிறது.

தமிழ் அமைப்புகள் தொல்காப்பியம் நன்னூல் தண்டியலங்காரம் யாப்பெருங்கலக்காரிகை நிகண்டுகள் சைவ சித்தாந்த நூல்கள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை..மாறாக கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் போன்றவற்றை முதன்மைப் படுத்துகின்றன என்கிறேன் இது தகுமா?



சு.ராசேந்திரன் திருவாரூர்

ஒவ்வொரு தமிழ் அமைப்பிற்கும் ஏதாவது ஒரு கொள்கை இருக்கும் அந்த கொள்கையின் அடிப்படையில்தான் அவை செயல்படுகின்றன சில அமைப்புகள் கவிதைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்கும் சில அமைப்புகள் சிறுகதைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்கும் இலக்கண நூல்களைப் பயிற்றுவிக்கக் கூடிய பணிகளை ஒரு சில அமைப்புகள்

செய்து வருகின்றன. அனைத்து அமைப்புகளும் செய்யவில்லையே என்பது எனக்கும் ஆதங்கமாகத்தான் இருக்கிறது.

செப்பலோசையைப் பற்றி கொஞ்சம் விரிவாக கூறமுடியுமா?

ஜோதிபாசு முனியப்பன் சென்னை

இது வெண்பாக்களில் மட்டும் பயின்று வரக்கூடிய ஓசையாகும் செப்பல் என்றால் பதில் உரைப்பது அல்லது விடை சொல்வது போன்று இருக்கக்கூடிய ஒரு ஓசையாகும்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், பண்பாட்டிற்கும் இன்றியமையாத முத்தமிழ் வளர்ச்சி என்பது இயல்தமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என மூன்று கூறுகளை மட்டுமே சார்ந்திருக்குமா? அல்லது இன்னும் வேறு கூறுகளில் விரிவடைந்து வளர்ச்சி அடையுமா?



க.குணசேகரன் சென்னை

முத்தமிழையும் தாண்டி தமிழ் வேறு திசைகளில் பயணிக்கத் தொடங்கிவிட்டது அறிவியல்தமிழ் கணினித்தமிழ் என்று அதனுடைய கிளைகள் தோன்ற ஆரம்பித்து விட்டன.

கவிதைகள் இசையாகா ஆனால் பாடல்கள் இசை வடிவம் பெறும் என்கிறார்கள் நான் இதை மறுக்கிறேன் கவிதைக்கும் பண் உண்டு என்கிறேன் தாங்கள் இதில் கூறும் கருத்து???



சு. இராசேந்திரன் திருவாரூர்

ஒவ்வொரு கவிதையும் அது மரபுக்கவிதையாக இருக்கும்போது ஏதேனும் ஒரு இசைவடிவத்தைக் கொண்டதாகவே இருக்கும். எல்லா மரபுக் கவிதைகளையும் நாம் இசை வடிவத்தில் பாட இயலும். புதுக்கவிதை ஹைக்கூ தன்முனைக் கவிதை போன்ற புதிய வடிவங்களில் உள்ள கவிதைகளில்தான் இசைவடிவில் பாடுவது சற்று கடினமாக இருக்கும்.

வாழ்வியல் அறத்தை, முத்தமிழில்,எத்தமிழ் வழியே சொல்வது எளிது?



குளோரி சக்தி கரூர்

நாடகத்தமிழ் என்று சொல்லக்கூடிய திரைப்படம் வடிவிலோ நாடகங்கள் வழியிலோ அறத்தினை மிக எளிதாக போதிக்க முடியும்


புதுக்கவிதைக்கான வரைமுறை என்னவென்று அறிய ஆவல்

பெ.வெங்கடலட்சுமி காந்தன்

எந்த வரையறையும் இல்லாது எழுதுவது தான் புதுக்கவிதை என்று சொல்லப்படுகிறது என்றாலும் புதுக்கவிதையினுடைய இறுதியிலே ஏதேனும் ஒரு நீதியோ ஒரு திருப்பமோ நம் மனத்தில் பதியக்கூடிய ஒரு கருத்தோ கொண்டதாக இருப்பின் அந்த புதுக்கவிதை சிறந்ததாக கருதப்படும்.

இக்காலத்தில் சிலரின் கவிதைகள் "எழுத்துப்பேறு " என்கிறேன்.. இதில் தங்களின் கருத்து?

சு.ராசேந்திரன் திருவாரூர்



இருக்கலாம் ஐயா ஒரு கவிதையைப் படைப்பவருக்கு அது நிச்சயமாக எழுத்து பேறாகத் தெரியாது. படிப்பவருக்கு அவரது ரசனைக்கு ஏற்பவும் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் இல்லாத பொழுது அது எழுத்துப் பேறாகத் தெரியும். ஒரு காலத்தில் எழுத்து பேறாக இருக்கும் கவிதை இன்னொரு காலத்தில் பிடித்த கவிதையாகவும் மாறலாம். காலம் தான் பதில் சொல்லும் ஐயா.

இன்றைய காலகட்டத்தில் தனித்தமிழில் மட்டும் எழுதுவது சாத்தியமா?

மலர்மைந்தன் கல்பாக்கம்

எழுதுவது சாத்தியம்தான் ஐயா பேசுவது தான் சில இடங்களில் இயலாது போகலாம்.

இன்றைய இளைய தலைமுறைக்கு வாசிப்புப் பழக்கத்தையும், தாய்மொழி முக்கியத்துவத்தையும் கொண்டு சேர்க்க மிகவும் கடின முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. தமிழைப் பேசுவதற்கே தடுமாறும் பிள்ளைகளிடம் எழுதவும்,வாசிக்கவும் வைப்பது ஒரு சவாலாக உள்ளது. பல்வேறு தாக்கங்களில் இருந்து அவர்களை மீட்டுக் கொண்டுவர மேலும் என்னென்ன புதுமையான முயற்சிகளைக் கையாளலாம்?



மணிமேகலை ராஜன் ஓசூர்

வாழ்வாதாரத்தை நல்கும் வேலைவாய்ப்பில் தமிழில் எழுத்துத் தேர்வினை வைத்து அதன் வழியாகத்தான் வேலை கிடைக்கும் என்று சட்டம் கொண்டு வந்தால் வாசிப்புப் பழக்கத்தையும் பிழையின்றி எழுதக்கூடிய பழக்கத்தையும் இளைஞர்களிடையே அதிகப்படுத்தலாம்.

தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது வேற்று மொழி. வேற்று மொழியின் மேல் நமது தமிழர்கள் சிலர் தமது சந்ததியினருக்கு கல்வியின் காரணமாகவோ பணியின் காரணமாகவோ ஆமோதித்து அம்மொழி வளர்வதற்கு மறைமுகமாகக் காரணமாகி விடுகிறார்கள் இதற்கு நமது கல்வி முறையின் பாடத்திட்டங்கள் தமிழாகவே இருந்தால் நலம் பயக்குமா அல்லது வேறு மாற்றங்களால் சரிசெய்ய இயலுமா ஐயா.



வா சண்முகம் பட்டீஸ்வரம்

எந்த ஒரு மொழியும் தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருக்க இயலாது. ஆயிரங்கணக்கான வருடங்களாக இருக்கக்கூடிய ஒரு மொழி தமிழ் மொழி. இதனுடன் கோலோச்சிய மொழிகளான கிரேக்கம் இலத்தீன் பாலி பிராகிருதம் எபிரேயம் போன்ற மொழிகள் எல்லாம் இன்று வழக்கத்தில் இல்லை. ஆனால் தமிழ் மட்டும் நிலைத்து இருக்கிறது. எனவே வேற்று மொழியானது தமிழை அழித்து விட முடியாது. தமிழ்நாட்டில் தமிழ் கட்டாய பாடமொழியாக இருக்குமேயானால் மேலும் அது வளர்வதற்கு வழி காட்டும். வேலை வாய்ப்பிலும் தமிழை முதன்மையாக வைத்திருந்தால் தமிழ் வளர்வதற்கு அது உதவியாக இருக்கும்.

தமிழ்மரபை முகநூல் குழுமங்கள் கடைபிடிக்கிறதா?

வெங்கடலட்சுமி காந்தன்

மரபு என்பது ஒவ்வொரு குழுமமும் கடைபிடிக்கக் கூடியதுதான் ஒவ்வொரு குழுமத்திற்கும் மரபு வேறுபடலாம். அனைத்து மரபுகளும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று எந்தவித கட்டாயமும் இல்லை.

.

மரபுக்கவிதை எழுதுவோரை ஒரு குடையின் கீழ் இணைத்து போட்டிகள் நடத்துகிறீர். அதை முறையாகச் சான்றிதழ் படிப்புகள் உள்ளடக்கிய ஒரு கல்வி நிறுவனமாய் நடத்த ஏதேனும் திட்டம் உள்ளதா?

மு.வா.பாலாஜி ஓசூர்.

வரவேற்கத்தக்கதுதான் ஐயா. இதுவரை அப்படி ஒரு எண்ணம் இல்லை ஏதேனும் ஒரு நிறுவனம் நம்முடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நடத்தக் கூறினால் நாம் நடத்தலாம். அல்லது எதிர்காலத்தில் இதனை நடத்துவதற்கான வாய்ப்பு ஏற்பட்டால் நடத்தலாம் ஐயா.

மரபுக் கவிதைகளில் வெண்பா மற்றும் விருத்தப்பா வகைகளே அதிகம் எழுதப் படுகிறது. தங்களின் தஞ்சைத் தமிழ் மன்றத்தில் பிறவகை மரபுக் கவிதைகளைக் கவிஞர்களிடையே எழுதத் தூண்டும் போட்டிகள் நடத்துவீர்களா?

தனராஜ் பாப்பணன் கோவை


உறுதியாக நடத்துவோம் ஐயா. படிப்படியாகத்தான் எல்லா வகையான பாக்களையும் நடத்த இயலும். ஒரே நேரத்தில் அனைத்தையும் நடத்தும் பொழுது எல்லோருக்கும் அது ஏற்புடையதாக இருக்காது.

கல்வி என்பது தொடக்க நிலையில் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஆனால் மாநிலப் பாடத்திட்டம் மத்திய பாடத்திட்டம் போன்ற வேறுபாடுகள் ஏன்? இது சரியான கல்விமுறை ஆகுமா?

நாகை குமரன் நன்னிலம்

சரியானது இல்லை என்பதுதான் எனது கருத்தும். ஒரே மாதிரியான பாடத்திட்டம் இருந்தால்தான் சமுதாயத்தில் அனைவரும் ஒன்றாகி விடுவார்களே பிறகு எப்படி அவர்களுக்குள் வேறுபாட்டை பராமரிக்க இயலும்?


தாய்மொழி தமிழுடன் பொதுமொழி (ஆங்கிலம்) கற்பது அவசியம் தானே



கோபால் சத்தியமங்கலம்

மிகவும் அவசியம். தாய் மொழியோடு பொதுமொழி ஒன்றையும் கற்றுக் கொள்வது அவரவர் வாழ்வியலுக்கும் வாழ்வாதாரத்துக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

முகநூல் குழுமங்களில் தமிழ்ப்பற்றாளர்கள் அநேகர் மரபுக்கவிதை கற்றுக் கொள்வதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள். இதில் தங்கள் கருத்து?



பாண்டிச்சேரி கருப்பசாமி கோவை

வரவேற்கத்தக்கதென்றே கருதுகின்றேன். ஒவ்வொரு கவிஞரும் காலத்தால் நிலை பெறுவதற்கும் அவரது காலத்துக்குப் பிறகு இந்த உலகத்திலேயே நிலைத்து வாழ்வதற்கும் ஏதேனும் ஒரு படைப்பினை இந்த உலகத்திற்கு விட்டுச் செல்ல வேண்டியது கட்டாயம் ஆகிறது. அவ்வாறு ஒரு படைப்பினை அவர்கள் விட்டுச் செல்ல எண்ணும்பொழுது அந்த படைப்பானது மரபுக்கவிதை வடிவங்களில் இருந்தால் காலத்தால் நீடித்திருக்கும் என்று அவர்கள் எண்ணுவதால்தான் மரபுக் கவிதை எழுத கற்றுக் கொள்ளக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகம் ஆகிறது. மரபுக் கவிதை எழுதுவது எளிமையான ஒரு வடிவமாகவும் எளிதில் மனனம் செய்வதற்கு அது உதவிகரமாக இருக்கும் என்பதாலும் நிறைய சொற்களை கற்றுக் கொள்வதற்கு அது உதவும் என்பதாலும் மரபுக் கவிதையை அனைவரும் கற்றுக் கொள்கிறார்கள். மொழி வளத்தைப் பெருக்குவதற்கு இந்த மரபுக் கவிதையானது நிச்சயமாக உதவும் என்றே நான் கருதுகின்றேன்.

# சுயம்பு சக்தி

கன்னித் தாயிவள்
கண்களால் பேசுகிறாள்
அக்கா எனும்
அவதாரம் விடுத்து
அம்மா எனும்
அவதாரத்தில் நிற்கிறாள்
தன் கையை ஊன்றி
தங்கையை உயர்த்திட
கன்னித் தாயிவள்
கண்களால் பேசுகிறாள்

எதிர்காலம் எங்களுக்கு
எதிர் கொள்ளும் காலமானாலும்
உதிரும் பூவாய் உதிரமாட்டோம்
உதிரா பூவாய்
வாகை சூடவே
கல்லிலும் முள்ளிலும்
கரடுமுரடான பாதையில்
எங்களின் பயணம்
சுயம் இழக்காத
சுயம்புவாய் நிற்போம்
சுயத்தை இழக்க மாட்டோம்
சுயமரியாதையை
விட்டுத் தரமாட்டோம்

எங்களுக்கு உதவுவதாய்
படம்பிடித்து முகநூலில் பதிவிட்டு
விளம்பரம் தேடாதீர்கள்
எங்களை பரிதாபமாய்
பார்க்க முனையாதீர்கள்
எங்களுக்கு பிச்சையிட
முனைந்து விடாதீர்கள

வேலையை கற்பிக்கவோ
கல்வியை கற்பிக்கவோ
இயன்றதை செய்யுங்கள்
தற்காலிக தீர்வை விரும்பவில்லை
நிரந்த தீர்வை விரும்புகிறோம்

செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# ஊர்மிளையும் உங்கிலிகுட்டியும்



## மதிப்புறுமுனைவர்
## மாத்தளை பெ.வடிவேலன்

ஊரே வெறிச்சோடிப் போய்கிடக்கின்றது. ஆங்காங்கே எரியூட்டப் பட்ட வீடுகளும், கடைகளும் மற்றும் இன்னொரன்ன பொருட்களும் எரிந்து கருகிப்போய் கிடக்கின்றன.

"பின்னேயிட்ட தீ தென்னிலங்கையென சுட்டெரித்த தீ நாக்குகள் இன்னும் பல இடங்களில் ஓயவில்லை.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடியில் சிக்கி மாண்ட பதின்மூன்று இராணுவ சிப்பாய் களின் உடல்களை அடக்கம் செய்ய "பொறளை கனத்தையில்" கூடியவர்கள் கட்டுகடங்காமல் ஆடிய கோரத்தாண்டவத்தின் விளைவு நாடே தீக்காடாகிவிட்டது.

சட்டம், ஒழுங்கு என்பன இல்லாத காட்டுத்தர்பார் கோலோச்ச அரசும் கைக்கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

தமிழர்களின் உயிர்கள் காவுக்கொள்ளப் பட்டன.

கண்ணீர்த்துளி வடிவில் கடலில் நடுவே மிதக்கும் இலங்கைத் தீவில் தமிழர்கள் கண்ணீர் கடலாகினர்.

வழமையாக தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் ஆலயங்களும் தனக்கு அடைக்கலம் கொடுப்பாரின்றி தேற்றுன்றி அவலமாக கிடக்கின்றன. மாத்தளை நகரை ஆயுதபாணிகளோடு சங்காரம் செய்த இனவெறி கும்பல் திருப்திபடாது இதுவரை தப்பிப்பிழைத்த தோட்டங்களும், பல வண்டிகள் லாறிகளில் கும்பல்கும்பலாக படையெடுத்து துவம்சம் செய்துவிட்டன.

தப்பிப் பிழைத்து ஓடுவோரையும் விரட்டி, விரட்டி மானபங்கப்படுத்தினர். மானமே திரைபாய் கொண்ட மங்கையர்களையும் ஈனப்படுத்தினர்.

பெயரளவில் இயங்கிக் கொண்டிருந்த அகதி முகாம்களும் ஊசாடிக்கொண்டிருந்தன.

வடக்கு கிழக்குப் பகுதிகளை சேர்ந்தவர்கள் தத்தம் ஊருக்கு கப்பலேறினர்.

பாதிக்கப்பட்ட மலைநாட்டானுக்கு ஊர் ஏது? வாசல் ஏது? கட்டிய துணிகளோடு, குழந்தை குட்டிகளுடன் வவுனியாவுக்கு போய்விட்டான். தமிழ் பிரேதசங்களில் உயிரை காப்பாற்றிக் கொள்ள லாம் என்று அலை அலையாக ஓடிக்கொண்டிருக்கின்றது அகதிகள் கூட்டம்.

பொழுது விடிந்தால் இந்த தோட்டத்தை

விட்டு எல்லோரும் ஓடிவிட்டார்கள். ஒரு வரையும் காணவில்லை. பொழுது சாய்ந் தால் அந்தத் தோட்டத்தில் குஞ்சிக் குலுவானைக் கூட காணவில்லை. அந்தத் தோட்டம் ஆள் இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கின்றது. எங்கும் இதைப்பற்றி பேசுபவர்கூட இல்லை.

மதவாச்சியில் “பஸ்”சை மறித்து அடிக்கி றார்களாம்.

நாலைந்து குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து போன லொறியை மறித்து அதில் இருந்தவர்களை அலவாங்கால் அடித்து வெட்டி கொலை செய்து விட்டார்களாம்.

ஓடுபவர்களை தப்பவிடாமல் சிலர் கட்டு வித்த கட்டுக்கதைகள் மட்டுமன்றி வதந்தி களும் தலையெடுத்து பரவின. வதந்திகள் வானளாவ பறக்கின்றன. வதந்திகள் மட்டுமல்ல உண்மைகளும் காற்றின் மௌனத்தை கலைந்துக்கொண்டு சங்கதி சொல்லுகின்றன.

நோர்த் மாத்தளை தோட்டம் இரவில்கூட ஜே... ஜே... என்றிருக்கும். ஆனால் ஒரு இரவுக்குள் சுடுகாடாக மாறிவிட்ட மாயம் என்ன?

அகதி முகாமில் இந்த அபத்தவேளையி லும் மஞ்சள் இருக்கா? என்று கேட்டு வியாபாரம் புரிந்த வஞ்சகரிடம் கழட்டிக் கொடுத்த காதணிகளுக்கு கையில் கிடைத்த கொஞ்சத்தை மூலதனமாக்கி பரந்து செல்லும் குடும்பங்கள்.

திருட்டுப் போன ஆடு, மாடுகளில் மீதி வந்து சேர்ந்தவைகளை கேட்ட விலைக்கு கொடுத்து விட்டு லொறிகளில் விரைந்து மறைந்துவிட்ட குடும்பங்கள் எவை எவையென யாருக்குத் தெரியும்?

எட்டாம் நம்பர் ஓட்டுலயத்தில் மாயாண்டி குடும்பம் ஆடு, மாடுகளை

# சாதியப் பேய்

•

சாதியப் பேயின் சாக்கடை வாயை
மூடிட என்றும் வழியில்லையா ?

சாதியப் பேயின் கூரிய நகத்தைக்
குத்திக் கிழிக்கவும் மனமில்லையா ?

சாதியப் பேயின் கரங்களை நறுக்கும்
கருவிகள் செய்யப்படவில்லையா ?

சாதியப் பேயின் சங்கைக் கடிக்கும்
பற்கள் இன்னும் முளைக்கலையா ?

சாதியப் பேயின் கோரப் பசியைக்
கொன்று குவிக்கவும் துணிவில்லையா ?

•

சாதியப் பேயின் குருதிக் குளியலைத்
தடுக்கவும் அரசுக்குத் திறனில்லையா ?

ஆணவக் கொலையை ஆவணப் படுத்தி
அடுத்த வேலைக்கு ஆயத்தமா ?

•

கால மரத்தின் கடைசி இலையாய்
கவினின் கொலையும் உதிரட்டுமே

சாலையில் காய்ந்த சகதியைப் போல
சாதியும் நிலத்தில் காயட்டுமே

வேற்றுமை வெடிகளை உற்பத்தி செய்யும்
சமூக ஆலைகள் இடியட்டுமே.

ஏற்ற தாழ்வுகள் எதுவும் இன்றி
நாளைய பொழுதும் விடியட்டுமே.

**- மதுரகவி**
வண்டியூர் , மதுரை

வளர்த்து தோட்டத்தில் பெருமையோடு விளங்கியது. மாயாண்டிக்கு தோட்டத்தில் தொழில் புரிபவர்களில் பாதிக்குமேல் சொந்தக்காரர்கள். எல்லா லயங் களிலும் மாயாண்டியின் செல்வாக்கு ஓங்கி ஒலித்தது.

ஆண்களும் பெண்களுமாக பத்துபேர் கொண்ட பெரிய குடும்பம். மாயாண்டிக்கு கங்காணி வேலை வழங்கி அவனை கைக்குள் போட்டுக் கொண்டால் தோட்ட நிர்வாகத்தை நடத்துவது எளிதாகும் என்பதான அக்குறனை முதலாளியின் சாணக்கியம்.

மாயாண்டி கங்காணி என்ற அந்தஸ்த் துடன் தோட்டத்தை வலம் வந்து கம்பீரமாக நடைபயிலுகின்றான். பெரட்டுக்களம் முதல் அரிசி காம்பரா வரை அவரின் தலைப்பாய் கட்டு பறக்காத கொடியாக சவால் விடுகின்றது. மாயாண்டிக்கு ஒரே ஒரு சகோதரி பூங்காவனம். இந்த செல்வாக்குகளுக்கு முன்னரே பூங்கா வனத்தை முறைப்பையனான கேசவனுக்கு திருமணம் முடித்து கொடுத்துவிட்டார்.

அந்த குடும்பத்தில் மூன்றும் பெண் பிள்ளைகள். தோட்டமே வியக்கும் வண்ணம் மூத்த இரு பெண்களுக்கும் சடங்கு என்ற "ருது சோபன விஞ்ஞாபனம்" விமர்சையாக நடந்தேறியது.

கலியாணத்தை பார்க்க முடியுமோ? முடியாதோ? எனவே சடங்கை பெண் பிள்ளைகளுக்கு சீர் வரிசை செய்து சிறப்பாக நடத்துவது என்பது தற்போது தோட்டத்தில் நடைமுறையாகிவிட்டது.

அழைப்பிதழில் திருமண அழைப்பிதழ் பத்திரிகைக்கும் மேலாக சீர்வரிசை செய்யும் மாமன்மார்களின் பெயர் பட்டியல் அவ்வண்ணமே கோரும் சிறிய தந்தை, பெரிய தந்தை என ஒரு நீட்டோலையே அச்சிடப்படும்.

மாமன் சீர் செய்பவர் பெயரோ அவ் வண்ணமே கோரும் உற்றார் உறவினர் பெயரோ மடலில் இடம் பெறாதுவிட்டால் சடங்குவீடு சண்டை வீடாக மாறிவிடும்.

மனஸ்தாபம் ஏற்பட்டு, உறவு முறிந்து விடும். தோட்டத்தின் கலாச்சாரம் இது.

இத மட்டுமா? சடங்குவீடு, கல்யாண வீடு, சாவுவீடு என்றெல்லாம் யார் யாருக்கு என்னமொய் எழுதினோம்? என்ன சீர் செய்தோம்? என்று ஒரு தனியான தோட்ட புத்தகத்தில் எழுதி, அதனை பாதுகாப்பாக ரெங்குப்பெட்டியில் பத்திரப்படுத்தி வைப்பார் கள். சாவு வீட்டிலும் கட்டைமொய் பிடிக்கும் வழக்கம் இருந்தது. தலைக்கு ஒரு ரூபாய் என்பதில் தொடங்கி கோடிச்சேலை, கோடிவேட்டி யார் யார் போட்டார்கள் என்ற கணக்கு விபரமும் அதில் அடங்கும்.

சாவுவீடுகளில் கட்டைமொய் விபரத்தை எழுதி யார் யார் என்ன கொடுத்தார்கள்? என்பதை வழமை போல், ஒருவர எழுதி அன்று மாலையே கணக்கை சாவு வீட்டில் ஒப்படைத்து விடுவார்கள்.

கருப்பன் என்ற பெயரோடு கட்டைமொய் என்ற அடையும் ஒட்டிக்கொள்ளும். கட்டை மொய் கருப்பன் என்றும் ஒரு மௌசுதான்.

கலியாணம் காட்சியை பார்க்க நாங்கள் உயிரோடு இல்லாதுவிட்டாலும் பெண்ணுக்கு சடங்கை சிறப்பாக செய்து சிறுமிக்கு சேலைக்கட்டி பெரியமனுசியாக பார்த்து பூரிக்காத தோட்டத்து தலைமார் களும் உண்டா?

சுபநேரத்தில் முகூர்த்தகால் ஊன்றி பச்சைப்பந்தல் போட்டு, வாழைத்தோரணம், கலர் கலரான ஜிகுணா தாள்களில் அலங்கரித்து, வண்ணாள் மாத்துகட்டி அலங்காரம் செய்தால் கலியாணப்பந்தல் தோற்றுப்போகும்.

அதுமட்டுமா? இரண்டுநாள்கள் தோட்ட துரையின் சிபாரிசுக் கடிதத்தோடு, பொலிஸ் நிலையம் வழங்கும் அனுமதியோடு, தோட்டத்து மலைமுகடுகளிளெல்லாம் பகல் இரவு என பாராது எதிரொலிக்கும் கலைஞரின் பராசக்தியின் "ஓ... ரசிக்கும் சீமானே" முதல் "மன்மதலீலையை வென்றார் உண்டோ" என்ற வரை திரை கானங்கள் ரீங்காரம் செய்யும் "மாஸ்ட் வொய்ஸ்" ரெக்கோட்டுகள் சடங்கு வீட்டின் பெருமையை கூறும்.

தாய்மாமன் மற்றும் மாமனார் சீர்வரிசை யோடு வருபவர்கள் சடங்கு வீட்டுக்கு வருபவர்கள் நேரடியாக வந்து சேர்வ தில்லை. முச்சந்தியில்பழங்கள், புதுசேலை, சோப்பு, சீப்பு, கண்ணாடி, வளையல்கள் என்பவற்றை பெண்கள் சீர்த்தட்டில் ஏந்திவர சடங்கு வீட்டிலிருந்து மேள, தாளக்காரர் புறப்பட்டு வருபவர்களை வரவேற்று அழைத்துவர அப்போதும் சீர்வரிசைக்காரர்கள் முன்னோக்கி நடக்க மாட்டார்கள்.

ஒத்தைக் குரலில் ஓங்கி ஒலிக்கும் கரகரத்த மைக்கில் மாமனின் பெயரை யும், அவரின் உறவு முறையும், மேதா விலாசங்களையும் எடுத்துக்கூறி ஆட்டுக் கடாயுடன் வருகிறார் என்று ஒருதடவைக்கு, இருதடவை கூறிய பின்புதான், பட்டாஸ் வெடிக்க மாமனின் அலை பந்தலை நோக்கி நடைபயிலும்.

ஆலாத்தி பெண்களின் மரியாதை, மாலை அணிவிப்பு ஆகிய உபசரணை களோடு சடங்கு கிரியைகளுக்கு பின்னரும், சீர்கொண்டு வந்தவர்களுக்கு மரியாதை விருந்துபசாரனமென நாளைந்து நாள்களாக உபசரணைகள் தடபுடளாக நடைபெறும். மாயாண்டி கங்காணி தனது செல்வாக்கை பயன்படுத்தி தோட்டத்துரையின் அனுசரணையோடு தோட்டத்திற்கு அடுத்து புதிதாக ஆரம் பிக்கப்பட்ட வைத்திய சாலையில் பூங்கா வனத்தின் கணவன் கேசவனுக்கு அரசாங்க வேலை போட்டுக்கொடுத்து விட்டார். கேசவன் பூங்காவன தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகள். மூத்த இருவரும் ஆண்பிள்ளைகள், மூன்றாவது பெண் பிள்ளை. ஊர்மிளை எனஇ பூங்காவனத்தின் தாயார் காமாட்சி பெயர்வைத்து மகிழ்ந்தாள்.

காமாட்சி பாட்டிக்கு பெரியயெழுத்து இராமாயணம் முதல் மகாபாரதம் ஏன்... நல்லதங்காள் கதை சத்தியவான் சாவித்திரி கதையெல்லாம் அத்துப்படி. தாலாட்டுப் பாடல் ஒப்பாரி சொல்லி அழுதல் எல்லாம் அவளுடைய நாவண்ணம்.

மற்றவர்களுடன் உரையாடும் போதே கும்பகர்ணன், கூனி, சூர்ப்பனகை, துரியோ தனன் என்ற பாத்திரங்களின் இயல்பை அள்ளி வீசி பரிகசிப்பாள். அப்படியொரு புராண வசகுகள் அவள் நாவில் உறைந் திருக்கும் சரஸ்வதியாகும்.

கேசவன் எடுப்பாக வெள்ளை உடுப்பில் அரசாங்க ஆஸ்பத்திரியில் ஓடாவியென ஓடித்திரிகின்றான். டாக்டர் ஐயா சுண்ணா கத்தைச் சேர்ந்தவர்.

எந்த நேரத்திலும் இரவு பகல் பாராது தோட்டத்து நோயாளர்கள் அவரை சந்தித்து மருந்தை பெற்றுக்கொள்ளலாம்.

தோட்டத்தின் சமசஞ்சீவி டாக்டர் ஐயா போதாதிற்கு தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அவருக்கு ஒரு உதவியாளராக வேலைசெய்கிறார். எல்லோருக்குமே இனிப் பான செய்திதான் இது.

மாயாண்டி கங்காணி ஆட்டுக் கிடாவை வெட்டி, இரத்தம், ஈரல், இறைச்சி தொடையென டாக்டருக்கு அன்பளிப்பார். ஒரு காசும் வாங்குவதில்லை. எல்லாம் இனாம்தான்.

தற்காலிகமாக நியமனம் பெற்ற கேசவனை சிபாரிசு செய்து நிரந்தர பணியாளராக ஆக்கிவிட வேண்டும் என்று டாகடர் ஐயாவின் ஆசை.

ஆனால், கேசவனின் பிறப்புச் சான்றி தழில் இந்தியா தமிழன் என்ற வாசகம் மூடுமந்திரமாக அவருக்கு விளங்கியது.

நிரந்தரமாக்குவேன், பிரஜாயுரிமை சான்றிதழை கொண்டுவந்துதரும்படி கேட்ட அவருக்கு இலங்கை பிரஜாயுரிமைக்காக மனுப்போட்ட விண்ணப்பத்தின் படிவம் கிடைத்தது என்ற தபால் அட்டையை மட்டுமே காட்டக்கூடியதாக இருந்தது.

இரவில் "தாஸ்கண்பில்" இலங்கை வாழ் இந்திய பிரஜைகளின் தலைவிதியை நிர்ணயித்த சாஸ்த்திரி பொழுது விடிவதற்கு முன்னே மீளாதநித்திரையை அணைத்தது போல கேசவனின் எதிர்காலமும் சூன்யமாகிக்கிடக்கின்றது.

சாவு இன்றோ? நாளையோ? என்று படுத்தபடுக்கையாய் கிடக்கும் நோயாளி களுக்கெல்லாம் பிரஜாயுரிமை விசார ணைக்கு வரும்படி அழைப்புகள் தோட்டத் திற்கு வந்து சேர்ந்தன.

படித்து தான் படித்த படிப்புக்காக ஒரு அரசாங்க தொழிலுக்காக இரவு காத்து நிற்கும் இளைஞர், யுவதிகளுக்கு அழைப்பானது அங்கீகாரம் என்ற கடாட்சம் எட்டாக்களியே ஆனது.

கேசவனும் இந்தப்பட்டியலில் ஓர் அங்கம் தான்.

டாக்டர் ஐயா தன் மீது நம்பிக்கை வைத்து அரசாங்க கடமையை மட்டுமல்ல தனிப்பட்ட உதவியையும் செய்து போசிக்கும் கேசவனிடம் "ஒங்க மாமாவிடம் சொல்லி பிரஜாயுரிமை கந்தோரில் வேலை செய்யும் ஒரு ஐயாவை எனக்குத் தெரியும் அவருக்கு வேலைக்கார பிள்ளையொன்று தேவை அனுப்பிவைப்போம்" என்றார். இதன் படி ஒரு தோட்டத்து சிறுமி அதே வாரமே கொழும்பு போய் சேர்ந்தாள்.

ஒருமாதம் கழித்து, கொழும்பு சென்று சிறுமி, வீட்டுக்கார அம்மா பழுக்கக்காய்சிய அலுமினியம் கரண்டியால் கையில் போட்ட சூட்டுக் காயங்ளோடு தோட்டத்திற்கு வந்து சேர்ந்தாள். அவளுக்கு திருட்டுப் பட்டம் வேறு சன்மானகக் கிடைத்து.

வெகுவிரைவில் டாக்டர் ஐயாவுக்கு ஊரோடு மாற்றம் என்ற ஜீவமுத்தி விடுமென்ற முன் அறிவித்தல் வந்தது. இன்னும் மூன்று மாதங்களில் அவர் கோண்டாவில் கிராமிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெறுவார்.

கேசவன் காலையும், மாலையும் தனக்கு பிரஜாயுரிமைக்கு அழைப்பு வரும் என்று தபாலை எதிர்ப்பார்த்தான். ம்...வரவில்லை, ஏமாற்றமடைந்தான்.

மறுநாள் டாக்டர் கொழும்பில் அவருக்கு அறிமுகமான ஆபிசருடன் தொலை பேசியில் உரையாடினார்.

மாயாண்டியின் குடும்பம் விண்ணப்பித்த படிவத்தில் எண் பிழை, எழுத்துப்பிழை இருப்பதாக விபரம் தெரியவந்தது.

ஊர்மிளை ஐந்தாம் ஆண்டில் சித்தி யடைந்த நற்செய்தியை வீட்டிற்கு வந்து கூறினாள்.

இனி அவள் படிப்பை தொடர நகரத்தி லுள்ள பாடசாலையொன்றிற்கு செல்ல வேண்டும். ஊர்மிளையின் தோழிகள் சந்தோசப்பட்டார்கள். உங்கிலிக்குட்டி நாம் இனி ஒன்றாக டவுன் பாடசாலைக்கு போவோம். ஆங்கு பல விளையாட்டுக்களை நாம் விளையாடலாம் என்று அனைவரும் மகிழ்ந்தார்கள். தோழிகள் ஊர்மிளையை

உங்கிலிக்குட்டி என்று செல்லமாக அழைப்பார்கள்.

தோட்டப் பகுதிகளில் ஆண்பிள்ளைகளை உங்கா என்றும் உங்கா பயில் என்றும் செல்லமாக அழைப்பது வழக்கம்.

உங்கிலிக்குட்டி நகர்புற பாடசாலைக்கு சேர்ந்து படிக்க தயாராகிக்கொண்டிருந்த போது அவள் பருவமடைந்துவிட்டாள்.

மாமன் முறையான உறவுக்கார பையன் ஒருவன் குச்சிகட்டி அங்கே அதில் அவளை அமரவைத்தார்கள்.

தோட்டத்தில் சடங்குகளுக்கா பஞ்சம்? குலவையிட்டு இன்னும் வாழ்த்துப்பாடல்கள் பாடி நீராட்டினார்கள்.

தனக்கு நடக்கவிருக்கும் ருது சோபன விஞ்ஞாபன சடங்கு வைபவத்தை பற்றி கனவுகான தொடங்கிவிட்டாள்.

மாமன்சீர், பந்தல், தோரணம் எல்லாம் மலை மலையாக அவள் கனவில் பூத்தன.

சடங்கு நடைபெறும் நாளும் நெருங்கிக கொண்டிருந்தது.

இந்த வேளையில் தான் எண்பத்தி மூன்று ஆடிக்கலவரம் நாட்டையே சுட்டெடுத்து சுடுகாடாக்கியது. ஒரு வாரக் காலத்திற்குள் மலர்சோலையென விளங்கிய தோட்டம் மயானமாகியது.

லயங்கள் இருந்த இடங்கள் எங்கே? தீப்பற்றிய இறப்பர் தொழிற்சாலை இருந்த இடம் தெரியவில்லை. கோவிலையும் பாவிகள் விட்டுவைத்தார்களா?



மடவளையிலிருந்து மாத்தளை வரையி லும் அதற்கப்பாலுமுள்ள தோட்டங்கள் "நாஜி யுத்தத்தால் வீரியூட்டப்பட்ட நிலங்க ளாக கரிந்துகிடக்கின்றன.

எல்லோருமே இடம்பெயர்ந்து விட்டார் கள். தோட்டத்திலிருந்து கடைசியாக கிளிநொச்சிக்கும் புறப்பட்ட லொறியில் மாயாண்டி கங்காணியின் குடும்பமும் கேசவனின் குடும்பமும் ஏறி கண்ணீர் விட்டபடி வந்து சேர்ந்தார்கள்.

வடபகுதியில் தமிழர் பிரதேசமெங்கும் அகதிகளின் கண்ணீர் ஆறாக ஓடியது. தாம் இரண்டுஇ மூன்று பரம்பரையாக பாடுபட்டு உழைத்த தோட்டங்களை மட்டுமா பிரிந்தார் கள்? இழந்த உடைமைகள், சேமிப்புக்கள் எல்லாம் அபகரிக்கப்பட்டு வெறுங்கையோடு "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல" வேதனைபட்டு நிற்கும் ஒரு சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிப்பது எவ்வாறு?

காலம் கரைபுரண்டு ஓடியது. இன்பம் துன்பம் எல்லாம் மாறி மாறி வருகின் றனவே.

முகாம்களில் தங்கியிருந்த பலர் செய்வ தறியாது முன்பு வாழ்ந்த இடங்க ளுக்கே திரும்பிச் சென்றனர்.

தமக்கு நிரந்தர தீர்வு வேண்டும். காலம் காலமாக இந்த நாட்டில் பாதுகாப் பின்றி, தம்மால் வாழ முடியாது. துாம் பட்ட துன்பங்கள் போதும் அடுத்த தலை முறையாவது நிம்மதியாக, பாதுகாப் பாக வாழ வேண்டும் என்று கடல் கடந்து அகதிகளாக தமிழ்நாட்டிற்கு ஆயிரக் கணக்கானோர் தப்பிச்சென்றனர்.

தொப்புள் கொடி உறவை தேடினர். பு து வாழ்வு கிடைக்குமா?

கண்ணீரில் நனைந்த பல குடும்பங்களை கடல் அன்னையும் கண்ணீரில் மூழ்கடித்து கவலை சேர்த்தாள்.

மலைநாட்டில் பட்ட அவமானம் போதும் இனி அங்கு திரும்பிச்சென்று அவர்கள் முகத்தில் முழிக்கக்கூடாது. என்று வீராவேசத்துடன் இந்த மண்ணிலே புதுவாழ்வை தேடுவோம் என்று நம்பிக்கை யோடு அகதிமுகாம் களில் வாழ்க்கையில் நிலை கொண்டிருந்தவர்களுக்கு இரண்டு, ஆண்டுகளுக்கு பின்னர் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் கால் ஏக்கர் என காணித்துண்டுகள் கிடைத்தது.

மன்னார் மாவட்டத்தில் பூநகரி பகுதியில் கிடைத்த காட்டு நிலத்தில் வைரமிகு பாலைகளை வெட்டிச் சாய்த்து, கிணறு தோண்டி முட்செடிகளையும், காடுகளையும் எரித்து ஜெயபுரம் எனும் கிராமத்தை உருவாக்கினர்.

தமது திடசங்கடத்திற்கு கிடைத்த வெற்றி இது.

கேசவனின் குடும்பத்திற்கு கிடைத்த ஒரு ஏக்கர் காணியில் அவனது குடும்பம் குடியேறியது. ஆனால், அவனுடைய வாழ்வோ வேறு விதமாக அமைந்தது. இன்னும் கொஞ்ச காலம் தனது பழையதொழிலிலேயே வைத்தியசாலையில் வேலைபார்த்தால் அவனுக்கு நிரந்தர நியமனம் கிடைத்துவிடும் என்று கோண் டாவிலுக்கு வந்து சேர்ந்துவிட்ட டாக்டர் ஐயா ஆலோசனை கூறியிருந்தார். இந்த நம்பிக்கையோடு அவனது குடும்பம் ஜெயபுரத்தில் தங்கி மீண்டும் அவன் வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தான்.

நாட்டில் இவர்களுக்கிடையேயான சுமுக முரண்பாடு மோசமடைந்து முறுகல் நிலை முற்றியது. ஆங்காங்கே படைகளும் போராளிகளுக்குமிடையே யுத்தங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே யிருந்தன.

குண்டுவெடிப்புக்கள் ஊரடங்கு சட்டங் கள் என்பன எப்போது நிகழும்? என்று நிச்சயிக்க முடியாத நிலை.

இதனால் போக்குவரத்து அடிக்கடி

ஸ்தம்பிதம் அடைந்தது.

தமது குடும்பத்தை ஜெயபுரம் சென்று பார்ப்போம் என்று கேசவன் புறப்பட்டான். அன்று பஸ் ஓட்டம் நடைபெறாதது ஏமாற்றம் தான் ஜெயபுரத்திலிருந்து தபாலும் வருவது நின்று போய்விட்டது. தொலை பேசி வசதியும். இல்லை.

கேசவன் தனது மனைவி பிள்ளைகளை நினைத்து பெரும் வேதனைப்பட்டான். இந்த அரசாங்க வேலையை நம்பி தனது குடும்பத்தை பிரிந்தது பிழையான முடிவு என்று அவனுக்கு புலப்பட்டது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் அவன் ஜெயபுரத்திற்கு வந்தபொழுது அவனால் ஊர்மிளையை சந்திக்க முடியவில்லை. அவள் இப்போது வன்னா பாடசாலைக்கும் செல்வதில்லை. அவளுடைய பேச்சு என்ன சொல்கிறாள் என்று தனக்கும் புரிய வில்லை. இனவிடுதலை போராட்டம் என்றெல்லாம் கூறுகின்றாள். என்று தாய் கேசவனின் பாதங்களை கட்டிப்பிடித்துக் கொண்டு கண்ணீர் மல்க கூறினாள். அ வ ள ் அவளது சிநேகிதிகள் எல்லோருடனும் சேர்ந்து பயிற்சி பெறுவதாகவும் கூறினாள். கேசவன் எப்படியும் தான் மாத்தளைக்கு திரும்பி வருவதற்கு முன்னர் தன் மகள் ஊர்மிளையை சந்தித்து விட வேண்டும். இல்லாவிட்டால் மாத்தளைக்கு திரும்பிப் போவதில்லையென முடிவெடுத்தான்.

அன்று மாலை நோர்த்மாத்தளையில் முன்பு வாழ்ந்த வேலுசாமியை கேசவன் தற்செயலாக சந்திக்க நேர்ந்தது.

உங்குலிக்குட்டியை தான் அவசியம் சந்திக்க வேண்டும் என்ற அவாவை வேலுசாமியிடம் கண்ணீர் மல்கக்கூறினான்.

வேலுசாமி, அடுத்த நாள் விடிய காலை ஐந்து மணிக்கு ஆயத்தமாக இருக்கும படியும், தான் வந்து அவளை கூட்டிச் செல்வதாகவும் கூறிச்சென்றான்.

அன்று இரவு முழுவதும் கேசவனால் நித்திரைக்கொள்ள முடியவில்லை.

விடிந்தது. வேலுசாமி வந்து கேசவனை தனக்கு பின்னால் வரும்படி கூறி முன்னாள் நடந்து சென்றான்.

பாதையில் சிறிது துாரம்நடந்துசென்ற பின் ஒரு குறுக்குப் பாதையில் இருவரும் விரைந்தனர். பொழுது புலர்ந்து விட்டது. ஒரு குளத்தங்கரை அங்கே யுவதிகள் பலர் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு சற்றுத் துாரத்தில் காவலாக நின்ற ஒரு பெண்பிள்ளையை வேலுசாமியை இனங்கண்டு அழைத்துச் சென்றாள்.

அக்கூட்டத்தில் இருந்த பெண்கள் பல்வேறு விதமான ஆயுதங்களையும் குண்டுகளையும் ஏந்தியபடி அணிவகுத்து நின்றார்கள்.

சற்று நேரத்திற்குப் பின்னர் உங்குலிக் குட்டி தன் தந்தை கேசவனிடம் வந்து சேர்ந்தாள். அவளுடைய தலை முடி பின்னல் வித்தியாசமாக இருந்தது. அவளுடைய மேனியும் கறுத்து மெலிந்திருந்தது.

அவளைக் கண்ட கேசவன் அவளை கட்டித்தழுவி கொஞ்சி கண்ணீர் விட்டு “நீ ஏன்ம்மா அம்மாவையும் குடும்பத்தையும் விட்டு இங்கு வந்தாய்” வா அம்மாவிடம் போவோம் என்றான்.

---

## மனம் புகுதல்

. மலர்மகள், மதுரை.

அடர் மரங்கள்
பறவைகள், மிருகங்கள்
மூலிகைச் செடிகள்
காட்டுப் பூக்கள்
நீர் நிலைகள் எனத்
தன் உருவ அமைப்பில்
இருந்த வனம் பற்றிய
அடையாளக் குறிப்பில்

தற்போது
அதிகம் தென்படுவது
மனக் குரங்குகளின்
நடமாட்டமே !!!

இருவரும் கண்ணீர் சிநந்தினர். “ஊர்மிளை அப்பா, இங்கிருக்கும் எல்லோருமே தாய், தந்தை குடும்பத்தவரையும் விட்டு பிரிந்துதான் வந்திருக்கின்றார்கள். அப்பாவுக்கு நினைவிருக்குதானே எனக்கு சடங்குகூட செய்ய விடாமல் நம்ம வீட்டையும் எரித்து, தப்பி ஓடமுடியாத பாட்டா, பாட்டிகளையும் கொன்றார்கள் நாங்க என்ன குற்றம் செய்தோம்? நாங்க ஒரு பிழையும் செய்யவில்லையே. நம்ம தோட்டத்துப் பெண்கள் தினமும் உழைத்து கால் வயிறு, அரை வயிறு மற்றவர்கள் வாழ உழைத்துக் கொடுக்கின்றாங்க எங்களுக்கு ஒரு கடமை இருக்கு.

அப்பா நீங்க வீட்டுக்கு போங்க. நான் மாலையில் வந்து பார்க்கிறேன். நீங்க மாத்தளைக்கு போகாதீங்க. இங்கேயே இருங்க.

இந்த சந்திப்புக்கு பின்னர் மூன்று மாதங்களாக தான் சேர்த்து வைத்திருந்த சம்பளப்பணத்தையும் தனது குடும்பத்திற்காக சேகரித்த பொருட்களையும் சுமந்துக்கொண்டு தீபாவளி பண்டிகைக்கு முன்பதாக ஒரு வாரம் லீவு பெற்றுக்கொண்டு காலையிலேயே புறப்பட்டான் கேசவன்.

குண்டி கட்டுக்களை செல்வ விநாயகர் ஆலயத்திலிருந்து யாழ் நோக்கி செல்லும் பழம் பிள்ளையார் பஸ்சை பிடித்து ஜெயபுரத்தை வந்தடைவது அவனது எண்ணம்.

வழமை போல் பழம்பிள்ளையார் வந்தார். இவன் வழமையாக தரித்து நிற்கும் இடத்தில் பஸ் நிற்கவில்லை.

தீபாவளி பண்டிகைக்கு நாள் நெருங்கி விட்ட படியால் கண்டியில் முன்கூட்டியே ஆசனங்களை பதிவுசெய்தவர்கள் கூட மிதிபலகையில் தொங்கிக் கொண்டு சென்றார்கள்.

தனது பயணத்தை தம்புள்ளைக்கு வந்து வவுனியாவுக்கு பஸ் எடுத்து வவுனியாவிலிருந்து முருகடைக்கு வந்து அங்கிருந்து காட்டு வழியாக ஜெயபுரத்திற்கு செல்ல நினைத்தான். பஸ்சில் சனக்கூட்டம் அதிகமான நெரிச்சல்

முருண்டி பிள்ளையாரை தொழுது திருநீரை பூசிக்கொண்டு வெளியே வரும் போது முழங்காலிற்கு செல்லும் பஸ் புறப்பட்டுச் சென்று விட்டது.

சந்தியில் காத்து நின்ற அவனுக்கு பரிதாபம்காட்டிய இளைஞன், அந்த வழியில் தான் கொஞ்ச தூரம்செல்வதாகவும், தான இறங்கிவிடும் இடத்திலிருந்து குறுகிய தூரம் செல்லும் வேன்களில் இடம் கிடைக்கும் என்று அவனை அழைத்துச் சென்று குறிப்பிட்ட இடத்தில் இறக்கி விட்டான். பொழுது மாலையாகி விட்டது. இருள் பரவ மழை சிறிது சிறிதாக பெய்யத் தொடங்கியது. இனி வாகனங்கள் கிடையாது. நடப்போம் என்று நடக்கும் நாலைந்து கிழடுகளுடன் சேர்ந்து கேசவனும் நடந்தான். நடந்துச் செல்லும் பாதைகள் அமைந்திருக்கும் அவரவர்களின் வீட்டை நெருங்கி வந்தவுடன் அவர்கள் வீடு போய் சேர்த்து விட்டார்கள்.

இன்னும் சற்றுத்தூரம் தான். ஜெயபுரத்தை சென்றடையலாம் என்ற நம்பிக்கையோடு நடந்தான் கேசவன்.

ஒரு சிறிய காடு அதனை ஊடறுத்துச் செல்லும் நீரோடை. அதனையும் கடந்து விட்டால் ஜெயபுர சந்தியை சென்றடைந்து விடலாம்.

காட்டைக் கடந்து நீரோடையை கடக்க முயற்சிக்கும் போது, பெரும் சத்தம், பயங்கரமாக மிருகங்கள் காலடியோசையும், நடமாட்டமும், தெளிவாகக் கேட்கின்றது.

யானைகளின் கூட்டம் பெருங்கூட்டம் அசைவதாகத் தெரியவில்லை. மனதில் தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டு நீரோடைக்கருகிலுள்ள மதகின் பள்ளத்தில் ஒளிந்தான்.

சிறிய யானைக்குட்டிகள் இருளோடு இருளாக மறைந்த தாயின் பின்னே ஓடுகின்றன. இருளென்றாலும் நடப்பது என்னவென்பதை அவனால் புரிந்துக் கொள்ள முடிந்தது.

யானைகளின் கூட்டம் அவ்விடத்தை விட்டு போவதாக தெரியவில்லை.

கேசவன் மறைந்திருந்த மதகின் அருகே துர் நாற்றம் வீசியது. பிணவாடை அடித்தது. அவனுக்கு அருகில் யாரோ பிணமாக எரிந்து கிடப்பதுபோல் புலப்பட்டது.

இவைகள் எவற்றையுமே பொருட்படுத்தாமல் தான் பத்திரமாக ஒளிந்திருந்தால் போதும் விடிந்தால் வீடு போய் சேர்ந்து விடலாம். விடிவதற்குள் யானைக் கூட்டம் சென்றுவிடும். தான் கொண்டு வந்த பொருட்களின் மூட்டையை தலைக்கு அணையாக வைத்து ஓடும் நீரில் நனையும் கால்களை ஒரு கல்லின் மேலே வைத்து விடியும் வரை நம்பிக்கையோடு சாய்ந்திருந்தான். பிணவாடை வீசிக் கொண்டேயிருந்தது. விடிந்தது. யானைக் கூட்டம் போய்விட்டது. சூரிய கதிர்கள் காட்டில் பரவின.

இனி ஜெயபுரத்திற்கு போகலாம். தான் கொண்டு வந்த மூட்டையுடன் நாசியை துளைக்கும் துர்நாற்றத்தை துண்டால் துடைத்துக் கொண்டு இரண்டு அடிகள் ஊர்ந்து சென்று பார்த்தான்.

பிணவாடை மேலும் அதிகமாகியது. நாலைந்து இளம் பெண்பிள்ளைகளின் உடல்கள் வெந்து கருகிக்கிடந்தன.

அவனுக்கு ஐயோ என்று கதற வேண்டுமென இருந்தது. அவற்றில் ஒன்று உங்கிலிக் குட்டி. தன் வாழ்வை இந்த மண்ணுக்காக தியாகம் செய்த ஊர்மிளையைப் போல உங்குலிகுட்டி செய்த உயிர் தியாகம் யாருக்காக.

## தன்முனைக் கவிதைகள்

ஒருவர் மீது ஒருவர்
குற்றம் சுமத்துவர்
செய்த தவறுகளை
மறைப்பது கடினம்

ஓடுகள் இன்றி
வெற்றிடமாகக் கூரைகள்
சூரிய ஒளியில்
மின்சார உற்பத்தி

சில மனிதர்களை
புரிந்து கொள்ள முடிவதில்லை
ரசம் போன கண்ணாடியில்
தெளிவில்லா விம்பம்

மழையையும் வெய்யிலையும்
தலையில் வாங்குபவள்
பரிசலின் துணையோடு
ஆற்றைக் கடக்கலாம்

கல்லுக்கு உயிர் கொடுத்த
சிற்பியைக் கௌரவிப்பர்
தேய்த்து உடைந்தால்
எறியப்படும் உளி

கனவுகளை நிறைவேற்றி
ஆசிர்வாதம் வாங்கினேன்
அம்மாவின் நிழற்படம்
சுவரில் மாலையுடன்

**அப்புத்துரை ஜெகன்**
சுவிஸ்

# குழந்தைக்கு தலைசிறந்த உணவு தாய்ப்பாலே



மழலைக்கு என்றும் அமிழ்தம் தாய்ப்பாலே
மழலைக்கு மாசற்ற உணவும் தாய்ப்பாலே...
அன்னைக்கு அழகு சேர்ப்பதும் தாய்ப்பாலே
அழகு மழலைக்கு சிறந்ததும் தாய்ப்பாலே....



இணையற்ற இனிப்பான உணவும் தாய்ப்பாலே
இன்னுயிரில் என்றும் இனிப்பதும் தாய்ப்பாலே...
தாய்மையின் தலைசிறந்த கடமைகளின் பிறப்பிடம்
தாயையும், சேயையும் இணைக்கும் அதிசயம்....

சேயின் வதனத்தை தாயுள்ளம் கண்டு மகிழும்
தாயின் வதனத்தை மழலை மனத்துள் சேர்க்கும்...
மாசற்ற புன்னகையால் மழலைமுகம் மலரும்
மாசற்ற அன்பும் இனிதாய் கலந்திருக்கு,ம்...



விந்தையாய் காக்கும் ஆயுதம் தாய்ப்பாலே
நோயற்ற வாழ்வுக்கான முதற்படியும் இதுவே...
தாய்ப்பால் கொடுப்பதே தாயின் தலைசிறந்த கடமை
மழலை விரும்பும் மந்திரக் கருவூலம் இதுவே...



மழலையின் நல்வாழ்வுக்கான நல்லதொரு உயிர்த்துளி
மண்ணுலகில் மானுடத்தை மலரச் செய்யும் உன்னதத்துளி...
மண்செழிக்க விசும்பு தருவதோ மழைத்துளி
மழலை செழிக்க அன்னை கொடுப்பதோ தாய்ப்பால்துளி....

தாய்ப்பால் கொடுக்கும் தருணத்தில் அழகு பூத்திடும்
தாயுள்ளம் மகிழ்ந்து மண்ணில் மலர்ந்திடும்...



ஆம்...
உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுங்கள்
உங்கள் தலைமுறையோடு நோயின்றி வாழுங்கள்...

ம.அமிர்தா தமிழரசன், தேனி.



# சிறுவர்கள் சங்கமம்

## பள்ளியில் சில நாட்கள்...

எனக்கு நியாபகம் இருக்கிறது!
முதன் முதலில்
பள்ளி சென்ற நாள்
நியாபகம் இருக்கிறது!

ஆசானிடம் அடி வாங்கியது
நியாபகம் இருக்கிறது!
அவ்வாசானே தட்டிக் கொடுத்ததும்
நியாபகம் இருக்கிறது!

நண்பர்களுடன் துள்ளித் திரிந்த
காலம் அது!
விளையாட்டு என்றால் உற்சாகமான
காலம் அது!

விடுமுறை என்றால் களிப்பான
காலம் அது!
பரீட்சை என்றால் அஞ்சி ஓடிய
காலம் அது!

அது ஒரு மகிழ்ச்சியான
இன்ப நாட்கள்!
என் நெஞ்சிலென்றும் நீங்காத
அழகிய நாட்கள்!.


பெயர் = கிருபாகரன் சங்கீதனா
வயது = 14, தரம் = 09
பாடசாலை = மு/ மல்லாவி மத்திய கல்லூரி


## நம்பிக்கைகொள். இலட்சியம் வெல்!


அபிநயா
11 ஆம் வகுப்பு, தந்தை பெரியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி


பெண்ணே நாட்டின் கண்ணே
பெருமைக்குரியவள் நீயே
அக்னி பூவே !
சாதிக்கும் பெண்தானே
சரித்திரமாய் நின்றாய்
சொல்லுக்கு பயந்து நிற்காதே
தன்னம்பிக்கையை நீ இழக்காதே!
சிறுமையை நினைத்துத் தயங்காதே
வலிகளை கண்டு வருந்தாதே
உன் பாதையை நீயே உருவாக்கிவிடு
உன் பயத்தை குப்பையில் வீசிவிடு
இந்தச் சமூகம் உன்னை கீழே
விழவைக்கும்
விழுந்து விடாதே
எழுந்து நில்
வீட்டைக் காக்கின்றாள் பெண்
நாட்டையும் ஆள்கிறாள் பெண்
பெண் சமைக்கப் பிறந்தவள் அல்ல
சாதிக்கப் பிறந்தவள்
பெண்ணே நம்பிக்கை கொள்

தன்னம்பிக்கை கொள்
அலட்சியப் படுத்தும் உலகிலே
உன் இலட்சியம் வெல்லும்
ஒருநாள்
புறப்படு பெண்ணே
புறப்படு
நம்பிக்கை கொள்
இலட்சியம் வெல்









சி. க. மகிழன்








ச.இராஜ ஸ்ரீ
XI -$A_4$
தந்தை பெரியார்
அரசு பெண்கள்
மேல்நிலைப்பள்ளி
புதுச்சேரி





வெ. அபிஜித்

# மீனும், விவசாயியும்

ஒரு ஊரில் விவசாயி ஒருவர் இருந்தாராம். அவரு ரொம்ப ஏழையாம். அவரோட அப்பாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லாம இருந்துச்சாம். அதனால அவரை ஹாஸ்பிட்டல்ல சேர்க்கணும். ஆனால் அந்த விவசாயிகிட்ட காசே இல்லையாம்.

அவங்க மனைவிகிட்ட ஒரே ஒரு தங்க தோடு இருந்துச்சாம். அதை வித்து காசு வாங்கிட்டு வரலாம்னு அந்தத் தோடை எடுத்துட்டு கடைக்குப் போனாராம்.

போற வழியில ஒரு ஆறு இருந்துச்சாம். ஆத்துல மீன் பிடிக்கிறதுன்னா அவருக்கு ரொம்ப பிடிக்குமாம். அதனால மீன் பிடிச்சுட்டு போலாம்னு ஆத்துக்குப் போனாராம். அப்போ தோடு டப்பாவை அவருக்குப் பக்கத்துல வச்சிட்டு, மீன் பிடிச்சிட்டு இருந்தாராம்.

அப்போ திடீர்னு ஆத்துக்குள்ள இருந்து ஒரு பெரிய சுறா மீன் வந்து தோடை தூக்கிட்டுப் போயிடுச் சாம். உடனே விவசாயிக்கு அழுகையா வந்து டுச்சாம்.

என்ன செய்றதுன்னு தெரியாம, அழுதுகிட்டே அவருக்கு பிடிச்ச கடவுள் கிருஷ்ணன் கிட்ட வேண்டினாராம்.

அப்போ அங்க ஒரு வீரன் வந்தானாம். விவசாயி கிட்ட ஏன் அழறீங்கன்னு கேட்டவுடனே அவரு மீன் தோட்டை தூக்கிட்டு போய்டுச் சின்னு சொன்னாராம். உடனேயே அந்த வீரன் ஆத்துக் குள்ள குதிச்சு, சுறா மீனோட சண்டை போட்டு தோடைக் கொண்டு வந்து குடுத்தாராம். விவசாயி அந்த வீரனுக்கு நன்றி சொன்னாராம்.

நீதி : நமக்கு கஷ்டம் வரும் போது கடவுள் கண்டிப்பா நம்மள காப்பாத்துவாரு.

**பி. ரிதன்யா**
ஒன்றாம் வகுப்பு
முசிறி





# இயற்கை காவலன் அணில்

**அணிலே அணிலே ஓடி வா**
**குதித்து குதித்து ஓடி வா**

**உணவாய் கனிகள் தந்திடுவேன்**
**உடனே நீயும் ஓடி வா**

**அழகு வாலை ஆட்டியே**
**அருகில் நீயும் ஓடி வா**

**குளிர்கால உணவுகளை சேகரிக்க**
**தரையில் குழிப்பறித்து புதைத்திடுவாய்**

**நீ மறந்த விதைகள் மரமாகி**
**மண்ணில் காடுகள் உருவானதே**

**இயற்கையை காக்கும் காவலன் நீ**
**எங்கள் வீட்டு குட்டி அணில் நீ**



**ஜனனி குமார்**
**நாகப்பட்டினம்**

# தாத்தாவின் பாசம்



**ஜீ.மைத்ரேயி**
**வந்தவாசி**

கிராமத்தில் விசுவின் தாத்தாவும், பாட்டியும் வசித்து வந்தார்கள் .விசுவின் அப்பா குமாரும், அம்மா சாந்தாவும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள். இருவரும் நகரத்தில் உள்ள பள்ளியில் பணிபுரிந்து வந்தார்கள்.

அவர்களுக்கு விசு மட்டும் ஒரே மகன். ஆகையால் பெரும் செல்லமாக வளர்ந்து வந்தான். அப்பா, அம்மா இருவரின் பேச்சைக் கேட்டு சிறந்த மகனாக வளர்ந்து வந்தான்.

வாரத்தின் ஐந்து நாட்கள் பள்ளிக்கு செல்வதும், விடுமுறை நாட்களில் தனது பொன்னூர் கிராமத்தில் வசிக்கும் தாத்தா, பாட்டியை பார்க்க சென்று விடுவதுமாக இருப்பார்கள். அதுவும் விசு மீது தாத்தா அளவற்ற பாசத்தை வைத்திருந்தார். பாட்டிக்கு ஒரே மகனான குமார் மீது அளவற்ற பாசம். பேரன் மீது அதிகமாக இருக்கும்.

வாரத்தின் தொடக்க நாளின் திங்கட் கிழமை மீது கோபமாகவும், வெள்ளிக் கிழமை இரவு நேரத்தின் மீது அளவற்ற மகிழ்ச்சியை தெரிவிப்பார்கள் பாட்டி யும், தாத்தாவும். அவர்கள் வீட்டில் செல்லப்பிராணி நாய் ஒன்று வசித்து வந்தது அதன் பெயர் பட்டு.

பட்டுக்கு சனி, ஞாயிறு என்றால் பெரும் மகிழ்ச்சியாக இருக்கும். விசு கூடவே இருக்கும், விசுவும் வரும்போது பாட்டி தாத்தாக்கு இனிப்புகளை வாங்கு வது மட்டுமல்லாமல் பட்டுக்கு தின் பண்டம் வாங்கி வருவதைப் பார்த்த தாத்தாவுக்கு பெரும் மகிழ்ச்சி.

தாத்தா விசுவுக்கு விடுமுறை நாளில் விவசாயத்தைப் பற்றியும், மரம், செடி, கொடிகளைப் பற்றியும் சொல்லித்தருவார். விசு எப்போது விடுமுறை நாள் வரும் தாத்தா, பாட்டியை பார்க்கச் செல்லலாம் என எப்பொழுதும் நினைத்துக் கொண்டே இருப்பான். அதுபோலவே தாத்தாவும் விடு முறை நாளை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பார்கள்.



# இதுதான் மலை

**சு.பிரவந்திகா**
*பட்டாபிராம், சென்னை - 600072*

‘தேர்த்திருவிழாவிற்கு வாங்க‘ ஓசூரில் இருந்து அத்தை அழைக்கவும் மகிழினிக்கு ஒரே சந்தோசம்.

‘போகலாம்... போகலாம்‘ என அம்மா விடம் கேட்கத் தொடங்கி விட்டாள்.

‘சரிசரி... எல்லோரும் சேர்ந்து போய் கொண்டாடிட்டு வரலாம்‘ அம்மா சொன்னதும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள்.

அன்று காலை ஐந்து மணியளவில் மகிழினி, அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரும் சென்னையில் இருந்து ஓசூருக்கு காரில் புறப்பட்டார்கள். கார் கிளம்பிய சிறிது நேரத்தில் மகிழினி தூங்கத் தொடங்கிவிட்டாள்.

தூக்கத்திலேயே ஓரிடத்தில் நீண்ட நேரமாக கார் நிற்பதை உணர்ந்த மகிழினி கண் விழித்துப் பார்த்தாள். அவர்களது காருக்கு முன்னும், பின்னும் நீண்ட வரிசையில் பேருந்துகள், லாரிகள், பைக்குகள், கார்கள் என நின்றிருந்தன. நாலைந்து போலீஸ்காரர்கள் அங்கு நின்று இருந்தார்கள்.

‘என்னாச்சு தாத்தா, ஏன் இவ்வளவு நேரமாக வண்டி நிற்கிறது?‘

‘தெரியலையே செல்லம்‘ தாத்தா சொல்லவும் ‘நான் கேட்டு வருகிறேன்‘ சொல்லிய படி இறங்கிய அப்பா, போலீஸ்காரரிடம் சென்று கேட்டு வந்தார்.

‘முக்கியமானவங்க இந்த வழியாக காஞ்சிபுரம் கோயில் போறாங்களாம். அதான் போக்குவரத்தை நிறுத்திட்டாங்க‘ அப்பா சொன்னார்.

‘அதற்கு ஏன் நம்மளை நிறுத்துறாங்க?‘ மகிழினி கேட்கவும்‘ அவங்களுக்கு

நெறைய வேலை இருக்கும் செல்லப்பட்டு. இப்படி தடங்கல் இல்லாமல் இருந்தா வேகமா போயிடலாம். அதனால்தான் போக்குவரத்து ஒழுங்கு செய்யறாங்க' அம்மா பதில் சொன்னார்.

'அப்ப நம்மளுக்கு, இங்கே நிற்கிற மத்தவங்களுக்கு வேலை இல்லையா அம்மா? இவ்வளவு நேரம் சும்மா நிற்கிறோமே?'

'ச்சூச்சூ... அப்படிலாம் பேசக்கூடாது. இங்கே இப்படித்தான்' அப்பா சொல்லும் போதே வரிசையாக பல வண்டிகள் 'சர்சர்ரென்று' வேகத்துடன் முன்னும், பின்னும் காவலுக்கு வர, நடுவில் சிகப்பு விளக்கு சுழல அந்த வண்டி போனதை வியந்து பார்த்தாள் மகிழினி. அவர்கள் சென்றதும், மற்ற வண்டிகள் இருந்த வரிசை நகரத் தொடங்கியது.

'ஒருத்தர் சாமி கும்பிட இத்தனை பேர்கள், கார்கள் கூடப் போறாங்க. ஒத்த கார்ல நாம இத்தனை பேர் போறோம்' மகிழினி சொல்லவும் 'இதுவும் இல்லாமல் சிரமப்படுறவங்க நெறைய பேர் இருக்காங்க அம்மு' ஆச்சி சொல்லவும் மகிழினி அமைதியாகி விட்டாள்.

போகும் வழியில் சாலையோரங்களில் மரங்கள், கொஞ்சம் தூரத்தில் பசுமையான மலைகள், பூச்செடிகள் இருந்ததைப் பார்த்த மகிழினி மகிழ்ச்சியுடன் 'இந்த மலைகள், மரங்களைப் பார்க்க பச்சைபசேலென எவ்வளவு அழகாக இருக்கிறது! சென்னையில் நெடுஞ்சாலைகள் இப்படி இல்லையே... ஏன் ஆச்சி?' என்று கேட்டாள்.

'வாயத் தொறந்தா ஆயிரத்தெட்டு சந்தேகம்... கொஞ்ச நேரம் பேசாம வா' அம்மா சொன்னதும், மகிழினி முகம் வாடியது.

'அட, நம்மிடம் கேட்காத யாரிடம் கேட்பாள்? குழந்தைகள் சந்தேகம் கேட்பது நல்லது தானே?' சொல்லியபடியே மகிழினி பக்கம் திரும்பிய ஆச்சி 'ஒரு காலத்தில் சென்னையும் இப்படி பசுமையாகத்தான் இருந்தது. மக்கள் தொகை பெருக்கம் காரணமாக, அவர்களின் தேவைகளுக்காக, இயற்கையை அழித்து வாழ்விடமாக மாற்றிக் கொண்டார்கள்' என்றார்.

'ஓஓஓ... இயற்கை அழிய நாம்தான் முக்கிய காரணமாக இருக்கிறோம். இல்லையா ஆச்சி?' மகிழினி கேட்கும் பொழுதே கார் ஒரு ஓட்டலின் முன் நின்றது.

'காலை உணவு இங்கு சாப்பிடுவோம்' அப்பா சொன்னதும் அனைவரும் கீழே இறங்கினார்கள். பின்புறம் முழுவதும் மலைச்சிகரங்களுடன், தென்றல் காற்று வீச, இயற்கைச் சூழலில் மிகவும் அழகாக இருந்தது ஓட்டல்.

காரிலிருந்து இறங்கிய மகிழினி, அம்மாவிடம் அலைபேசியைக் கேட்டாள்.

'எதற்கு இப்போது அலைபேசி கேட்கிறாய், பேசாமல் வா, முதலில் சாப்பிடலாம்' அம்மா அழைக்கவும் 'அம்மா... அம்மா, இன்னும் சில ஆண்டுகள் கழித்து இந்த மலைகள் இருக்குமோ, என்னவோ? பாருங்கள் எவ்வளவு கம்பீரமாக, பசுமையோட அழகா இருக்கு. இப்பவே நான் புகைப்படமும், காணொளியும் எடுத்து வைத்துக் கொள்கிறேன். பிற்காலத்தில் மற்றவர்களுக்கு காண்பிக்கலாம்' என்றாள்.

'ஆமாம், மகிழினி சொல்வதும் சரிதான், இனிவரும் தலைமுறையினருக்கு 'இதுதான் மலை' என்று காணொளி வழியாகத்தான்

காட்டணும் போல... சுயநலம் மிக்க மனிதர்கள்' வருத்தப்பட்டார் தாத்தா.

அம்மாவின் அலைபேசி வழியாக அந்த மலைகளையும், மரங்களையும் காணொளியாக எடுத்து வைத்துக் கொண்டாள் மகிழினி.





ஜெ. ஸ்ரீ ஹர்ஷவர்த்னி





வெ. விஷ்ணு பிரசன்னா





சை. ரோஷன் அகமத்





ஜெ. ஸ்ரீஹரிஹரன்

# வாட்ஸ்அப் வானரங்கள்

## கமல்சங்கர்

அடர்ந்த பெரிய அழகிய காட்டில் எல்லா திசைகளிலும் இருந்து "டிக்... டிக்.. டிக்.." "ஸ்வாய்ங்.. ஸ்வாய்ங்.." என்ற சத்தம் நிற்காமல் கேட்டுக் கொண்டே இருந்தது. இது என்ன கடிகாரத்தின் சத்தமா? என்றால் அதுதான் இல்லை.

அதைத் தெரிந்த கொள்ள வேண்டும் என்றால், அம்மா ஒட்டகச்சிவிங்கி கொடுத்த "வாட்ஸ்அப் வானரங்கள்" என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டு இருக்கும் குட்டி ஒட்டகச்சிவிங்கி யாஷ் உடன் சேர்ந்து நாமும் அந்தக் கதையில் பயணிப்போமா ?

பிருந்தாவனம் என்ற அழகிய காட்டில் ஒட்டகச்சிவிங்கிகள் கூட்டமாக வசித்து வந்தன. அந்த ஒட்டகச்சிவிங்கி கூட்டத்தில் யாஷ் என்ற குட்டி ஒட்டகச் சிவிங்கி எப்பொழுதும் சுறுசுறுப்பாக எதாவது செய்து கொண்டே இருக்கும். யாஷ்க்கு, அம்மா அப்பாவுடன் விளையாடுவது, புத்தகங்கள் படிப்பது , பாட்டுப் பாடுவது, நண்பர்களுடன் விளையாடுவது என எதாவது அரட்டை அடித்துக் கொண்டே பிடித்தமான செயல்களைச் செய்து கொண்டே இருக்கும்

ஒரு சில நாட்களில் யாஷ் எதுவும் செய்யப் பிடிக்காமல் அமைதியாக அமர்ந்து இருக்க ஆரம்பித்தது. என்ன காரணம் என்று தெரியவில்லை அம்மா, அப்பாவுடனும் விளையாட வரவில்லை. சரியாகப்பேசவும்இல்லை. நண்பர்களுடன் விளையாடப் போகவும் இல்லை. பாட்டு பாடக் கூட மனமில்லாமல் இருந்தது.

இதைக் கவனித்த அம்மா ஒட்டகச் சிவிங்கி தன்னுடைய குழந்தையை நினைத்துக் கவலைப்பட்டு கொண்டே இருக்கையில், தற்செயலாக ஒரு புத்தகம் கண்ணில் பட்டது. யாஷுக்கும் புத்தகம் என்றால் ரொம்பவும் பிடிக்கும் . உடனே "டேய் இந்தா இந்த புத்தகத்தைப் படி" உனக்கு மிகவும் பிடிக்கும். என் அம்மா எனக்குக் கொடுத்த புத்தகம். இதில் உணர்வுப் பூர்வமான, அறிவுத்திறனை வளர்க்கக் கூடிய நிறைய கதைகள் இருக்கு. படித்துப் பார்" என்று கொடுத்துச் சென்றது.

அந்தப் புத்தகத்தை வேகமாக வாங்கிய யாஷ் அதை ஆர்வத்துடன் திறந்து படிக்க ஆரம்பித்தது. அதில் பல வண்ண படங்களுடன் இருந்த அந்தப் புத்தகத்தில் கண்ணில் பட்ட முதல் கதையின் தலைப்பு "வாட்ஸ்அப் வானரங்கள்".

மிக உயரமான விண்ணைத் தொடும் அளவுக்குப் பெரிய மரங்கள், கண்ணை கவரும் புள்ளி மான் கூட்டங்கள், சின்னச் சின்ன நீரோடைகள், மரத்திற்கு மரம் தாவி விளையாடும் குரங்குக் கூட்டங்கள், யானைகள், புலிகள், சிங்கங்கள் பார்க்க பார்க்க இரம்மியமான சூழல் நிறைந்த வனத்துறை கட்டுப்பாட்டில் இயங்கும்

சுற்றுலா தலமான அதியனூர் காடுகள். எப்பொழுதுமே பறவைகள் ரீங்காரம், விலங்குங்களின் சத்தம் என அந்தக் காடே பயங்கர பிஸியாக நம்ம ஊர் நகரம் மாதிரி இருக்கும்.

அங்கே ஒவ்வொரு முறையும் சுற்றிப் பார்க்க நிறைய சுற்றுலா பயணிகள் வருவார்கள். வனத்துறை அதிகாரிகள் அங்கு வரும் பயணிகளிடம் காட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்துவார்கள். மற்றும் அவர்களை சோதனை செய்து பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடி பாட்டில்கள் போன்றவற்றை வாங்கி வைத்த பின்பு தான் உள்ளே அனுமதிப்பார்கள்...

அந்தக் காட்டில் அவர்கள் அனைவரின் கவனத்தை ஈர்க்கும் விலங்கு என்றால் குரங்குகளும், அவை செய்யும் சேட்டைகளும் தான். அதை அனைவருமே மெய் மறந்து பார்த்து இரசிப்பார்கள். ஒருநாள் சுற்றுலா பார்க்க வந்த பயணியரில் ஒருவரின் கையில் இருந்த போனில் இருந்து டிக்.. டிக்.. என்று சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. அதைக் கவனித்த குரங்குகளில் ஒன்று, "ஐ! இது பார்க்க மிகவும் விநோதமாக உள்ளதே, இதைக் கண்டிப்பாக நண்பர்களிடம் காட்ட வேண்டும் என்று எண்ணியது". அந்த சுற்றுலா பயணி அசந்த நேரத்தில் போனை "லபக்" என்று பிடுங்கிக் கொண்டு சென்றது. இதைப் பார்த்த மற்ற பயணியர்கள் எல்லாம் அந்த இடத்தை விட்டு ஓட ஆரம்பித்தனர்.

போனை எடுத்துச் சென்ற குரங்கு, மற்ற குரங்குகளிடம் காட்ட அதன் மீது "ஸ்வாய்ங்.. ஸ்வாய்ங்.." என்று தட்டியதும் பல பல Games வந்தது. உடனே மிகவும் குஷியாக விளையாட ஆரம்பித்தது. இதைப் பார்த்த மற்ற



குட்டி விலங்குகளும் பயணியர்களிடம் இருந்து போனை பிடுங்கி விளையாடத் தொடங்கின. அந்த காடு முழுக்க டிக்.. டிக்.. "ஸ்வாய்ங்.. ஸ்வாய்ங்.. என்ற சத்தம் மட்டுமே கேட்டுக் கொண்டே இருந்தது.

இரவு, பகல் பாராமல் எல்லா விலங்குகளுமே அந்த போனிலேயே பொழுதைக் கழித்தன. சொல்லப்போனால் அதிலேயே மூழ்கின எனலாம். இதனால் சுற்றுலா பயணியர்களை மகிழ்வித்து வந்த அனைத்துக் குட்டி விலங்குகளும் தங்களுடைய இயல்புக்கு மாறாக கூட்டமாக உட்கார்ந்து மொபைல் போனிலேயே இருந்ததால், விலங்குகளைப் பார்க்க வரும் சுற்றுலா பயணியர்கள் கூட்டம் குறைந்தது. இதனைப் பார்த்த மற்ற பெரிய விலங்குகள் எவ்வளவு சொல்லியும் இவைகள் கேட்பதாக இல்லை.

இந்த நிலைமையை மாற்ற எண்ணிய பெரிய விலங்குகள் ஒரு நாடகம் நடத்த முடிவு செய்தனர். அதன்படி காட்டில் உள்ள அனைத்து விலங்குகளும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டுமென அழைப்பு விடுத்தனர்.. அந்த நாடகத்தில் ஒரு காட்சியில் குட்டி முயல் படு வேகமாக, தாய் முயலை முந்தி ஓட வேண்டும். ஆனால் குட்டி முயலால் முடியவில்லை. அதேபோல் குட்டி மான்களால் தங்களுடைய வயதான பெரிய மான்களை போல் ஓட முடியவில்லை.குட்டி குரங்குகள் தாவுவதையே மறந்து விட்டது. குயிலுக்கு ஓசை வராமல் வெறும் காற்று தான் வந்தது.மயிலுக்கு நடனம் ஆடத் தெரியாமல் கைப்புள்ள நடந்தால் எப்படி இருக்குமோ அப்படி ஆகிவிட்டது. இதே போல் எல்லா குட்டிஸ் விலங்குகளும் அவைகளுடைய இயல்பை இழந்திருந்தது. அப்பொழுது தான் எல்லா குட்டி விலங்குகளுக்கும் தெரிய வந்தது, நாம் நாமாக இல்லை என்று. அதே நேரத்தில் பெரிய விலங்குகள் பேச ஆரம்பித்தவுடன் தங்களுடைய தவறு என்னவென்று உணர ஆரம்பித்தன. மொபைல் போன் தான் எல்லாவற்றிக்கும் காரணம் என்று அறிந்தவுடன் வெட்கி தலை கவிழ்ந்தன.

இதைப் பார்த்து மனம் வருந்திய குரங்குகளும், குட்டி விலங்குகளும் தங்கள் கையில் இருந்த போனை மனிதர்களிடமே தூக்கி எறிந்து விட்டு அவர்கள் அம்மா, அப்பாவைக் கட்டிக்கொண்டு மன்னிப்பு கேட்டு அழுதனர்.. அதியனூர் காடு பழைய பொலிவுடன் குதூகலமானது. "சுற்றுலாத்துறை மூலமாக பயணிகளிடமிருந்து அவர்களுடைய கைப்பேசிகளும் உள்ளே வரும் முன் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப் பட்டது."

என்று இந்தக் கதையைப் படித்து முடித்த யாஷ் குட்டி ஓடிச் சென்று "அம்மா, இந்த புத்தகத்தை படித்து நான் எப்படி இருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். நான் எப்போதும் போல் இருப்பேன் அம்மா"! என்று கட்டிக் கொண்டது.

*என்ன நண்பர்களே, இது மனிதர்களாகிய நமக்கும் பொருந்தும் தானே!*









# இமயச் சிகரத்தில் இதுவொரு தேன்கூடு இளைய உள்ளங்களின் ஏணி



**கல்லை பாவலர் மலரடியான்**
தமிழ்நாடு அரசு விருதாளர்

மழலைச் செல்வம் மகிழ்ச்சிச் செல்வம் என்பார்கள்.

*'குழலினிது யாழினிது என்பதாம் மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்'*

என்பார் திருவள்ளுவர். அத்தகைய உயர்ந்த செல்வத்தை, வீட்டின் புதையலை நாம் சரியாக வார்த்தெடுக்க வேண்டாமா? ஆம்! அவர்கள் சமூகத்தில் அறநெறியோடு சிறந்த குழந்தையாக வளர வேண்டும். வாழ்வில் கல்வி, செல்வம், வீரத்தோடு ஆளுமை செலுத்த வேண்டும். அதைத்தான் 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்பார் வள்ளுவர். தோன்றுக என்பது வெளிப்படுதல் என்னும் பொருளில் முன்வைக்கின்றார். அந்த வெளிப்பாடு என்பது பலரும் போற்றும் வகையில் தன்னையும், தன் சார்ந்த மக்களையும் உயர்த்தும், உயர்த்துவதாக அமையும் என்பதே!

அவ்வையின் ஆத்திச்சூடி மூலம் பதினாறாம் நூற்றாண்டில் தொடங்கியது சிறார் இலக்கியம். சிறார் இலக்கியம் மொழி நடையிலும், பொருளிலும், நூல்

அமைப்பிலும் வளர்ந்தோர் இலக்கியத்தில் இருந்து வேறுபட்டது. சிறுவர்களுக்கு ஏற்ற, அவர்களுக்கு ஈர்ப்பான விடயங் களாக அமைய வேண்டும்.

இன்று சிறார் இலக்கியத்தின் தேவை சிறார் கல்வியில் மட்டுமல்லாமல் அன்றாட வாழ்விலும் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது என்பேன். சிறார் இலக்கியத்தின் ஆரம்பமாக. 1840 - களில் சிறுவர்களுக்கான முதல் இதழாக 'பாலதீபிகை' வெளிவந்தது

1901 - இல் கவிமணி தேசிக விநாயகம் அவர்களின் சிறுவர் பாடல் வெளிவந்தது 1915இல் பாரதி பாப்பா பாட்டினைத் தந்தார்.

ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், உலகநீதி இப்படிச் சிறார்களை மேம்படுத்த நூல்கள் வந்தன. அழ வள்ளியப்பா குழந்தைகளுக்காகவே எழுதினார். பூவண்ணன், புவனை கலைச்செழியன், பெரியசாமித்தூரன் போன்ற வரிசை நீள்கிறது.

இன்று அந்த வரிசையைத் தொடுகிறார் அன்புச்செல்வி சுப்புராஜூ. ஆம்! ஒரே காலத்தில் இரண்டு தொகுதியைக் கொண்டு வருவது என்பது சிறப்பான செயல்முறை தானே! சமீப காலமாக சிறார் இலக்கியத்தில் பலரும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார்கள் என்பது மகிழ்ச்சியாக உள்ளது. இது வளர வேண்டும். நாற்றங்காலை வளப்படுத்தி னால்தான் வளரும் பயிர் செழிப்பாகும். 'பட்டை தீட்டத் தீட்டதான் பளபளக்கும் வைரம்' என்பார் பூவண்ணன் அவர்கள். ஆகவே சிறார்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்தும் வேலை அன்னை, தந்தை, ஆசிரியர் எனத் தொடர்கிறது. அதிலே முக்கிய பங்களிப்போடு குழந்தை எழுத்தாளர்கள்- கவிஞர்கள் முன்மாதிரியாக அமைய வேண்டும்.

சிறார்களின் அறிவு வளர்ச்சிக்கும், மனநல வளர்ச்சிக்கும் பெரிதும் பயன் படுகிறது சிறார் இலக்கியம் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக குழந்தைகளின் படைப்பாற்றலை வெளிக்கொண்டு வரும் பெரிய ஊடகம் இதழ்களே! இதழ்களில் தங்களின் கவிதை, கதை, துணுக்குகள், ஓவியம், புதிர்கள், விடு கதைகள் வெளிவரும் போது மனதில் மகிழ்வை பெருக்குகின்றன. அதனால் படைப்பூக்கமும், அறிவில் தெளிவும் மேம்பட உதவுகின்றன எனலாம்.

தமிழில் சிறார் இலக்கியம் இப்பொழுது கிளைத்துச் செழித்து வளர்கிறது என்றே கூற வேண்டும். சிறார்களை மையமிட்டு எழுதிய, எழுதும் படைப்பாளர்களால், சிறார் இதழ்களும் வெளியிடப்பட்டன. இதோ, **'குட்டிச் சுட்டிப் பாடல்கள்' பாகம் 1 & 2 நூல்களின் தொகுப்பாசிரியர் அன்புச்செல்வி சுப்புராஜூ** அவர்கள் மிகவும் அற்புதமான ஒரு முன்னெடுப்பைச் செய்திருக்கிறார்கள். சிறார்களை சிறப் பான பாதையில் வழி நடத்தும் மாலுமி யாக பங்களிப்பைத் தந்துள்ளது கண்டு பெருமிதம் கொள்ள வைக்கின்றார். தான் கற்றதை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி மகிழ வைக்கவும், மாண்புடன் நாட்டில் மலரச் செய்யவும் இந்தப் புத்தகத் தயாரிப்பு பெரிதும் உதவும் என்றே நம்பிக்கை கொள்ளலாம்.

அப்படித்தான் பார்க்கிறேன் அன்புச்செல்வி சுப்புராஜூவின் இந்த நூல் தொகுப்பின் நுட்பத்தை! 'குட்டிச் சுட்டிப் பாடல்கள்' தொகுப்பு ஒன்று 'துள்ளு மீனிலே' தொடங்கி 'சுட்டிப் பூனையும், எலியும்' என்னும் தலைப்பிலே முடிகிறது. அன்புச்செல்வி அவர்களே முடித்து வைக்கிறார்.

பூனையும், எலியும் ஒற்றுமை என்பதை எங்கேனும் பார்த்ததுண்டா? இங்கே பார்க்கக் கொடுக்கிறார் தொகுப்பாசிரியர். நட்பின் சிறப்பு, ஒற்றுமையின் பலம் குழந்தைகளுக்கு வேண்டும் என்பதின் அறம் இங்கே பகிரப்படுகிறது.

ஆப்பம் பாடல் 'தோசையம்மா தோசை' என்ற பாடலை நினைவு படுத்துகிறது அதே வரிசையில் புதிய யுக்தி.

'அன்பான முத்து
அழகான முத்து
அறிவான முத்து
- - - .-.-.-.-.-.-.-.-.-.-.
என் தம்பி பேரு முத்து
எங்கள் குடும்பத்தோட சொத்து'

என்று உறவைப் பேசும் பாடலாக ஒன்பதாம் வகுப்பு லோசிகா சிந்தித் துள்ளார்.

குழந்தைகளுக்கு பலூன் மேலே எப்பொழுதும் ஒரு ஈர்ப்பு உண்டு. அதை உணர்ந்து'வண்ணவண்ணப்பலூன்கள்கள்' என்றும் 'வானூர்தி போல மிதந்திடும்' என்றும் உயர்வைச் சுட்டும் பாடல்களாக அமைந்து சிறப்பூட்டுகின்றன.

நூலகப் பூங்கா, எனக்குப் பிடித்த மழை இப்படி இனிமையான அறிவை நெறிப்படுத்தி, ஆனந்தம் ஏற்படுத்தக் கூடிய பாடல்களாக நூல் முழுவதிலும் காணப்படுகின்றன.

பெ. அன்பரசியின் செயற்கை நுண்ணறிவு பாடல் குழந்தைகளின் மனதை குதூகலிக்கச் செய்து அவர்களில் என்ன மனநிலையை உண்டாக்கும் என்பதை பொம்மை மீது ஏற்றிக்காட்டும் பாங்கு சிறப்பு.

குழந்தைகளைக் கொண்டாட அன்புச்செல்வி சுப்புராஜுவின் 'குட்டி சுட்டிப் பாடல்கள்' பாகம் இரண்டு தொகுப்பு ஒரு வரப்பிரசாதம் என்பேன்! இதிலே நல்ல கவிதை அனுபவம் வாய்ந்த படைகளப் பாவலர் துரை மூர்த்தியில் தொடங்கி அன்புசெல்வி சுப்புராஜு தொகுப்பாசிரியரில் முடிகிறது.

நாடு காக்கப் போகிறேன்' என்னும் தலைப்பே முதல் பாடலாக அமைந்து சிறார் மனதில் நாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் விதமாக அமையப் பெற்றுள்ளது. சிறார் மனதில் நாட் டுக்குச் சேவை செய்தவர்களின் சிறப்பை, வரலாற்றைக் கூறுவதால் நாட்டுச் சேவையில் மனம் ஈடுபடும் என்ற நோக்கிலே சிறப்பானத் தொடக்கமாக உள்ளது.

எறும்பிடம் நாம் கற்க இனிய செய்தி கள் உள்ளன என்பதை எறும்புப் பாடல் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. பயன்பாட்டில் காணாமல் போகும் மிதி வண்டியைப் பற்றிய அறிமுகம் சிறப்பு.

முதல் தொகுப்பில் எலியும் பூனையும் நட்பைக் காட்டினார். இரண்டாம் தொகுப்பிலே எலியை அடக்கும் பூனை யைக் காட்டுகிறார்.அறிய வேண்டியதே!

காட்டை மனிதன் அழிப்பதால் நாட்டை நோக்கி விலங்குகளின் வருகை அதிகமாகிக் கொண்டுள்ளன. அந்த விலங்குகளைப் பற்றியும் அருமையானப் பாடல் பதிவாகி உள்ளது.

இப்படி நூல் முழுவதும் பல்வேறு தலைப்புகளில் அறநெறியைப் போதிக்கும் பாடல்களும், சிறார்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல் கொடுக்கும் பாடல்களும் நெஞ்சை

ஈர்க்கும் வண்ணம் பல்வேறு கவிஞர்கள், படைப்பாளுமைகளின் கருத்தோட்டம் மிக்கது, அனுபவம் வாய்ந்தது என அற்புதமானத் தொகுப்பினை மலர்கள் தொகுப்பது போல் தொகுத்துள்ள அன்புசெல்வி சுப்புராஜு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதிலே ஒரு சிறப்பு என்னவென்றால் ஆகச் சிறந்த கவியாளுமை பெற்ற சின்ன மணல்மேடு த. இராமலிங்கம் ஐயா போன்றவர்களின் பாடல்களைப் பார்த்ததும் வியந்து போனேன்.

'உன்னை நம்பி இருக்கு' என்னும் தலைப்பிலே-

'அறிவே செல்வம் பாப்பா
அதுவே உன்னைக் காக்கும்'
கிழக்கே தோன்றும் விளக்கு'

என்றெல்லாம் அறிவின் சிறப்பை படைப் பாக்கியுள்ளார்.

இது போன்ற பல சிறப்பு வாய்ந்த படைப்பாளர்களால் படைக்கப்பட்டு தொகுக்கப்படுள்ள இந்தத் தொகுப்பு ஓர் தேன்கூடு என்று சொன்னால் மிகையாகாது என்பேன். இந்தத் தொகுப்பில் உள்ள அத்தனை பாடல்களும் குழந்தைகளை குதூகலிக்கச் செய்யும் பாடல்களாக வளம் வருகின்றன.

இப்படி இன்னும் இன்னும் பல தொகுப்பு களைக் கொண்டு வந்து சிறார்களின் தமிழ் வேட்கையை வளர்த்தெடுக்க வேண்டும் என்று வாழ்த்து கிறேன். குறிப்பாக இளைய உள்ளங்களைத் தொகுப்பில் சேர்த்து இருக்கும் பாங்கினையும் பாராட்டுவதில் மகிழ்கிறேன்.

தொடரட்டும் தமிழின் சேவை.

# ஹைக்கூ கவிதைகள்

•

குவிந்து கிடக்கும் குப்பைகளிடையே
தெளிவாகத் தெரிகிறது
மனிதனின் கோர முகம் !

•

தன் எழுச்சியுடன்
சிறகு விரிக்கும் பறவை
சுருங்குகிறது வானம்!

•

வானவில்
பலவண்ணங்களுடன் காணப்படுகிறது
பஞ்சவர்ணக் கிளி!

•

மணற்குன்று
காற்றின் திசைக்கேற்ப உருமாறும்
நகரும் மேகம்!

•

வண்ண விளக்குகள்
விழாவினைச் சிறப்பாக்குகின்றன
கலை நிகழ்ச்சிகள்!

•

புயல்மழை
மீனவர்வாழ்வை புரட்டிப் போடுகிறது
அந்நியரின் துப்பாக்கிச் சூடு!

•

பாலைவன மண்
புழுதிப் புயலில் அடித்துச் செல்லப்படும்
ஓலைக் குடிசை!

•

அறம்சார் கதைகள்
மனதிற்குள் நீங்காமல் நிற்கின்றன
கலைஞர்களின் ஒப்பனைகள்!

•

பண்ணை வீடு
இயற்கைச் சூழலோடு வாழ உதவுகிறது
மலை கிராமம்!

•

சாலை விரிவாக்கப்பணி
சுறுசுறுப்பாக நடைபெறுகிறது
ஊழல் பண ஒதுக்கீடு!

•

**கவிஞர் கவிதா அசோகன்**
ஆசிரியர் திருச்சி

# அன்புள்ளஆசிரியரே

அறிவுப்பசியோடு அலைகிற
சின்னஞ்சிறு பறவைகளுக்குத்
தாய்ப் பறவை நீங்கள்

வகுப்பறை...
உங்களின் வானம்
எங்களின் கூடு

கரும்பலகையின் கதாநாயகி
முகஸ்துதியை விரும்பியதில்லை
முகவரிகள் பல உண்டாக்கவும்
தயங்கியதில்லை நீங்கள்

சுண்ணக்கட்டிகளின்
வெண்ணிற எழுத்துகளில்
எத்தனையோ சுயங்களுக்கு
வண்ணம் தீட்டியவர் நீங்கள்

கைக்கொண்ட பிரம்பதுவே
தவறுகள் களைந்திட நீங்கள்
ஏந்தும் சூலாயுதமோ

பாடங்களோடு பண்பொழுக்கத்தையும்
குழையத் தருபவர் நீங்கள்

தமிழைச் சொல்லி
தமிழால் சொல்லி
தாயின் பெருமை
உணர்த்தியவர் நீங்கள்

அறிவியல் சோதனைகளோடு
வாழ்க்கைச் சோதனைகளையும்
கையாளத் கற்றுத் தருபவர் நீங்கள்

கணக்குப் பாடங்களில்
எதிர்காலச் சூத்திரத்தின்
மந்திரத்தை மொழிபவர் நீங்கள்

எங்களின் தனித்திறன்(மை)
அறிந்து செயலாற்றும்
பல்கலை வித்தகர் நீங்கள்

உங்களின் வானம் விட்டு
எங்களின் வேறோர் வானத்திற்கு...
உயரமாய் உயரமாய்...
சிறகு விரிக்கிறோம் நாங்கள்

பொறாமையற்றப் பார்வையோடும்
பெருமைமிகு சிரிப்போடும்
கையசைப்பில் வாழ்த்தைச்
சொல்கிறீர்கள் நீங்கள்

நான் விரும்பும்
பார் போற்றும்
கதாநாயகியே எனக்கு
எப்போதும் நீங்கள்!

உங்களையும் எங்களையும்
இணைத்திடும் ஆசிரியர்தினப் பாலத்தில்
ஊர்ந்து கொண்டேயிருக்கின்றன
பழைய நினைவுகளின் நிஜங்கள்



பி. ஹேமா
முசிறி

# அலா 'ரம்'

மணிராம் கார்த்திக்
மதுரை



காலை 11.35 மணிக்கு மேல் இருக்கும்,

தையல் மிசின் சப்தம், இடையூறாக இருக்க, சட்டென்று கண்களை திறந்தான் வெங்கடேஷ்.

மனைவி கலா, தையல் மிசினில் துணி களை தைத்து கொண்டு இருந்தாள்.

கண்களை மெதுவாக திறந்தான். தன் அருகில் இருக்கும் அலாரம் வைத்த கடி காரத்தை பார்த்தான். கடிகாரம் ஓடாமல் நேரம் 11.10ல் நின்று இருந்தது.

பதட்டமானான். சட்டென்று சுவற்றில் உள்ள கடிகாரத்தை பார்த்தான்.

11.40 நெருங்கிவிட்டது. அவன் 11.15க்கு அலாரம் வைத்து இருந்தான்.

பதட்டமாக வெங்கடேஷ் எழுந்தான்.

"என்னடி, மணிஆச்சு உசுப்பல?. அலா ரம் நின்னு போயிருக்கு, நான் தினமும் எத்தனை மணிக்கு எந்திரிப்பேன்னு உனக்கு தெரியாதா?" என்று மனைவி கலாவை நோக்கி கோபமாக கூறினான்.

அதற்கு அவனை கண்டு கொள்ளாத வளாய் கலா தன் தையல் வேலையை பார்த்து கொண்டு இருந்தாள்.

வெங்கடேஷ் எழுந்து, முகத்தை கழுவி, அரைகுறையாக பல் விளக்கி, தலையை சீவி, அடுத்த ஐந்து நிமிடத்தில் தயார் ஆனான்.

வேகமாக தன் சட்டையில் உள்ள பையில் கைவிட்டு பார்த்தான். இருநூறு ரூபாய் இருந்தது.

"என் செல்ல பொண்டாட்டி," என்று அவளின் கன்னத்தில் முத்தமிட்டான்.

"சரி நான் போய்ட்டு வாறன்" என்று கிளம்பினான் வெங்கடேஷ்.

அப்போதும் அவனை கண்டு கொள்ளா மல் கல் நெஞ்சகாரியா இருந்தாள் கலா.

அவன் கிளம்பியதை ஒரு பொருட்டாக கூட கண்டு கொள்ளவில்லை கலா.

"இன்றைய பொழுது நல்ல பொழுதாக இருக்கட்டும்" என்று தன் முன் இருந்த கடவுளை வணங்கினாள் கலா.

சைக்கிளின் வேகம் அதிகமாக இருந்தது வெங்கடேஷ்க்கு. அவன் முகத்தில் ஆர்வம் இருந்தது, அதை விட தான் தாமதமாக எழுந்து விட்டதால், அதனால் ஏற்பட்ட படபடப்பு , அவன் மனதில் ஓடிக்கொண்டு இருந்தது.

கையில் கட்டி இருந்த கை கடிகாரத்தை பார்த்தான். நேரம் 11.53 காட்டியது.

சைக்கிளின் வேகம் அதிகரித்தது. சிக்னல். வெறுத்து போனான்.

"என்னா பொழப்பு? ச்சே! ஒருத்தன் ஒரு அவசர வேலையா போனா , குறுக்கக மறுக்க ஆளுக, வண்டி, பத்தாதிற்கு ரோடு

நல்லா இல்லை, பள்ளம் குழி, இதுல இந்த சிக்னல் வேற?" என்ற புலம்பல் வெங்கடேஷ்க்கு.

சிக்னலை கடந்து வேகம் கொண்டான் வெங்கடேஷ்.

வெங்கடேஷின் முகத்தில் மகிழ்ச்சி. கடை இன்னும் திறக்கவில்லை.

கை கடிகாரம் காட்டிய நேரம் 11.58.

அரசு பார் முன் சைக்கிளை பார்க் செய்தான். பையில் இருந்த இருநூறு ரூபாய் நோட்டை ஒரு தடவை எடுத்து உறுதி படுத்தி கொண்டான் வெங்கடேஷ்.

கடை திறப்புக்கு ஆவலாக இருந்தான் வெங்கடேஷ்.

நேரம் 12.01,

"என்னப்பா, நைட்டு மட்டும் சரியா 10 மணிக்கு கடைய மூடிறிங்க. திறக்கிறது மட்டும் மூணு நிமிஷம், ஐந்து நிமிஷம் லேட்டா திறக்கிறது எந்த ஊரு நியாயம்?" என்று புலம்பிய படி, தனக்கு வேண்டிய சரக்கின் பெயரை கூறி, அந்த பாட்டிலை கையில் வாங்கியதும் மட்டற்ற மகிழ்ச்சி வெங்கடேஷ்க்கு.

பிறந்த குழந்தையை கையில் தாங்கிய, மன நிலையில் வெங்கடேஷ்.

வழக்கம் போல பாட்டிலை அந்த மரத்தின் ஓரத்தில் நின்று ராவாக குடித்து, முடித்தான் வெங்கடேஷ்.

அன்றைய பொழுது அப்போது தான் திருப்தியாக இருந்ததை உணர்ந்தான் வெங்கடேஷ்.

குடிப்பதற்கு அலாரம் வைத்து, தன் குடும்பத்தினர் என்ன செய்கிறார்கள்? என்று நினைக்காமல் குடியை முக்கியமாக நினைக்கும் குடிமகன் வெங்கடேஷ்.

காலையில் எழுந்து, சாப்பாடு செய்து பிள்ளைகளுக்கு கொடுத்து, பிள்ளைகளை பள்ளிக்கு கொண்டு சென்று விட்டு, பிறகு வந்து வீட்டு வேலைகளை முடித்து விட்டு, தையல் வேலை பார்த்து, அதில் வரும் வருமானம் கொண்டு குடும்பத்தை நகர்த்தி கொண்டு இருக்கிறாள் மனைவி கலா(கல் நெஞ்சகாரி என்றது தவறு என்று இப்போது தான் புரிந்தது).

கணவன் வெங்கடேஷ் வேலைக்கு, சரிவர போவது இல்லை.

காசு கிடைத்தாலும், அதில் குடித்து பணத்தை வீணாக்கி விடுவான் வெங்கடேஷ்.

குடிக்கு தரும் முக்கியத்துவத்தை, தன் குடும்பத்திற்கு கொஞ்சமாவது கொடுத் தால் நன்றாக இருக்கும் நம் குடும்பமும்.

குடி குடியை கெடுக்கும்.



# வான் சிறப்பு..




## லோகநாதன் ஜி

வட்டாட்சியர் விருதுநகர் மாவட்டம்


பருவம் மறவாது வந்தே வளத்தைப்
   பெருக்கி வனப்பூட்டும் மழையே வாழ்க !
தருகிறக் குணம் கொண்ட தர்ம தேவனுன்
   பெருமையைப் புரிந்தெம் இதயம் மகிழ்ந்தோம்!
அரும் வானவர்கள் பாற்கடல் எடுத்த
   அமிழ்தம் அறிவோம்; தரணி மகிழத்
திரு வானமே ! கடல் மேய்ந்து நீ சிந்தும்
   நீரமிழ்தத் தால்தான் நீளுதிவ் வையமே (1)

புவியில் வசிக்கும் மனிதர் களுக்கு
   அருந்திட நீராகத் திகழு கின்றாய்..
அவர்கள் புசிக்கின்ற பயிர்கள் ஓங்கித்
   தழைத்திட உணவாக இருக் கின்றாய்
தவிக்கும் விலங்கு பறவை களுக்கும்
   வழங்கியே நீ தாகத்தைத் தணிக் கின்றாய்
புவிபெய்யும் மழையே! வான எழிலே!
   உணவே! உணவுக்கும் உணவே வாழ்கவே (2)

வானம் என்கிறத் தாய் தர மறுத்தால்
வைய மழலைக்கு ஏதிங்கே வாழ்வு
வேணும் அளவில் ஈந்திடும் அளவால்
தானே உயிர்கள் தழைப்பதும் இங்கு..
காணும் விரிகடல் சூழ் அகல் புவியில்
வான்மழை பொய்த்து தூறாது பிறழ்ந்தால்
ஊணுக் கில்லையே வழி! பசிப்பிணி
போக்கும் பெயல் நீ உலகத்தின் அணி. (3)

கார்மேகம் சூழாமல் வானிருந் திட்டால்
வாரி வளத்தை வழங்குமா பூமி?
பார்தாழ வாராமல் வான்முகில் போயின்
வேளாண்மை யால்புவி மேம்பட் டிடுமா?
ஏர்வாழ! உலக உயிர்கள் வாழ!
வான்மழை வேண்டுமே இல்லை என்றாலோ
யார்கொள்வர் மேழியை மேதினி யிங்கே;
யார் புகுவர் கழனி செய்திடவே! (4)

விரிந்தும் விரியா திருந்தும் எங்களை
வியப்பில் வைப்பதேன் மேகக் கூட்டமே!
கருத்தும் வெளுத்தும் கலவரம் மூட்டி
பரபரப் பாக்கல் ஏன் வான் முகில்களே!
வருகை தந்து வாழ்விலே வசந்தத்தை
பாரென்றுக் காட்டி நலம்செய் வதும் நீ
மறுத்தே வாரா மலிருந்து எங்களை
வதைப்பதும் நீ ! தகுமோ சொல் மழையே. (5)

வெறித்து வானம் பெயல்தர மாட்டாமல்
இயற்கை மறுக்கும் நிலையும் வந்தால்
வருந்தும் உலகிலே வறுமைகள் பெருக
வராதே மகிழ்ச்சி மனத்துள் கிளர்ந்து..
கருத்த மேகத்தை காணாமண் ணுயிர்கள்
பசியாற வேறொரு வழியுமில் லையே!
திரளா மேகங்கள் அருளா தாலே
சிறுபுல் லுமிங்கே அரிதின் அரிதே. (6)

ஆறுகள் நகர்ந்து சேர்வதால் தானே
நீள்கடல் மங்கை நீலம் பூசுகிறாள்
வாரிகள் கூடி மாரி கலப்பதால்
தானே ஆழி அழகால் மிளிர்கிறாள்.
தூரிவான் பெய்து கோடிறங்கி நீண்டுப்
பேரிகை கொட்டிப் பெயர்ந்தும் நகர்ந்தும்
பாருற்ற வான்நீர் கலவா திருந்தால்
மாகடல் தன்நிலை தாழ்த லுறுதியே. (7)

எழிலி கூடாமல் விவசாயம் ஏது..
வேளாண்மை யின்றி செழுமைகாணல் எங்கு?
செழுமை குறையின் நிலமையும் தாழ்வு
வளமை இறங்கினால் வாட்டம் வரவு
மழையில் லாதுபோனால் உழைப்பும் ஏது
உழைத்தால் தான்வரும் உற்சாகத் தரவு
விழைந்தே இறைவன் வழிபாட்டை வானம்
வழங்காத போது நடத்துவ தேது (8)

தானம் காண்பதும் தவங்கள் கொள்வதும்
வானம் இரந்து வழங்கு வதாலே!
மானிட தர்மம் தழைப்பது மேகம்
மாரியாய்ப் பெய்து வளம்தர லாலே!
பாணனும் பொருணனும் ஏழ்மை போக்கி
வாழ்ந்தது வான்மனம் மகிழ்ந்த தாலே
வானமும் ஈகைக் குணம்கெட்டுப் போனால்
தான தருமத்தை யார்தொழு வாரே! (9)

தரணி வாழ்வின் ஆதாரம் நீர் நீயே
திரிந்தவான் மேகம் தரும் அமிழ்தம் நீயே
பருவம் மாறாது வரும் அருள் நீயே
கதிர்கடல் முகில் தரும் வரம் நீயே!
திரியும் விசும்பின் திறம் தந்த பாவே!
இனிய உன் சந்தத்தால் திளைக்கும் பாரே!
சிறும் பெரும் தூறலால் சீருறும் மாரி நீ
இல்லை என்றால் இல்லையிந்த பூமியே (10)

# இடது கை பழக்கம்: தடையா? தனித்துவமா?




**ஆயிஷா சகீலா உமர்தீன்**
(Dip in Early Childhood Care & Development)

ஒரு குழந்தை முதன்முதலாக வண்ணப் பென்சிலை எடுத்து, காகிதத்தில் ஒரு கோடு கிழிக்கிறது. அந்த மழலையின் கண்கள் ஆச்சரியத்தில் விரிய, அந்தக் கோட்டை அது தனது இடது கையால் நீட்டுகிறது. அதைக் காணும் பெற்றோர் அல்லது உறவினரின் முகத்தில் ஒரு மெல்லிய கவலை ரேகை படர்கிறது. 'ஐயோ, இடக்கையால் எழுதுகிறானே!' என்ற மெல்லிய முணுமுணுப்புடன், அந்தப் பிஞ்சுக் கரங்களிலிருந்து பென்சிலை வாங்கி, அதன் வலது கையில் திணிக்க முதல் முயற்சி தொடங்குகிறது. இங்கேதான், ஒரு மாபெரும் தவறுக்கான முதல் விதை விதைக்கப்படுகிறது. இடது கை பழக்கம் என்பது திருத்தப்பட வேண்டிய தடையா அல்லது போற்றப்பட வேண்டிய தனித்துவமா? இந்தக் கேள்விக்கான விடையை அறிவியல், உளவியல் மற்றும் சமூகப் பார்வைகளுடன் விரிவாக அலசுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இடக்கைப் பழக்கத்தின் மீதான இந்த எதிர்மறைப் பார்வை இன்று நேற்று உருவானதல்ல. பல நூற்றாண்டுகளாக, பல கலாச்சாரங்களில் இது ஒரு தீய அறிகுறியாகவே பார்க்கப்பட்டது.

இது ஒரு பழக்கமல்ல, மூளையின் இயல்பு



நவீன அறிவியல் தனது ஆதார ஒளியால் விலக்கியுள்ளது.

மூளையின் கட்டமைப்பு: கைப்பழக்கம் (handedness) என்பது மூளையின் இரண்டு அரைக்கோளங்களின் (Hemispheres) செயல்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புடையது. பெரும்பாலான வலது கை பழக்கமுள்ளவர்களுக்கு, மொழி, தர்க்கம் போன்ற திறன்களைக் கட்டுப்படுத்தும் மூளையின் இடது அரைக்கோளம் ஆதிக்கம் செலுத்தும். இதற்கு நேர்மாறாக, இடது கை பழக்கம் உள்ளவர்களுக்கு, படைப்பாற்றல், கற்பனை, உள்ளுணர்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் வலது அரைக்கோளம் ஆதிக்கம் செலுத்துகிறது. இது ஒரு இயற்கையான, பிறப்பிலேயே அமைந்த நரம்பியல் கட்டமைப்பு. அதை மாற்ற முயற்சிப்பது, ஒரு கணினியின் அடிப்படை இயக்க முறைமையை (Operating System) மாற்றியமைக்க முயல்வது போன்ற ஆபத்தான செயல்.

இது இருமை அல்ல, ஒரு தொடர்ச்சி: கைப்பழக்கம் என்பது வெறும் இடது-வலது என்ற இருமை அல்ல. சிலர் இரு கைகளையும் சமமாகப் பயன்படுத்தும் திறன் (Ambidexterity) கொண்டவர்களாக இருப்பார்கள். இதுவும் மூளையின் தனித்துவமான அமைப்பைக் காட்டுகிறது.

கட்டாய மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள்

ஒரு செடியை அதன் இயல்புக்கு மாறாக வளைத்து வளர்க்க முயன்றால் அது முறிந்து போவது போல, ஒரு குழந்தையின் இயற்கையான கைப்பழக்கத்தை மாற்ற முயன்றால், அதன் ஒட்டுமொத்த வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

கல்வியில் பாதிப்பு: மூளையின் இயற்கையான வழிகளை மாற்றம் செய்வதால், கற்றல் செயல்முறை பெரும் பாதிப்புக்குள்ளாகிறது. எழுத்துக்களைக் கண்ணாடியில் பார்ப்பது போல் மாற்றி எழுதுவது (Mirror Writing) வார்த்தைகளை அடையாளம் காண்பதில் சிரமம் (Dyslexia), கணிதச் சிக்கல்களைப் புரிந்துகொள்வதில் தடுமாற்றம் என அவர்களின் கல்விப் பாதை கரடு முரடாகிவிடும்.

உளவியல் பிரச்சினைகள்: 'நீ செய்வது தவறு' என்று தொடர்ந்து சொல்லப்படும்போது, அந்தக் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை என்னும் நச்சு விதை ஆழமாக ஊன்றப்படுகிறது. தன்னம்பிக்கை சிதைந்து, பதட்டம், மன அழுத்தம், சமூகத்திலிருந்து ஒதுங்கி இருத்தல் போன்ற கடுமையான உளவியல் பிரச்சனைகளுக்கு அது ஆளாகிறது. தன்னுடைய இயல்பே ஒரு குற்றம் என்ற எண்ணம், அதன் ஆளுமை வளர்ச்சியையே சிதைத்துவிடும்.

பேச்சு மற்றும் இயக்கத் திறனில் பாதிப்பு: மூளையின் மொழி மையமும் இயக்க மையமும் குழப்பத்திற்கு ஆளாவதால், சில குழந்தைகளுக்குத் திக்கிப் பேசும் பழக்கம் (Stuttering) ஏற்படலாம். மேலும், வலுக்கட்டாயமாகப் பயன்படுத்தப்படும் வலது கையால் எழுதப்படும் கையெழுத்து அழகற்றுப் போவதோடு, கை-கண் ஒருங்கிணைப்பு (Hand-eye coordination) குறைந்து, விளையாடுவது போன்ற செயல்களில் கூட ஒருவித ஒழுங்கில்லாத ஏற்படும்.

இடது கை பழக்கத்தின் சிறப்பம்சங்கள்

ஆராய்ச்சிகள், இடது கை பழக்கம் உள்ளவர்களிடம் சில தனித்துவமான திறமைகள் இருப்பதைக் குறிப்பிடுகின்றன.

*படைப்பாற்றல் மற்றும் புதுமையான சிந்தனை (Divergent Thinking) வலது பக்க மூளையின் ஆதிக்கத்தால், இவர்கள் பிரச்சனைகளை வித்தியாசமான கோணங்களில் அணுகுபவர்களாகவும், சிறந்த படைப்பாற்றல் மிக்கவர்களாகவும் இருக்கிறார்கள்.*

*விளையாட்டில் சாதகம்:*

*இவர்களின் தனித்துவத்தை முன்னுரிமைப் படுத்துவதற்காகவே இடது கை பழக்கமுடையோர் தினம் ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.*

*குத்துச் சண்டை, டென்னிஸ், கிரிக்கெட் போன்றவிளையாட்டுகளில், இடது கை வீரர்கள் ஒரு தனித்துவமான சாதகத்தைப் பெறுகிறார்கள். ஏனெனில், பெரும்பாலான வீரர்கள் வலது கை வீரர்களுடன் விளையாடியே பழகியிருப்பார்கள்.*

*பல பணிகளை ஒருங்கே செய்தல் (Multitasking) : இரு மூளை அரைக்கோளங்களுக்குமான தொடர்புப் பாலம் (Corpus Callosum) இவர்களுக்குச் சற்று பெரியதாக இருப்பதால், தகவல்களை வேகமாகப் பரிமாறி, பல பணிகளை ஒரே நேரத்தில் சிறப்பாகச் செய்யக்கூடும் என சில ஆய்வுகள் கூறுகின்றன.*

*தீர்வு:*

*இடக்கைப் பழக்கத்திற்கான தீர்வு, அந்தப் பழக்கத்தை மாற்றுவதில் இல்லை. மாறாக, அக்குழந்தை தனது தனித்துவத்துடன் தன்னம்பிக்கையுடன் வளர, நாம் ஒரு ஆதரவான சூழலை உருவாக்குவதில் உள்ளது.*

*பெற்றோருக்கான வழிகாட்டுதல்கள்:*

# சுமையாக நான் தோளாக அவன்

அவன் புகழ் பாடிட
என் வார்த்தைகள் போதுமா!
அவன் புகழ்ந்து பாடித்தான்
என் வார்த்தைகள் தீருமா!

வேலை பளுவின்பின்
வீடு திரும்புகையில்
தத்தித் தவழ்ந்து
நடந்த என்னை
தித்திப்போடு
சுமந்த கரங்கள்
வெறும் கரமாய் வந்ததில்லை!

களைப்பே யாயினும்
கத்தி கூச்சலிட்ட என்னை
தட்டித் தடவாமல்
தாண்டியதில்லை!

மணலுக்கு
பழக்கப்படா பாதங்களை
மார்புகள் சுமக்காத
நாளும் இல்லை!

எந்த அழுக்கோடு நான் இருந்தும்
அவன் விழிகளை
சலிப்போடு ஒரு போதும்
கண்டதில்லை!

இன்னமும் பாசத்தில்,
தோளாக அவன்,
சுமையாக நான்.

மௌன பாசத்தில்
அவனை வெல்ல
பாரினில் யாருமில்லை!

**ருஷ்தா லுக்மான்**

முழு மனதுடன் ஏறுக்கொள்ளுங்கள்: உங்கள் குழந்தையின் கைப்பழக்கம் அதன் அடையாளம். அதை ஒரு பெருமையாகப் பாருங்கள்.

சிறு வயதிலேயே ஊக்குவியுங்கள்: குழந்தை இடது கையால் பொருளை எடுத்தால், பிடுங்கி வலது கையில் கொடுக்காதீர்கள். அதன் தேர்வை மதியுங்கள்.

சாதனையாளர்களை அறிமுகப்படுத்துங்கள்: அரிஸ்டாட்டில், லியனார்டோ டா வின்சி, ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் முதல் பில் கேட்ஸ், பராக் ஒபாமா, சச்சின் டெண்டுல்கர் வரை இடது கையால் இந்த உலகை வடிவமைத்த சாதனையாளர்களைப் பற்றிப் பேசுங்கள்.

ஆசிரியர்களின் பங்களிப்பு:

சரியான இருக்கை அமைப்பு: இடது கை பழக்கமுள்ள மாணவரை, வகுப் பறையின் இடது ஓரத்தில் அல்லது தனியாக அமர வைப்பதன் மூலம், அவர் வலதுபுறம் உள்ள மாணவருடன் இடித்துக் கொள்ளாமல் சுதந்திரமாக எழுத முடியும்.

எழுதும் முறையைக் கற்றுக்கொடுத்தல்: காகிதத்தை சற்றே வலதுபுறமாகச் சாய்த்து, கை மணிக்கட்டை வளைக்காமல் நேராக வைத்து எழுதப் பழக்குவது, அவர்கள் எழுதியதை அவர்களே பார்க்கவும், கை வலிப்பதைத் தவிர்க்கவும் உதவும்.

சரியான சூழலை உருவாக்குதல்:

முடிந்தால், இடது கை பழக்கமுள்ள வர்களுக்கான பிரத்யேக கத்தரிக்கோல், அளவுகோல், நோட்டுப் புத்தகங்கள் (வலது பக்கம் சுருள் கொண்டது) போன்றவற்றை வாங்கிக் கொடுக்கலாம்.

எழுதுவது தவிர்ந்த ஏனைய இடது கைப்பழக்கங்களை மாற்ற முயற்சிக் கலாமா?

எழுத்து என்பது மூளையுடன் தொடர் புடைய ஒரு செயற்பாடாக இருப்பதோடு எழுதும் போது மிக நுண்ணிய செயற்பாடுகள் இங்கே மூளையின் துணையுடன் நடாத்தப் படுகின்றது. ஆனால் இடது கையால் சாப்பிடுவது அல்லது மற்ற செயற்பாடுகள் செய்வது என்பதை விரும்பினால் மாற்றுவதில் பெரிய பாதிப்புக்கள் ஏற்படாது. ஆனால் அவர்களுக்கு அதிக அழுத்தம் கொடுத்து மாற்ற முயற்சிக்காதீர்கள். அவ்வாறு முயற்சிக்கும் போது உளவியல் தாக்கங்கள் ஏற்படலாம். எனவே மென்மையான வழிமுறைகளை கையாளுங்கள். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். சிறிது சிறிதாக மாற்ற முயற்சியுங்கள்.

ஒரு தோட்டத்தில் ரோஜா, மல்லிகை, செம்பருத்தி எனப் பல மலர்கள் அதன் தனித்துவமான வண்ணத்துடனும் வாசத் துடனும் பூப்பதே அழகு. அதுபோலவே, ஒவ்வொரு குழந்தையும் தனது தனித்து வமான இயல்புடன் வளர்வதே முழுமை யான வளர்ச்சி. இடது கை பழக்கம் என்பது ஒரு குழந்தையின் தனித்துவம் எனும் வண்ணமயமான பூ. அதை வாடிவிடச் செய்யாமல், அதன் அழகை ரசிக்கக் கற்றுக்கொள்வதே பெற்றோர் மற்றும் சமூகத்தின் தலையாய கடமை. நமது பார்வையை மாற்றுவோம்; அவர்களின் உலகத்தை பிரகாசமாக்குவோம். அவர் களின் இடது கரம், இந்த உலகை ஆளப் போகும் வலிமையான கரம் என்பதை உணர்ந்து அவர்களை வளர்த்தெடுப்போம்.

# கலைபல கற்க

கலிவிருத்தம் [விளம் + மா + விளம் + மா]

சிலையென நானும் சிரித்திடும் வேளை
விலையிலா அன்பால் விரைந்தெனை நாடிக்
கலைகளின் தேவி கவியினை ஊட்ட
மலைமகள் வந்தே மணிமுடி தந்தாள்

சிலையினை நோக்கிச் சிறந்திட நாளும்
கலைகளைத் தேடிக் கவினுறக் கற்றே
நிலையிலா வாழ்க்கை நிலைபெற வேண்டி
அலைந்திடும் ஓடம் அவனியில் நிற்கும்.

கனிமொழி கேட்க கனிந்தநற் காலை
தனிவழி செல்லும் தரணியின் கோலம்
மனிதனை எண்ணி மலைத்திடும் வேளை
கனியிதழ் சொல்லும் கவிதையைக் கேட்பாய்

மணிமொழி கேட்க மலரினைச் சாற்று
கணிப்புடன் நோக்கிக் கலைபல கற்க
துணிவுடன் நாளும் துயரினை நீக்கு
பணிவிடை செய்தே பரிசினை வெல்க

பயனிலாச் செய்கை பதரினைத் தேடும்
நயமுடன் நன்மை நனிசிறந் திடுமே
வியந்திடும் காலம் விருதினைப் பெற்றே
மயங்கிடும் தீமை மடங்கிடச் செய்வாய்

தமிழினை நாளும் தரணியில் நல்கும்
தமிழுரை வாழ்த்தும் தனிநிகர் நெஞ்சம்
அமிழ்தினை அள்ளி அகவிருள் நீக்கும்
உமிழ்ந்திடும் நாவால் உரைத்திடு நன்றி

**ரூபா அன்ரன்**
சுவிற்சர்லாந்து

## ஹைக்கூ

மக்கள் குடியிருப்பு
காலைத் தொட்டு இழுக்கும்
தொட்டாற் சிணுங்கி

மேகமில்லா நீலவானம்
இடையிடை அழகு சேர்க்கும்
செடியில் வெடித்த பருத்தி/

உச்சிப் பகல்
குளிர்ந்த காற்றை அனுப்புகிறது
எங்கோ பெய்த மழை

கூடடையும் குருவி
சட்டெனக் கீழே விழும்
கௌவிய வைக்கோல்

குடிசை வீடு
தண்ணீர் பானைக்குள் அசைகிறது
லாந்தர் விளக்கின் ஒளி

கட்டப்பட்ட பசு
அடிக்கடி வயலுக்கு செல்கிறது
அதன் பார்வை

தியானத்தில் துறவி
கவனத்தைக் கலைக்கவே இல்லை
மடியில் ஏறிய பாம்பு

உடைந்த பாலம்
ஆற்றின் குறுக்கே விழுகிறது
வெளிச்சக் கோடு

ஆடும் ஊஞ்சல்
அக்கரையைத் தொட்டு வரும்
நிற்பவர் பார்வை

புதிதாய் புத்தர் சிலை
தெளிவாகத் தெரிந்து விடுகிறது
நில ஆக்கிரமிப்பு

**வஃபீரா வஃபி**

# இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள்

எளிமையும் நேர்த்தியும் பொருந்திய மார்க்கமே இஸ்லாம் மார்க்கமாகும். ஒரு மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை எவ்வாறு மறு உலகில் இன்பமாய் வாழ்வதற்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை அல்லாஹ் வின் பேச்சான 'கலாமுல்லாஹ்' (அல்குர்ஆன்) மற்றும் நபியவர்கள் காட்டித்தந்த வழிமுறைகள் (ஹதீஸ் ஆதாரங்கள்) மூலமும் நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு மனிதன் நித்திரைக்குச் செல்லல் முதல், உணவு உண்ணல், நித்திரை விட்டு எழும்புதல் போன்ற அன்றாட செயற்பாடுகளை எவ்வாறு பேணுதலாக கைக்கொள்ள வேண்டும் என்பதுடன், ஒருவர் மரணிக்கும் பட்சத்தில் அவருக்குச் செய்ய வேண்டிய பிரத்தியேக கடமைகள் என்னவென்பதை எல்லாம் இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது. அந்த வகையில் 'பெண்கள்' என்று கூறும் போது அவர்களை கண்ணியப்படுத்தவும் சமஉரிமை வழங்கிப் போற்றிப் பாதுகாக்கவும் இஸ்லாம் எமக் குத் திறம்பட போதித்துள்ளது. எனவே அவை பற்றி நோக்கலாம்.

உண்மையில் 20ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலங்களில் பெண்கள் என்ற சொல்லாடல் சமூகத்தில் அடிமை களாகவும், கவர்ச்சிப் பொருளாகவும், வெறுமனே பரம்பரையைப் பெருக்குவதற் காகவும், வேலைகளுக்கு உதவும் வண்டில் மாடுகளாகவுமே அடையாளப் படுத்தப்பட்டது. பிற்பட்ட காலங்களி லேயே பெண் விடுதலை, பெண் சுதந்திரம் போன்ற கருத்துப் பொதிந்த ஆளுமைகளின் குரல் திக்கெங்கும் ஒலிக்க, இருள் மயங்கி ஒளி தெளிவாகியது போல் பெண் விடுதலை கிடைத்தது. அவ்வாறு இன்று பெண் விடுதலை கிடைக்கப்பெற்று 105 ஆண்டுகளாகிவிட்டன. இவ்வரலாறு யாமனைவரும் அறிந்தவையே!

ஆனால் கண்மணி நாயகம் நபி(ஸல்) அவர்களின் காலகட்டத்திலேயே பெண் களுக்கான கருத்துச் சுதந்திரம் காணப் பட்டது. இஸ்லாமிய சமூகத்திலும் கூட (ஜாஹிலியாக் காலம்- அறியாமைக் காலம் எனப்படுகின்ற நபித்துவத்திற்கு முற்பட்ட காலம்) நபியவர்களின் வருகைக்கு முன் பெண் அடக்கு முறைகள் காணப் பட்டனவென்பது மறுக்க முடியாத விடயமாகும். அன்று ஒரு காலம் இருந்தது 'பிர்அவ்ன்' என்கின்ற கொடிய மன்னனின் ஆட்சிக் காலத்தில் பெண் குழந்தைகள் பிறந்தாலே அவர்களை உயிருடன் கொன்று குவிக்கும் கலிகாலமாகவே அது காணப்பட்டது.

ஆனால், இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களின் வருகையின் பின் இந்நிலை முற்றாகவே மாற்றமடைந்து விட்டது. பெண்களுக்கென தனி அங்கீகாரமே கிடைக்கப்பெற்றது. பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமை, குடும்பத்தை கட்டி எழுப்பும் உரிமை, ஆலோசனை வழங்கும் உரிமை, சொத்துரிமை, திருமணம் முடிக் கும் உரிமை, விவாகரத்துரிமை என இக்கால பெண் சுதந்திரம் கிடைக்கும் முன்னமே இஸ்லாம் மார்க்கம் பெண்களை கண்ணியப்படுத்தி அவர்களுக்குரிய

உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து விட்டது.

பெண்கள் தூய்மையானவர்கள் அவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதனை இஸ்லாம் தெளிவாக வலியுறுத்தியுள்ளது. அந்த வகையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு ஸஹாபி,' நான் பூமியில் நல்ல முறையில் நடந்து கொள்ள தகுதியானவர் யார்?' என வினவிய போது அதற்கு நபி அவர்கள் 'உனது தாய்' என பதிலளித்தார்கள். அந்த ஸஹாபி, அடுத்ததாக நான் நல்ல முறையில் நடந்து கொள்ள யார் தகுதியானவர்? என நினைவிய போது அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'உனது தாய்' என பதிலளித்தார்கள். இதே போல் மூன்றாவது முறையும் வினவப்பட்ட போதும் அதற்கும் 'உனது தாய்' என பதிலளித்த நபி அவர்கள் நான்காவது முறையாக அதே கேள்வியை வினவிய பட்சத்தில் 'உனது தந்தை' என பதிலளித்தார்கள்.

என்கின்ற இந்த ஹதீஸ் ஆதாரத்தின் மூலம்தாயை கண்ணியப்படுத்தி உயர்நிலையில் மரியாதை செய்ய வேண்டும் என தனது உம்மத்தினருக்கு (சமுதாயம்) நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தி உள்ளமையை அறிய முடிகிறது.

கல்வி கற்கும் உரிமை ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் உண்டென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெண்களை கற்கும் படி வலியுறுத்தியுள்ளார்கள். 'கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கட்டாயக் கடமையாகும்.'(பைஹகி) என்ற ஹதீஸின் மூலம் முஸ்லிம்கள் அனைவரும் (ஆண், பெண் இருபாலாரும்) கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மேலும் பெண்களுக்கு அறிவுரை கூறி தெளிவு படுத்துவதிலும் நபி(ஸல்)அவர்கள் முனைப்புடன் செயற்பட்டுள்ளனர்.

இதனை; '(நாங்கள் உங்களை அணுவும் மார்க்க விளக்கங்களை கேட்க முடியாதவாறு) தங்களிடம் எப்போதும் ஆண்களே எங்களை மிகைத்து நிற்கின்றனர். எனவே தாங்களாகவே எங்களுக்கென்று ஒரு நாளை ஏற்பாடு செய்யுங்கள் என்று பெண்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டுக் கொண்டார்கள். அவர்களும் அப்பெண்களுக்கென ஒரு நாளை வாக்களித்து அந்நாளில் அவர்களைச் சந்தித்து அவர்

## ஹைக்கூ



1.

என்னோடு சேர்ந்து
நிலவை ரசிக்கிறதோ..?
மேகம்.

2.

கோவில் கோபுரம்
நிழல் தேடும்
பறவைகள்!

3.

சுறுசுறுப்பாய் எறும்புகள்
மிகச் சிறியதாய்
பூதக்கண்ணாடியில் நான்!

விஜி சிவா, நார்வே.

களுக்கு அறிவுரை பகிர்ந்தார்கள்.' (புஹாரி-101) என்ற ஹதீஸ் ஆதாரத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் பெண்கள் அவர்களின் விருப்பத் தேர்வுகளின் அடிப்படையில் ஓர் ஆணை தெரிவு செய்து குடும்பத்தின் அனுமதியுடன் திருமணம் செய்து கொள்ளலாம். திருமண விடயங்களில் பெண்களை கட்டாயப்படுத்த கூடாது என்பதனை; 'நம்பிக்கை கொண்டோரே பெண்களை வலுக்கட்டாயமாக அடைவது உங்களுக்கு அனுமதி இல்லை.' (திருக்குர்ஆன்-4:19) என்று அல்லாஹ் தனது திருமறையில் கூறுவதன் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் பெண்களின் அனுமதி பெறப் பட்டே திருமணம் நடைபெற வேண்டும் என்கின்ற திருமண சுதந்திரம் அக்கால கட்டத்தில் இருந்தே இஸ்லாம் மார்க்கம் பெண்களுக்கு வழங்கியுள்ளது என்பதனை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். மேலும் மணமகன் தான் மணக்கப்போகும் பெண்ணுக்கு அவன் சக்திகேற்ப மணக்கொடை (மஹர்) கொடுக்க வேண்டும். மணப்பெண், மஹர் எனும் மணக்கொடையை பெண்கள் பெறுவதை இஸ்லாம் பெண்ணிற்கான உரிமையாக்கியுள்ளது. இதனை; 'நீங்கள் திருமணம் செய்து கொண்ட பெண் களுக்கு அவர்களுடைய மஹரை மகிழ்வோடு கொடுத்து விடுங்கள்.' (திருக்குர்ஆன்-4:4) என்ற குர்ஆன் வசனம் விளங்கப்படுத்துகின்றது.

திருமண உரிமை பற்றிய கூறிய இஸ்லாம் தகுந்த காரணத்திற்காக திருமணத்தை முறித்துக் கொள்ளும் விவாகரத்தைப் பெற்றுக் கொள்ளவும் உரிமை வழங்கியுள்ளது. தகுந்த ஒரு நியாயமான காரணத்தின் பேரில் தன் கணவனை விவாகரத்துச் செய்யும் உரிமையை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது. 'அல்லாஹ்வின் வரம்பு களை அவர்கள் இருவரும் நிலை நிறுத்த மாட்டார்கள் என்று நீங்கள் அஞ்சினால் அவள் கணவனுக்கு ஏதேனும் ஈடாக கொடுத்து பிரிந்து விடுவதில் அவர்கள் இருவர் மீதும் குற்றமில்லை. இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும்.' (அல்குர்ஆன்-2:229) என்று குர்ஆன் வசனம் மூலம் கணவனை விவாகரத்து செய்யும் உரிமையை பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. இச் சலுகை அந்தக் காலகட்டத்தில் இஸ்லாம் தவிர்ந்த வேறு எம்மதப் பெண்களுக்கும் வழங்கப்படவில்லை.

இதுபோலவே ஒரு குடும்பத்தைக் கட்டி எழுப்பும் உரிமை ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் அதில் வகிபாகம் உள்ளது என்பதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்; 'உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர் ஆவார். ஆண் (குடும்பத் தலைவன்) தன் மனைவி மக்களுக்கு பொறுப்பாளன் ஆவான். தன் பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான். பெண் (மனைவி), தன் கணவனின் வீட்டிற்கு பொறுப்பாளி ஆவாள்...' என்று கூறியுள் ளார்கள்.

மற்றும் பெண்களுக்குரிய சொத்துரிமை பற்றி இஸ்லாம் குறிப்பிடுகையில், '(இறந்துபோன) பெற்றோரோ- நெருங்கிய உறவினரோ விட்டுப் போன பொருள்களில் அவை அதிகமாகவோ, கொஞ்சமாகவோ இருந்த போதிலும் ஆண்களுக்கு பாகமுண்டு, அவ்வாறே பெண்களுக்கும் பாக முண்டு.' (அல்குர்ஆன்-4:7) என அல்குர்ஆனில் அல்லாஹ் பெண்களுக்கு சொத்துக்களில் பங்கு பெறும் உரிமை பற்றி கூறியுள்ளான். மேலும் ஆண் பெண்ணைவிட பலமானவன். பெண்ணிற்கோர் நீதி, ஆணிற்கோர் நீதி

என்ற பேச்சுக்கே இஸ்லாத்தில் இடமில்லை. ஆணும் பெண்ணும் சமமானவர்கள். அவர வர்களின் செயல்களுக்கு ஏற்பவே கூலிகள் வழங்கப்படும். இதனை; 'ஆண்களிலும் பெண்களிலும் இறை நம்பிக்கை கொண்ட நிலையில் நற்செயல்களை யார் செய்கின்றார்களோ, அவர்கள் அனை வருமே சொர்க்கத்தில் நுழைவார்கள். எள்ளளவும் வஞ்சிக்கப்பட மாட்டார்கள்.' (திருக்குர்ஆன்-4:124) என்ற குர்ஆன் வசனம் குறிப்பிடுகின்றது.

மேலும் பெண்களை கண்ணியப்ப டுத்தும் வகையில் பெண்கள் பற்றி பேசப்படும் அவதூறுகள் குறித்து நபி (ஸல்) அவர்கள் பின்வரும் அல்குர்ஆன் வசனங்களை கூறியுள்ளார்கள். 'எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லி பின்னர் நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ அவர்களுக்கு 80 சாட்டையடி கொடுங்கள். இனி அவர்கள் கூறும் சாட்சியத்தை என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். மேலும் அவர்கள் தீயவர்களே!' (அல்குர்ஆன்-24:4) கூறுவத னூடாக இஸ்லாம் எச்சரிக்கின்றது.

மேலும் பெண் குழந்தைகளை போற்றும் இஸ்லாம், 'பெண் குழந்தையை ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கு இறைவன் புறத்திலிருந்து வாழ்த்தும் நற்செய்தியும் உண்டு' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூலம் எடுத்தியம்பி யுள்ளது. அத்துடன், 'வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். அவர்களைக் கொல்வது பெரிய குற்றமாகும்.' (திருக்குர்ஆன்-17:31) என்ற இறைக்கட்டளையின் மூலமாக சிசுக்கொலைக்கு இஸ்லாம் முற்றுப்புள்ளி வைத்தது.

பெண்சிசுக் கொலை பெரும்பாவம் என்கிறது இஸ்லாம்.

'எவருக்கு மூன்று பெண் மக்கள் இருந்து அவர்களை அரவணைத்து, அவர் களின் தேவைகளை நிறைவேற்றி, கருணை காட்டி வருவாரோ அவருக்குச் சொர்க்கம் உறுதியாகிவிட்டது.' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியபோது அருகிலிருந்த நபித்தோழர் 'இரு பெண் மக்கள் இருந்தாலுமா?' என்று கேட்டார். அதற்கு நபிகளார் 'ஆம்! இரு பெண் மக்கள் இருந்தாலும்' என்று பதில் கூறினார்கள்.

'ஒரு பெண் தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகளுடன் யாசித்த வண்ணம் வந்தார். என்னிடம் அப்போது ஒரு பேரீச்சம் பழத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனவே, அதை அவரிடம் கொடுத்தேன். அவர் அதை இரண்டாகப் பங்கிட்டு இரண்டு குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டார். அவர் அதிலிருந்து சாப்பிடவில்லை. பிறகு அவர் எழுந்து சென்றார்' என்ற செய்தியை அன்னை ஆயிஷா(ரழி) நபி(ஸல்) அவர்களிடம் கூறியதும் 'இவ்வாறு பெண் குழந்தை களால் சோதிக்கப்படுகிறவருக்கு அக்குழந் தைகள் நரகத்திலிருந்து அவரைக் காக்கும் திரையாக இருப்பார்கள்.' (புஹாரி) எனக் கூறினார்கள்.

இவ்வாறு பெண்களை நரகத்திலிருந்து காக்கும் அற்புத திரையாக இஸ்லாம் உயர்த்திக் கூறியுள்ளது.

அத்துடன் வியாபாரம், பொருளாதார என்பவற்றிலும் பெண்கள் ஈடுபடுவதை இஸ்லாம் அனுமதித்துள்ளது. கண்மணி நாயகம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவி அன்னை கதீஜா (ரழி) அவர்கள் சிறப்புக்குரிய பெரும் வணிகராக திகழ்ந்தார்கள். தோலை பதனிட்டு(மிருக)அவற்றில் வண்ணங்களை

ஏற்றித் தரும் தொழில் செய்தார்கள். கிடைக்கும் வருமானங்களை அல்லாஹ் வின் பாதையிலும் செலவு செய்தார்கள். இவ்வாறு பெண்களுக்கான அழகிய முன்மாதிரிகளை நாம் அவதானிக்க முடியும். அதுபோல் கண்மணி நாயகம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மற்றுமோர் மனைவி அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடம் நபியவர்கள் ஆலோசனைகளைப் பெற்றுள்ளதுடன், அவர்களை போருக்கும் அழைத்துச் சென் றுள்ளார்கள்.

அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் மாணவரான உர்வா (ரழி) ஆயிஷா (ரழி) அவர்களைக் குறித்து திருக்குர்ஆன் விரிவுரை, வாரிசுரிமைச் சட்டங்கள், ஹலால் - ஹராம், அரபு இலக்கியம், மரபுக் கவிதைகள், வரலாறு போன்ற துறைகளில் ஆயிஷா (ரழி) அவர்களை விடப்புலமைபெற்றவராகயாரையும்நான் கண்டதில்லை' என்கிறார். நபித்தோழர் களும், கலீபாக்களும் ஆயிஷா (ரழி) அவர்களை அணுகி வழிகாட்டல்களைப் பெற்றனர். 2210 நபிமொழிகளை அன்னை ஆயிஷா(ரழி) அறிவித்துள்ளார்கள்.

88 மார்க்க அறிஞர்களை அன்னை ஆயிஷா (ரழி) உருவாக்கியுள்ளார்கள். அன்னை உம்மு ஸல்மா (ரழி) அவர்களி டம் 32 மார்க்க அறிஞர்கள் கல்வி பயின்றுள்ளனர். தாயின் மடிதான் முதல் பாடசாலை என இஸ்லாம் பெண்மையைப் போற்றுகிறது. உம்மு தர்தா என்ற ஸஹாபியப் பெண்மணியிடமே கலீபா அப்துல் மலிக் இப்னு மர்வான் கல்வி பயின்றிருக்கிறார்.

இங்கு பெண்களுக்கு கல்வி கற்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி இஸ்லாம் பெண்களை அடிமைப்படுத்துகிறது, ஆடைச் சுதந்திரம் வழங்கவில்லை என்கின்ற தவறான புரிதல் கள் மாற்று மதத்தாரிடையே புழங்கு கின்றன. ஏன்? முஸ்லிம் சமூகத்திலும் கூட இஸ்லாத்தை தெளிவாக கற்றுக் கொள்ளாதவர்களின் கருத்தும் இதுவா கவே உள்ளது. மார்க்கத்தை கற்று ஆராய்ந்தவர்கள் இதற்கான விளக்கங்களை இன்றும் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர். உண்மையில் இஸ்லாம் மார்க்கம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கண்ணியமான ஆடைகளையே அணியச் சொல்லியுள்ளது.

அவ்ரத்துக்களை (மறைக்க வேண்டிய பகுதிகள்) மறைக்கக்கூடிய ஆடைகளையே அணியச் சொல்லியுள்ளது. பெண்கள் கண்ணியமானவர்கள் அவர்களை கண்ணியமான முறையிலேயே ஆண்கள் அணுக வேண்டும். ஆகவே கவர்ச்சியாக தங்களை வெளியுலகிற்கு காட்டாது அவர்கள் (பெண்கள்) தங்களைப் பேணிக் கொண்டால்தான் கெட்ட சமூக சீர்கேடுகளில் இருந்து சமூகத்தை பாதுகாக்க முடியும். என இஸ்லாம் தெளிவாக அன்றே கூறியுள்ளது.

'ஆண்கள் தொப்புளிலிருந்து முழங் கால் வரையும் பெண்கள் முகம், மணிக்கட்டுகள், பாதம் ஆகியவற்றைத் தவிர மற்ற பாகங்களை மறைக்க வேண்டும்.' என இஸ்லாம் மார்க்கம் கட்டளையிடுகிறது.

மேலும்,

'ஆதத்தின் மக்களே உங்களுடைய வெட்கத்தலங்களை மறைப்பதற்காகவும், தங்கள் உடலுக்கு பாதுகாப்பாகவும், அலங்காரமாகவும் இருக்கக்கூடிய ஆடை களை நாம் உங்களுக்கு அருளியிருக்கின் றோம். (இங்கு அலங்காரம் என்று


குறிப்பிடப்பட்டிருப்பது அழகிய தூய்மை யான ஆடைகளாகும்.)' (அல்குர்ஆன்-7:26) என அல்குர்ஆனும் ஆடைச் சுதந்திரம் பற்றி கூறியுள்ளமையை நாம் அறியலாம்.

இவ்வாறு பெண்களை கண்ணியப் படுத்தும் மார்க்கமே இஸ்லாமாகும். அனைத்து விடயங்களிலும் பெண்களுக் கான ஒழுங்கு முறைகளையும், அவர் களுக்குரிய உரிமைகளையும் கடமை களையும் தெளிவாக திரையிட்டுக் காட்டியுள்ளது. பெண் விடுதலை, பெண் சுதந்திரம் பற்றி பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமே இஸ்லாமிய மார்க்கம் எங்களுக்கு வலியுறுத்தியுள்ளது. பெண்களிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று உபதேசம் செய்ததோடு மட்டுமல்லாமல் அத்தகைய வாழ்வை வாழ்ந்து காட்டி, 'உங்கள் மனைவியரிடத்தில் சிறந்தவரே, உங்களில் சிறந்தவர். நான் என் மனைவியரிடத்தில் சிறந்தவன்.' என நபி (ஸல்) அவர்கள் பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.இவ்வாறு அக்காலம் தொட்டு இக்காலம் வரை பெண்களைப் போற்றும் சமுதாயமாகவே முஸ்லிம் சமுதாயம் காணப்படுகின்றது. இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள் இவ்வாறே காணப்படுகின்றனர்.

உங்கள் பார்வையில் பெண்கள் எப்படிப் பட்டவர்கள்?, அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டியவை என்ன வென்பதை இவ்வாதாரங்களைக் கொண்டு நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இனிமேலாவது இச்சமுதாயம் மாறுமா? இல்லை ஆணாதிக்கம் தான் இவ் உலகை ஆளு மா?

அதீனா அபூ உபைதா
ஒட்டமாவடி, கிழக்கிலங்கை



# வலிகளின் வரிகள்!

அழிக்கப்பட்ட புன்னகைகள்
செதுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன
வலிகளால்.

வலி நிறைந்த வாழ்வில்
மறக்க முடியாத காயங்கள்
கண்ணீரை அழைக்க
போலி புன்னகையால்
தடுத்து கொள்கிறது உதடுகள்.

சுற்றத்து உறவுகள் இருந்தும்
தனிமையை உணர முடிகிறது என்றால்
அவர்கள் இதயத்தில் உனக்கென்று
ஒரு இடம் இல்லை என்று அர்த்தம்.

வேண்டுமென்று நாடுவதற்கும்
வேண்டாம் என்று நீக்குவதற்கும்
நான் ஒன்றும் பொருள் அல்ல
உயிரும் உணர்வும் கொண்டவள்.

கோடிக்கணக்கான புன்னகைகளை
சேர்த்து வைக்க நினைத்து
சேமித்த புன்னகைகளை
இழந்து விடாதீர்கள்.

அகீலா ஜவுபர்
இலங்கை



# வெண்பா போட்டி 44

## காலம் : ஆகஸ்ட் 2025

கட்டுத் தொகைநூறு கையெண்ணின் ஆயிரம்தான்
எட்டுத் தொகைநூல் ஏந்திவா - நட்புடனே
ஞாயிறன்(று) என்னுடைய நண்பனுக்குக் கல்யாணம்
போயி வரவேண்டும் போ...!

வள்ளி முத்து

.

தாகூர் கதைகள் த.நா.கு.மொழிபெயர்ப்பில்
போகும்போ தென்றனக்குப் பொன்னேபோல் வேகமாய்
முன்னூறு ரூபாய். முதல்கொடுத்து வாங்கி வரின்
நன்றென் றுளமகிழ்வேன் நான்.

அன்புவல்லி தங்க வேலன்

.

அறுத்தெடுத்த நெல்விற்ற ஆயிரத்தில் கொஞ்சம்
பொறுப்பாய் எடுத்துவைத்தேன் பூட்டி - மறுக்காமல்
சாண்டில்யன் நூலைச் சரிபார்த்தே என்றனுக்குப்
பாண்டியனே வாங்கித்தா பார்த்து!

பாவலர் கோவதன், மலேசியா

.

வயிற்றுப் பிணிக்கு மருந்தினை உண்டேன்
கயிறாய் திருகுதுபெண் ணேநீபோய் - கையிருப்பைக்
கொண்டாங்கே வாங்கிவா கோதை யம்மை நூலொன்றை
அண்மையில் வாசித்தேன் நன்று.

சக்தி.க.மகராசி

சிந்தனையைத் தூண்டுகிற சீரிய நூல்பலவும்
எந்த விதமும் எடுத்துவா - இந்தா
சிறுகச் சிறுகவே சேர்த்துவைத்த காசு
பெருந்தொகையாய் தந்தேன் பெறு.

பக்ருதீன் இப்னு ஹம்துன்

தாரைக் கவிஞர் தருகின்ற பாக்களில்
ஊறிடும் நெஞ்சமதி லுண்மைதான் - ஊருக்குக்
காட்டுதற்கு நீயுமதைக் காசுக்கு வாங்கியே
நீட்டிடுவாய் என்னிடம் நீ .

கவிஞர்.அ.முத்துசாமி தாரமங்கலம்

வரமுடியா திங்கே விருக்கவேண்டி நானும்
கரத்தினைக் கொண்டு கரக்கத் - தரும்என்
பணத்தோடு நீயுமே போட்டு எனக்கு
வணக்கமாய்ப் புத்தகம் வாங்கு.

கு. கதிரேசன்

மதயானை நூலை மறவாமல் வாங்கி
முதலில்நீ தந்தால் முனைந்து முதலாகப்
பெற்றுத் திறனாய்வில் பேரும் புகழுடைவேன்
உற்றுழி நட்பால் உதவு.

மாலதி திரு

ஆடித்திங் லென்பதால் பொங்கலொன்று வைக்கவேண்டிக்
கூடிக் குடும்பமாய் கோவிலை - நாடியே
செல்கிறோ மாதலால் தோழியே! பாரதியின்
பல்கவிதை நூலெனக்கு வாங்கு!

அ.வள்ளிபாபு, நெய்வேலி.



அரியதாம் யாப்பினை ஆழுமாய்க் கற்க
உரியநூல் ஒன்றை உடனே - சரிவரப்
பார்த்துநீ வாங்கிவா பார்த்திபா காசைநான்
சேர்த்துத் தருகிறேன் சேர் !

எம்.ஆர்.தனசேகரன். மலேசியா.

நண்பா மணிமாறா நான்தரு மாயிரத்தில்
கண்பார்த்துச் தூசிற்பி-கவிதைகள் - திண்ணமுடன்
வாங்கி வருவாய் ;வழிபார்த் திருப்பேன்நான்
ஏங்குமென்னை ஏமாற்றி டாது!

தன்ராஜ் பாப்பணன்

புத்தகக்கண் காட்சிக்குப் போகின்ற நண்பனே !
இத்தரையில் நேரமின்றி ஏங்குகின்றேன் - முத்தாய்
ஒளிரும் திருக்குறளுக்(கு) ஓரா யிரம்நான்
அளிக்கின்றேன் வாங்கிவா அன்று .

இரா . சம்பந்தன் - ஜேர்மனி

பக்கத்து வீட்டினிலே பங்காளி மாய்ந்துவிட்டான்
எக்குற்றம் நானறியேன் ஏழையவன் - இக்காசில்
திக்கெட்டும் ஓதுகின்ற தீதில்லா நூலொன்றைப்
பக்குவமாய் வாங்கிடவே பார்

சிவ மணிவேலன், புதுச்சேரி

பிறந்தநாள் காணும் பெரிய வருக்குச்
சிறந்தநூல் வாங்கல் சிறப்பாம் - மறவாமல்
நன்நூல் திருக்குறள் நானும் வழங்கிட
இன்றுடன் வாங்கிவா ஏற்று.

பாவலர் க.சண்முக சிதம்பரம்

வீட்டுக் கொருவிளக்காம் வள்ளுவ முப்பாலைக்
கேட்டுத்தான் வாங்கிவா கேசவா - நோட்டுக்
கடனாய்க் கருதாதே காதலா! காசை
உடனே தருவேன் உனக்கு.

சி. செல்லமுத்து, மேல்மங்கலம்.

கால்முட்டித் துன்பத்தால் காண இயலவில்லை
நூல்காட்சி தோழனே உன்னோடு -- நூல்வாங்கி
வந்திடுவாய் உன்னுடைய வங்கிக் கணக்கினிலே
முந்திபணம் போட்டுள்ளேன் முத்து!

பாவலர் கருமலைத்தமிழாழன், தமிழ் நாடு

புத்தகக் கண்காட்சி போயிருக்கும் நண்பனே
எத்தனைநூல் வாங்கிவர எண்ணுகிறாய்? - அத்துடன்
'பித்தன்'நூல் ஒன்றைப் பிடித்துவா நான்தரணும்
அத்தைமகட்(கு) அன்பளிப்(பு) ஆம்

க.சங்கரபாண்டியன்

ஜெயமோகன் செய்த சிறப்பான வற்றுள்
வியக்கும் அளவிற்கு நி(வி)ற்கும்- உயர்தரநூல்
ஐந்நூறு ரூபாய் அதிகம்தான் ஆயினும்
அந்நூல்பேர் என்ன?! அறம்!

செ. இராசா

புத்திக்கு நல்ல புதியதோர் வீடெனும்
வித்தகநூல் நானூறு விற்கிற - மொத்தவிலை
என்றனுக்கும் ஓர்நூல் எடுத்துவா மச்சாளார்
இன்றெனக்கு கூட்டம் இருக்கு

பிரியங்கா மோகன், பிரித்தானியா



நண்பா நமசிவாயா நாற்பது நான்தருவேன்
பண்பாய்த் திருக்குறளைப் பாங்குடனே... வண்ணமுடன்
வாங்கி வருவாயேல் வாழவந்த பேத்திக்கு
மாங்கனிபோல் ஈவேன் மகிழ்ந்து.

பாவலர் தாழை ந. இளவழகன், மணப்பாறை.

துப்பறியும் நூலைத் துரிதமாக வாங்கயெண்ணி
குப்பன் மகனிடம் கூறினேன்- செப்பியது
காதில் விழவில்லை கற்கண்டு வாங்கிவரப்
பாதிப்பும் இங்கேயே பார்

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை

இறுதியான தேர்வுதான் இன்றேதான் போணும்
உறுதியாகச் சென்றிட வேண்டும் - மறுவூர்
இருநூறு தந்தேன் இணையான நீயும்
திருக்குறள் வாங்கிக் கொடு.

சோ. சுந்தரேசுவரி

திருச்செந்தூர் கந்தனின் தாழ்பணியச் செல்ல
இருந்த பணத்தை எடுத்தேன் - கருத்தாக
நெஞ்சுக்கு நீதியை நண்பனே வாங்கிவா
வஞ்சமின்றி ஈவேன் மகிழ்ந்து

கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

உடல்நலம் குன்றினேன் உன்னுதவி தேவை
தடையின்றி வாங்கித் தருவாய் -இடமது
புத்தகக் கண்காட்சி! போவாய் தோழியே
முத்தான நூல்கள் முனைந்து.

ஓசூர் மணிமேகலை

அமிழ்தான எம்மொழியை ஆழமாய்க் கற்கத்
'தமிழ்அறிவோம்' வாங்கிவா தம்பி - ஞமிறாய்ப்
பறந்துசென்று கூட்டத்தில் பார்த்தெடு நன்றாய்
பிறகு தருவேன் பணம்

குலா கிருஷ்ணா, ரொறொன்ரோ / கனடா

வாவென்(று) அழைக்கிறாய் வண்ணநூல் காட்சிக்குப்
போவென்று கூறாளென் பொண்டாட்டித் - தூவெனத்
துப்பாதே..! ஆங்கவளின் தொல்லையாள நூலொன்றைத்
தப்பாமல் வாங்கிவா தாழ்ந்து

விசு. இம்மானுவேல், பெங்களூரு

சித்த மருந்துச் சிறப்பினைச் சொல்லிடும்
புத்தகம் வேண்டும் படிக்கவே - புத்தியில்
நன்றாய் மறவாது நின்றிடச் செய்வாயா
அன்பார்ந்த நண்பா அறிந்து

பாவலர்மணி வா.சண்முகம்

எக்கால மும்நிலைக்கும் இந்தநிலம் ஆண்டவராம்
அக்கால மன்னவரின் ஆற்றலை - மக்காது
செப்பும் சிறப்புநூல் சேர்த்தெனக்கு வாங்கிவா
தப்பாமல் காட்டு தயவு.

ஆனந்த சுந்தர ராமன்

விலையிலா புத்தகம் வெற்றி வழியாம்
விலைக்கொடுக்க நானுமே வேலா வலைப்போட்டு
கண்காட்சியில் வாங்கிவா காதல்கவி தாசன்
கண்ணதாசன் பாதொகுப்பைக் கண்டு.

குயில்.மு.இரசியா பேகம்.



.

ஓயா அகனாரின் ஓர்ந்தறிந்த நன்னூலில்
பாயாசம் போலினிக்கும் பாகண்டேன் - ஆயாசம்
காணும்முன் கொண்டுவா காண்டீபா நான்படிக்க
வேணும் பயின்றுயர வே

எழுத்தாளர் நாகா

.

சங்க இலக்கியம் சாகறதுக் குள்ளநான்
இங்கே படித்திடுவேன் இன்புறுவேன் - மங்கிய
கண்ணின் ஒளிபோவ தற்குள்ளே காண்பேனே
எண்ணம் நிறைவேறும் இன்று

தென்றல் கவி

.

சிறுதொழில் கற்றுச் சிறப்புடன் வாழக்
குறுந்தொகையில் நல்லறிவைக் கூறி உறுதி
உறுதுணையாய் நின்றே உயர்த்திடும் நூலை
மறுக்காமல் வாங்கிடுவாய் நீ.

கவிஞர் க.தங்கவேலு, கிருட்டிணகிரி.

நித்தமும் நான்படித்து நிம்மதி கொள்ளவே
சத்திய சோதனை புத்தகத்தை - புத்தம்
புதிதாய் எனக்கென வாங்கிவா ஒன்று
பதிலுக்குத் தாரேன் பணம்.

மு. மதனகோபால், சென்னை

புத்தகக் காட்சிக்கு போகின்ற எனநண்பா
மெத்தவும் ஆவல்கொண் டேனேநான் - இத்தனை
நாள்காத் திருந்தேன் படிக்கப் புதினமாம்
வேள்பாரி வேண்டும் எனக்கு .

மன்மதன், ஒசூர்

.

அன்றெனக்கு மொத்தமுள்ள ஆண்டுக் கணக்கினை
நன்றாய் முடித்திடும் நாளாகும் - நன்றையா
என்றைக்கோ நன்னூலை நானோத ஆவலுற்றேன்!
இன்று..நீ வாங்கிவந்தால் இன்பு!

தோன்றும் பொழுதெல்லாம் தொல்காப் பியம்படிக்க
உன்றன் சிறுவுதவி ஓங்கவைக்கும் - நன்றியுரை
நன்குரைப்பேன் அன்றெனக்கு ஆயிரம் பணிகளையா!
பொன்நூலை வாங்கிவந்தால் மாண்பு!

இயந்திர வாழ்வாய் இயக்கிடும் காலம்
அயற்சியும் ஆட்கொள்ளும் ஆயின் - உயர்நூலை
நீ..வாங்கி வந்தால் நிறைமகிழ்வில் நீந்தியே
நாவார நன்றியுரைப் பேன்!

நெடுமுடி வேந்தன்




## புன்னகைப் பூக்கள் மலரட்டும்

வலிபட்டதாக பாறைக்கு வைராக்கியம் போனால்
உளிதாங்கிய அடியின்றி உருவெங்கே வடிவாகும்?
தழலிலே கிடந்துதான் தன்னுருவை ஏற்றதுளி!
கழித்தலிலே பேரழகைப் பாறைக்குக் கூட்டுமுளி!



புண்ணான மனதிற்குப் பற்றாக்கு நம்பிக்கையை!
பன்முறை விழுந்தாலும் பறைசாற்று முன்னிமிர்வை!
பண்பட்ட நெஞ்சத்தால் பட்டதெலாம் உரமாக
புன்னகைப் பூக்கள் மலரட்டும் பூவிதழால்!

கவிஞர் மாலதி இராமலிங்கம்,புதுச்சேரி.

# வெண்பாப் போட்டி (பயணம்) 45

**போட்டியின் கால அளவு :** செப்டம்பர் 01 முதல் 12 வரை 2025

.

இம்மாதப் போட்டி....

.

உங்கள் மகளோ அல்லது உங்கள் தோழமைகளின் மகளோ திருமணத்திற்கு பின்பு கருவுற்று இருக்கும் இனிமையான செய்தி உங்களுக்குத் தெரிய வருகிறது. உடனே.... அந்தப் பெண்ணைப் பார்க்கச் சென்று கர்ப்ப காலத்தில் என்னென்ன செய்ய வேண்டும். என்னென்ன உண்ணவேண்டும்.
எவ்வாறான உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்பது போன்ற அறிவுரைகளில்.
உங்களுக்குத் தெரிந்த ஏதோ சிலவற்றை ஒரே வெண்பாவில் சொல்வதே இம்மாதப் போட்டி ஆகும்.

‘ **கர்ப்பகால அறிவுரை** ‘ என்று இந்தப் பாடலுக்கு தலைப்பு இடவேண்டும்.

(எ-கா) பாடல் : --

.

கர்ப்ப கால அறிவுரை

.

காய்கறிகள் இன்னும் கனிவகைகள் உண்பது
பாய்விரித்து ஓய்வில் படுப்பது - தோய்வுக்குப்
போதுமான தண்ணீர் பொழுதும் அருந்துவது
யாதும் நலமாம் இனி.

.

நன்றி🙏

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

.

பொதுவான விதிகள் :- ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் ப ட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகி ருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**

மற்றும்

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# பருத்திச் சீலைக் கட்டி விவசாயம் செய்பவளே!

பருத்திச் சீலைக் கட்டி
விவசாயம் செய்பவளே
பகட்டாக வயலோரம்
விறுவிறுப்பாக நடக்கிறியே
கட்டான தேகமும்
வட்டமுகத்தில் பொலிவானாயே
வெட்டறுவா கையில்
ஏந்தி செல்வதேனோ
புல்லுக்கட்டு தலையில் சுமந்து
வீடு திரும்பினாயா
காலை வெயிலில்
வயக்காட்டுல வேலையா
மாலை வேலையில
அலுப்புடனே திரும்பினாயா
பகல் பொழுதெல்லாம்
கடினமாக உழைக்கிறாய்
உழைப்பின் உன்னதம்
நன்றாகத் தெரிந்தவளே
விவசாயத்தை நேசிக்கும்
பெண்ணை வாழ்த்துவோம்

**கவிஞர் .இரா .சீ.பாலகுமார், M.A.,**
சந்தோசபுரம். சென்னை - 600073.

### திருவருளை தருவாரே

மேகங்கள் தவழ்ந்து
மேற்கே வருகையிலே
தாகமோடு அங்கே
தடாகத்திற்கு நீரருந்த
காகமொன்று வந்து
காவேரியிலே மகிழ்ந்திட
நாகமொன்று வந்து
நாட்டியம் ஆடிடவே

உதயசூரியனும் கண்டு
உரிமையோடு சிரிக்க
இதயத்தில் இருந்து
இனிமையும் எழுந்திட
மதுரையிலே இருந்த
மாறனின் விழிகளும்
ததும்பியே நிற்கவே
தத்தையொன்று அங்கே

வித்தையும் போடவே
விந்தையில் தவிக்க
முத்திரை படைக்கும்
முன்னுரை உணர்ந்த
சித்தர்கள் பாடவே
சிவனாரும் பதிலளித்து
தித்திப்பு கொடுத்து
திருவருளை தருவாரே



**ப.வெங்கட்ரமணன்**
**குளித்தலை**




**த**ஞ்சைத் தமிழ் மன்றத்தின் ஆறு மற்றும் ஏழாவது ஆண்டு விழா வலங்கைமான் வடக்கு அக்ரகாரத்தில் உள்ள தென்றல் அரங்கில் நடைபெற்றது.



ஆண்டாள் கோயில் ஏவிஎஸ் குருமூர்த்தி குழுவினரின் வயலின் இசையுடன் நிகழ்வு தொடங்கியது.

வலங்கைமான் சண்முகசுந்தரம் அவர்களின் நினைவாக வழங்கப்படும் சண்முகசுந்தரனார் விருது தவிலிசைக் கலைஞர் செம்பொன்னார் கோயில் எஸ் ஆர் டி எம் பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் ஆண்டாங்கோயில் செல்வரத்தினம் அவர்களின் பெயரால் வழங்கப்படும் செல்வரத்னா விருது ஆலங்குடி ஏ.வி.பக்கி சாமி அவர்களுக்கும் திப்பிராஜபுரம் இசை விமர்சகர் ரவீந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது.

இளம் இசைக்கலைஞர்களான மாஸ்டர் தஞ்சை செ.விக்னேஷ்வரன், மாஸ்டர் கீழ்வேளூர்பா.சாய்வெங்கடேஷ்









இருவருக்கும் ஏம்தவிலிசைமணி என்ற விருதும் மலேசியா ர.தத்வனித்ராஜ் என்பவருக்கு முழவிசை மணி என்ற விருதும் வலங்கைமான் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் ஜான் லூயிஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

திருவாரூர் வே ஜீவிகா அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

அவருக்கு இளம் நாட்டிய மணி என்ற விருது கவிஞர் வெற்றி பேரொளி அவர்களால் வழங்கப்பட்டது.

முற்பகல் நிகழ்வுக்கு தஞ்சை தமிழ் மன்ற துணை தலைவர் திரு சுகுமார் அவர்கள்தலைமைவகிக்கதமிழ்பட்டறை இலக்கியப் பேரவை நிறுவனர் சேக்கிழார் அப்பாசாமி நிலாமுற்றம் இலக்கியப் பேரவை நிறுவனர் முத்துப்பேட்டை மாறன் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்க தமிழகத்தினுடைய பல்வேறு









இடங்களில் இருந்து தெரிவு செய்யப் பட்ட தாரமங்கலம் முத்துசாமி, மதுரை முஅர்ஜுனன் புதுக்கோட்டை பொன்னையா, சோழவந்தான் சித்தார்த் பாண்டியன், கும்பகோணம் மோகன், பட்டீஸ்வரம் சண்முகம், புதுக்கோட்டை தங்கை பாலா ஆசினி, கோவை தனராஜ் பாப்பண்ணன் கோவை லிங்கா நா ரா.ராஜகுமாரன் கோவை மணிவாசகன், பட்டுக்கோட்டை தென்றல் கவி











உள்ளிட்ட 18 கவிஞர்களுக்கு கவிமுகில் அன்புவல்லி தங்கவேலர் கவி வித்தகர் விக்டர் தாஸ் ஆகியோரால் கம்பதாசன் விருதுகள் வழங்கப்பட்டது.







பிற்பகல் நிகழ்வுகள் கவிமுகில் அன்புவல்லி தங்கவேலர் அவர்கள் தலைமையிலான கவியரங்கத்துடன் தொடங்கியது. கவியரங்கத்தில் கவிஞர்கள் மதுரை அர்ஜுனன் திருக்குவளை வெற்றிப்பேரொளி, பொன்மணி தாசன்,













விக்டர்தாஸ், கண்ணதாசமுருகன், இராம வேல்முருகன் ஆகியோர் ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட என்ற தலைப்பில் கவிதை பாடினர்.

இராம வேல்முருகன் அவர்களின் விருத்தமாயிரம் மற்றும் கவிதைக்கழகு இலக்கணம், ஜெய இளங்கோ அவர்களின் சூத்திரதாரி , தங்கை பாலாஆசினி அவர்களின் ஆறுபடையார் அந்தாதி சண்முகம் அவர்களின் மனம் எல்லாம் தமிழ் வாசம் உள்ளிட்ட 8 நூல்கள் வெளியிடப்பட்டன






இணைய வழியாக நடைபெற்ற கவிதை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பண பரிசுகள் வழங்கப்பட்டன முதல் பரிசாக ரூபாய் 3000 கவிஞர் பூர்ணிமா சங்கர் அவர்களுக்கும் இரண்டாவது பரிசு ரூபாய் 2000 திரு இர. தியாகராசன் அவர்களுக்கும் மூன்றாவது பரிசு ரூபாய் 1000 திரு பாலு தியாகராஜன் அவர்களுக்கும் ஆறுதல் பரிசு தலா ரூபாய் 500 ஐந்து நபர்களுக்கு திரைப்படப்பாடல் ஆசிரியர் விக்டர்தாஸ் அவர்கள் கரங்களால் வழங்கப்பட்டது

அரங்கில் நேரடி கவிதை போட்டி ஒன்று நடத்தப்பட்டது. விடுதலை என்ற தலைப்பில் சுமார் 50 கவிஞர்கள் கலந்து கொண்டு கவிதைகளை எழுதினர் அவர்களின் சிறந்த கவி கவிதைகளை தேர்ந்தெடுக்கும்பணியினைநடுவர்களாக இருந்து திரு கடவூர் மணிமாறன் மற்றும் கும்பகோணம் செண்பகநாதன் ஆகியோர் செய்தனர். முதல் பரிசாக ரூபாய் 3000 தஞ்சாவூர் கவிஞர் திரு ரா.ச. பத்மநாபன் அவர்களுக்கும் இரண்டாவது பரிசு ரூபாய் 2000 தென்பரை தமிழன்பன் அவர்களுக்கும் மூன்றாவது பரிசாக தரகம்பட்டி சண்முகசுந்தரம் மற்றும் பாரதிகரு.இளஞ்செழியன்ஆகியோருக்கு தலா ஆயிரம் வீதமும் ஆறுதல் பரிசாக ஆறு கவிஞர்களுக்கு தலா 500 வீதமும் திரைப்பட பாடலாசிரியர் விக்டர்தாஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

பிற்பகலில் விருது வழங்கும் நிகழ்வுக்கு தஞ்சைத் தமிழ் மன்றத்தினுடைய தலைவர் ராணி லட்சுமி அவர்கள் தலைமை வகிக்க துணைத் தலைவர்கள் வா சண்முகம் தென்பரை தமிழன்பன் கு. சுகுமார் பொருளாளர் ஏ வி எஸ் தேவநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்க விருது வழங்கும் நிகழ்வு தொடங்கியது.

பட்டுக்கோட்டை அன்புவல்லி தங்கவேலர் அவர்களுக்கு வாழும் அவ்வையார் என்ற விருதும் வள்ளியூர் விக்டர்தாஸ் அவர்களுக்கு வாழும் கம்பர் என்ற விருதும் சேக்கிழார் அப்பாசாமி அவர்களுக்கு செந்தமிழ்க்குரிசில் என்ற விருதும் கிருஷ்ணகிரி மணி அவர்களுக்கு பைந்தமிழ்த்தொண்டர் என்ற விருதும் வழங்கப்பட்டன.

தஞ்சை திருவாரூர் நாகப்பட்டினம் மயிலாடுதுறை ஆகிய நான்கு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 45 தலைமை ஆசிரியர்களுக்கு தகைசால் தலைமை ஆசிரியர் விருது கும்பகோணம் மாவட்ட கல்வி அலுவலர் திரு சுந்தர் அவர்களின் கரங்களால் வழங்கப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த 45 கவிஞர்களுக்கு கவிச்செம்மல் என்ற விருது திரு சேக்கிழார் அப்பாசாமி கவிமுகில் அன்பு வல்லி தங்கவேலர் மற்றும் கவி வித்தகர் விக்டர் தாஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

விழாவில் திருச்சி ஆய்வறிஞர் சங்கிலி சுப்பிரமணியம் தமிழக அரசு விருதாளர் கடவூர் மணிமாறன் திருச்சி முனைவர் சரஸ்வதி பாஸ்கரன், கிருஷ்ணகிரி மணி, மேலூர் முருகானந்தம், திருக்குறள் முற்றோதலைச் சிறப்பாக செய்துவரும் தமிழ்மகிழ்நன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

முன்னதாக விழாவிற்கு வருகை தந்தவர்களை தஞ்சைத்தமிழ் மன்ற நிறுவனர் செயலர் இராம.வேல்முருகன் அவர்கள் வரவேற்றார். நிறைவாக துணைத்தலைவர் தென்பரைத் தமிழன்பன் நன்றி கூறினார்.

# மனமிரங்கி அழுதேன் அன்று...

உன் எதிர்காலம் பற்றிய சிந்தையிலே.....
கரம்பிடித்து நீ என்கூடவே வந்தாய் மகனே.!

பல துன்பம் எனதாகிய போது
ஆறுதல் வார்த்தை தந்தாயே...
ஒரு தட்டில் சோறும் மறு தட்டில் அன்பும்
தந்த இனிய உறவே ...

என்னில் சரிபாதி என்றாயே ...
எனக்காய் இருப்பேன் என்று
ஒரு தைரியம் தந்தாயே ...
எனக்கு தாயாக, தந்தையாக,
தோழனாக உருவெடுத்தவனே...

இன்றோ ஏனோ என்னுள்
பல மாற்றம் காண செய்தாயே ...
எனை கலங்க வைக்கிறாய், விழி வழியே..

தாய் அன்பே உணராத எனக்கு
அன்பு மழை பொழிந்தவனே...
இன்றோ வன் சொல்லில் அனுதினமும்
அடைமழையாக பொழிந்து
தாய் அன்பை கொச்சை செய்கிறாயே ...

இது நியாயமா? உனக்காக
என் பிள்ளைகளையும் வெறுத்தேனே...
எனக்காக நீ தரும் பரிசு இதுவா?

நடிப்பதாக கூறுகிறாய்
பொய்யானாவள் என்கிறாய்...
இதயத்தை கலங்க செய்கிறாய்...
பல உண்மைகளையும் மறைக்கிறாய்...
விலகிடவும் செய்கிறாய்...
இன்று நான் யாரோ உனக்கு...

உன்னில் நான் இல்லை
காரணம் என்னுள் நீ பிறக்காத
ஒரு உயிர் என்பதாலா...

பெற்றால் தான் பிள்ளையா
மனதார அரவணைத்து
ஆதரவளித்தால் போதுமடா...

ரத்தத்தை பாலாக மட்டும் தான்
தரவில்லை அதனால்
என்னமோ என் மேல்
உனக்கு இல்லை பாசம் .....

இருந்தும் நான் என்றும்
உன்னை சுமப்பேன் ஆயுள் வரை
இதயத்தில் அன்பு மகனே...

என்னை கலங்க வைக்காதே...

உனக்குள் நான் இல்லை
என்று தெரிந்தும்
இறைவனை தொழுவேன் அனுதினமும்...
என் புது வரவாக வந்த உறவே
என்னை சிந்திக்க வைத்தாயே...

முர்ஷிதா ஹபீப்
அக்குறணை

# அழுவது சுகம்

அழுவது சுகமென்று அன்றொருநாள்
அவனும் சொல்லி வைத்தான்
அவனழுத மிச்சத்தை இறைவன்
எனக்குமிங்கே பங்கு வைத்தான்...

வெட்டுப்பட்டக் காயங்களும் தீயெனச்
சுட்டப் பொன்னிறப் புண்களும்
தொட்டுத்தொட்டுப் பார்த்தப் பின்னும்
தொட்டிலில் தூங்கிடவா ஏங்கிடுவேன்...

கட்டிலில் தலைசாய்க்க யாரெனக்கு
பட்டியலிட்டு மெத்தையினைக் காட்டுவார்
பந்தி கழிந்த இலைபோல்
மந்தி கையில் கிழிகிறேன்...

ஓட்டியெனை வந்த உயிருக்கும்
ஒட்டி வந்த உறவுக்கும்
கட்டி வந்த நிழலுக்கும்
கட்டுப்பட்டு கொட்டியது ஏராளம்...

தினம் மெட்டுக் கட்டி
மெல்ல நாடுது ஞானம்
மறைத்து வைத்துப் போனாலும்
மறந்துதான் நான் போவேனா...

போடா... அழுதழுது விடிந்தாலும்
அழுது அழுகவே சுகம்
அழுததால் வந்ததடா அத்தனையும்
கேளடா... பாரினில் மிச்சமேதடா...

விசித்திரக்கவி

# மண்ணின் வாசம்

மண்ணது வாசம் - என்
புன்னகை தேசம்
புழுதிகள் கூட
புன்னகை செய்யும்
என்னது பாடல்
என்னது என்று கேட்டு
என் கொண்டைச் சேவல்
விசுவநாதன் குரலில்
தான் பாடும்

புல்லின் இசையில்
பூக்களும் கூட
மெட்டினை அவிழ்த்து
புன்னகைக்கும்

செண்பகம் ஒன்று
வேலியிலிருந்து என்னை
ஏனோ பார்த்திருக்கும்

இனம் புரியாத
தென்றல் வந்து
இலைகளோடு சலசலக்கும்

எங்கோ கேட்கும்
மரண ஓலம்
காற்றில் மிதக்கும்
சருகும் சேர்ந்தே ஒலிக்கும்

சி . மேகவர்னன்
( மார்க்கோணி ) கனடா

# என்மகளின் பொன்கை எழுத்து!

வெள்ளைத்தாள் மேலென்ன
　　வெண்ணிலாச் சில்லுகளா?
பிள்ளைவான் மீன்களின்
　　பிஞ்சுகளா? — கொள்ளையிடும்
பொன்வைரக் கட்டிகளா?
　　பூந்தமிழ்த்தாய் மெட்டிகளா?
என்மகளின் பொன்கை
　　எழுத்து!

ஒவ்வோர் எழுத்தும்ஓர்
　　ஓவியம்; கண்களைக்
கவ்வும் வரிகள்நல்
　　காவியம்; — செவ்வையாய்ச்
செய்கின்ற பத்திகள்
　　செந்தமிழ்த் தேர்வலம்;
கைகளில்வைத் துள்ளாள்
　　கவின்!

குண்டுகுண்டாய் உள்ளதே!
　　கோகினூர் வைரமா?
சுண்டியிழுக் கும்மல்லித்
　　தோரணமா? — கண்டின்
அழகிருப்பா? வண்டின்
　　அணிவகுப்பா? எங்கே
பழகிருப்பாள் வித்தை?
　　பகர்!

உன்போல் அழகாய்
　　உலகில் இருப்பதெல்லாம்
மென்கை எழுத்தன்றி
　　வேறில்லை; — சின்னநிலாத்
தோற்றம் அழகென்று
　　சொக்காதே; மாதமெலாம்
மாற்றம் அடையும்
　　மதி!

தட்டெழுத்து ஆகும்
　　தவிடுபொடி; முந்தைய
வட்டெழுத்து வந்து
　　வணங்குமடி; — மெட்டெடுத்துப்
பாடும் இசைக்குறிப்பா?
　　பாயும் நதிவிரிப்பா?
யாதுன் திருக்கை
　　எழுத்து!?

தமிழுடன்...

**அகரம் அமுதன்**



# உன்னால் தான் எல்லாமும்!

தித்திக்கும் தேனும் தெவிட்டிடக்கூடும்!
கொட்டிடும் மழையும் பொசுங்கியேபோகும்!
மழலை மொழியும் புரிந்திடக்கூடும்!
கூவும் குயிலின் பல்லவி விளங்கும்
ஆடும் மயிலின் நளினமும் புரியும் !

இலைகள் என்னோடு இலக்கியம் பேசும்
மேகங்கள் குடையாய் கைகோர்த்திட
சிப்பிகள் எந்தன் கண்ணீர் சுமந்து
முத்தென மொத்தமாய் என் கரம் சேரும்!

நீ எந்தன் அருகில் நீங்கா திருப்பின்
நிதர்சன உண்மைகள் நிலை குலைந்து
என் ஏழாம் அறிவின் கதவுகள் திறந்து
மறைஞானம் அறியும் ஆற்றல் பெற்று
அதுவாய் பூக்கும்—உன் னன்பு
காதலின் மகிமையால்!

உன் காதல் என்னுள் தந்த
புது உணர்வின் மாயையோடு
இயற்கைக்கு மாறாய் எல்லாம் ஓட
அனைத்துக்கும் நீ தான் காரணமானாய்

ருஷ்தா லுக்மான்






புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்.
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்.